## சங்கத்தின் வரலாறும் சாதனையும்

**1961–1967 –** பேராசிரியர் A. பழனிசாமி – உபதலைவர். திரு. K.M. சென்னியப்பன் செயலாளர். அவசர காலங்களில் சென்னையில் உள்ள கொங்கு மக்கள் ஒருவருக்கொருவர் உதவ வேண்டியதின் அவசியத்தை உணர்ந்து, தலைமைச் செயலகத்தில் பணியாற்றிய திருவாளர்கள் கே.ஏ சுப்பிரமணியம், சி.கே. ராமசாமி, டி.பி. சதாசிவம், கே.ஏ. தேவியப்பன், சி.ஈஸ்வரமூர்த்தி, பழனிசாமி ஆகியோரை வைத்து ஆரம்பிக்கப்பட்டது. அங்குள்ள தர்பார் விடுதியிலும், மெரீனா கடற்கரையிலும் சந்திப்புகள் நடந்தன.

**1968–1977 –** அருட் செல்வர் திரு. N. மகாலிங்கம் தலைவராகவும், திரு. K.M. சென்னியப்பன் / Dr. K.K. லட்சுமணன் செயலாளராகவும் இருந்தார்கள். திரு. தேவண்ணன் பொருளாளராக இருந்தார். திருவல்லிக்கேணி பெரிய தெருவில் திரு. கே.ஆர் மாரப்பன் அவர்களுக்குச் சொந்தமான டுடோரியல் கல்லூரியில் சந்திப்புகள் நடந்தன.

**1978–1982 –** திரு. R. காந்தி, திரு, K. பழனியப்பன் துணைத் தலைவர்களாகவும், திரு. K.S. கோவிந்தசாமி அவர்கள் செயலாளராகவும் இருந்தார்கள். நட்சத்திர கலை விழா மூலமும், வெளியூர் வசூல் மூலமாகவும் கொங்கு நாடு இல்லத்திற்கு சொந்தமாக இடம் வாங்கப்பட்டது. செய்தி மடல் ஆரம்பிக்கப்பட்டது.

**1983–1992 –** திரு. C. முத்துசாமி, I.A.S., திரு. A. வேலுசாமி, திரு. K. பொன்னுசாமி, தலைவர்களாகவும் திரு. K.S.K. வேலுமணி, திரு, T.K. சுப்பிரமணியன் செயலாளராகவும் இருந்தார்கள். பழைய கட்டிடத்தில் மாணவர்கள் தங்க வசதி செய்து கொடுக்கப்பட்டது. மாதாந்திர கூட்டங்கள் தவறாமல் நடந்தன. கொங்கு நாடு இல்லத்தின் பூமி பூசை செய்யப்பட்டது.

**1993–1996 –** திரு. S. அருணாசலம், திரு, P. தேவராஜன் தலைவர்களாகவும், திரு. K. பாலசுப்பிரமணியன் செயலாளராகவும் இருந்தார்கள்.

– கொங்கு நாடு இல்லம் கட்டி முடிக்கப்பட்டது.

– தீரன் சின்னமலைக்கு சிலை அமைக்கப்பட்டது.

– சாதனையாளர் விருது ஆரம்பிக்கப்பட்டது.

– **10, 12**ம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெறும் மூவருக்கு பரிசு. ஆண்டுதோறும் வழங்க முடிவு செய்யப்பட்டது.

**1997–2000** – திரு. K.R. அப்பாவு தலைவராகவும், திரு. K.C. காளியண்ணன் செயலாளராகவும் செயல்பட்டார்கள்.

– வெள்ளி விழா இல்லத்தின் இடம் வாங்கப்பட்டது.

– சங்கத்தில் முதன் முதலாக தேர்தல் வந்தபோது செவ்வனே நடத்தியது.

– சங்கத்தின் வெளியூர் உறுப்பினர்களுக்கும் ஓட்டுரிமை அளித்தது.

– கொங்கு நாடு இல்லத்தைத் திறம்பட நிர்வகித்தது.

– குடும்ப விழாக்களைத் திறம்பட நடத்தியது.

– செய்திமடலைப் பொலிவுடன் தவறாமல் மாதந்தோறும் வெளியிட்டது.

**2001** முதல் இன்று வரை

திரு. N. போவிந்தசாமி, திரு. K.C. காளியண்ணன்
தலைவராகவும்,
திரு. E.R. ஈஸ்வரன் செயலாளராகவும் பணியாற்றினார்கள்.

– கொங்கு மாமணி விருது ஆரம்பிக்கப்பட்டது.

– “ஆனந்தமாலை”, “சந்தோஷ மாலை” கலை நிகழ்ச்சிகள் மூலம் 35 இலட்சம் ரூபாய் நன்கொடை திரட்டியது.

– வெள்ளி விழா இல்லம் கட்டி முடிக்கப்பட்டது.

– 8 மாணவ மாணவியருக்கு கொங்கு தாளாளர்கள் நடத்தும் பொறியியல் கல்லூரிகளில் இலவச இடம்.

– வசதியற்ற மாணவ மாணவியருக்கு தலா ரூ. 10,000/– என 10 பேருக்கு வழங்கியது.

– தீரன் சின்ன மலைக்கு பிறந்த நாள், நினைவு நாள் விழா எடுத்தது.


– இணைய தளம் துவக்கப்பட்டது.

– ஈரோட்டில் “மணமக்கள்” தேர்வு விழா” நடத்தியது.

– சங்கத்தின்பால் நாட்டம் இல்லாமல் இருந்த பல சமுதாயப் பெரியவர்களைச் சங்கச் செயல்பாடுகளின் மூலம் ஈடுபாடு கொள்ள ஈர்த்தது.

## முன்னாள் தலைவர்கள் – செயலாளர்கள்

1. திரு. K.M. சென்னியப்பன்
2. அருட்செல்வர் டாக்டர் N. மகாலிங்கம்
3. பேராசிரியர் K.K. லட்சுமணன்
4. கொங்கு மாமணி R. காந்தி
5. திரு. K. பழனியப்பன்
6. திரு. K.S. கோவிந்தசாமி
7. திரு. C. முத்துசாமி – I.A.S., (ஓய்வு)
8. Dr. K.S.K. வேலுமணி
9. Dr. M.A வேலுச்சாமி
10. திரு. T.K. சுப்பிரமணியன்
11. திரு. K. பொன்னுசாமி
12. திரு. S. அருணாசலம்
13. திரு. P. தேவராஜன்
14. திரு. K. பாலசுப்பிரமணியன்
15. திரு. K.R. அப்பாவு
16. திரு. நல்ல கோவிந்தசாமி
17. திரு. K.C. காளியண்ணன்
18. திரு. E.R. ஈஸ்வரன்



# திரு. K.M. சென்னியப்பன், B.A.,

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத் தோற்றமும் வளர்ச்சியும்

எந்த ஒரு பொது நல ஸ்தாபனத்தைத் துவங்குவதற்கு முன்னோடியாக, எதிர் பாராத சம்பவங்கள் நிகழ்ந்து அதில் ஈடுபட்டோர் மனத்தில் ஓர் உத்வேகத்தையும் வைராக்கியத்தையும் தூண்டுகின்றன.

இவ்விதம் 1958–59ம் ஆண்டில் மேட்டூரை அடுத்த குளத்தூர் வாசியான திரு.K. பழனிச்சாமி அவர்கள் சென்னை தலைமைச் செயலக நிதித்துறையில் பணி புரிந்தார். அப்போது சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் வசித்து வந்த அவரது குழந்தைக்குப் பெரியம்மை தாக்கி மரணம் அடைந்தது. அந்தத் துயரச் சம்பவத்தை அண்டை வீட்டு நண்பர்கள் ஒருவருமே கண்டு கொள்ளவில்லை. தற்செயலாக ஊரிலிருந்து வந்திருந்த உறவினர் உதவியுடன் குழந்தையை அடக்கம் செய்ய நேர்ந்தது. இந்தச் செய்தி கேட்டு நான் மிக அதிர்ச்சி அடைந்தேன்.

அப்போது நான் சென்னை எழும்பூரில் ஒரு குடியிருப்பு வளாகத்தில் வசித்து வந்தேன். அச்சமயம் சென்னை விமான நிலையத்தில் பணி புரிந்த ஒரு நண்பரின் தங்கை திடீரென மரணமடைந்தார். அதுவரை நெருங்கிய நண்பர்களாக அந்த வளாகத்தில் இருந்த ஒருவர் கூட அந்தச் சம்பவத்தில் கலந்து கொள்ளவில்லை. நான் ஒருவன்தான் ஈமச் சடங்குகள் நடைபெற உதவினேன்.

மேற்குறிப்பிட்ட இரு சம்பவங்களும் என்னை நிலைகுலையச் செய்தன. அப்போதுதான் சென்னை நண்பர்கள் ஒருவரும் இவை போன்ற துயரச் சம்பவங்களில் உதவ மாட்டார்கள், நமது இனத்தவர்களை ஒன்று சேர்த்து ஒரு

சங்கம் அமைத்தால்தான் நாம் ஆபத்துக் காலங்களில் கண்ணியமாகவும், தைரியமாகவும் வாழ முடியும் என்ற தீவிரம் ஏற்பட்டது.

இதை முன்னிட்டு அன்று தலைமைச் செயலகத்தில் பணிபுரிந்த நம் இனத்தைச் சேர்ந்த சட்டசபை அலுவலர் திரு. C.K. ராமசாமி உட்பட 6 பேரை அணுகி எனது கருத்தைத் தெரிவித்தேன். அவர்கள் எல்லோரும் அதை ஆர்வத்துடன் வரவேற்றனர். இதன் பலனாக நாங்கள் வாரம் ஒரு முறை தலைமைச் செயலகத்தில் அன்று இயங்கி வந்த தர்பார் ஓட்டலில் கூடிப் பழகிய போது எங்களுக்குள் நட்பும் உறவும் மலர்ந்தன.

அதன் பின்னர் நாங்கள் எல்லோரும் குடும்பங்களுடன் ஒன்று சேர்ந்து பழகினால்தான் உண்மையான நெருங்கிய உறவு ஏற்படும் எனக் கருதி ஒரு பொங்கல் பண்டிகையின் போது அவரவர் குடும்பத்தில் உள்ள அனைவரும் சென்னை மெரீனா கடற்கரையில் ஒன்று கூடி அவரவர் கொணர்ந்த பலகாரங்களை உண்டு மகிழ்ந்தோம். பெண்கள் ஒன்று சேர்ந்து குடும்ப விஷயங்களைப் பேசிய போது ஏதோ ஒரு வகையில் எல்லோரும் உறவினர் என்ற நிலை உருவாகியது. அறிமுகம் இல்லாதவர்களாகக் கூடி, உறவினராக விடை பெற்றனர்! சங்கம் அமைப்பதில் அதிக தீவிரம் காட்டினர். இதுவே நமது முதல் குடும்ப விழா எனலாம்.

அன்று புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பது அவ்வளவு சுலபமானது அல்ல. நான் எனது துணைவியாருடன் நம்மவர் இல்லங்களுக்குச் சென்று சங்கம் அமைப்பது பற்றிப் பேசினால் முதல் முறை எந்த வரவேற்பும் இராது. இரண்டாவது முறை சற்று அக்கறை தோன்றும். மூன்றாவது முறைதான் சிலர் அங்கத்தினர் ஆகினர்.

ஒரு கல்லூரி முதல்வர் மற்றும் நமது இனத் தலைவர்கள் சிலரை அணுகிச் சங்கம் அமைப்பது பற்றிப் பேசியபோது அவர்கள் சங்கம் ஏன் தேவையில்லை என்றும், அரசு ஊழியனாகிய நான் இது போன்ற விஷயங்களில் ஈடுபடாமல் எனது பதவியில் அக்கறை காட்டி மேல் நிலைக்கு வர வேண்டும் என புத்திமதி சொல்லியவர்களும் உண்டு!

1960–ம் ஆண்டு வாக்கில் அமரர்கள் கோவை செழியன், சட்டக் கல்லூரிப் பேராசிரியர் திரு. A. பழனிச்சாமி மற்றும் வழக்கறிஞர் திரு. R. காந்தி போன்றவர்களைச் சந்திக்க நேர்ந்தது. அவர்களுடன் உரையாடியதில் அப்போது "கொங்கு வேளாளக் கவுண்டர் சங்கம்" என்ற அமைப்பு ஒன்று பெயரளவில் செயலற்று இருந்தது தெரிய வந்தது. ஆகையால் அவர்கள் எங்களுடன் சேர விரும்பினர்.

இந்த நிலையில் தலைமைச் செயலகத்திற்கு வெளியில் ஓர் இடத்தைத் தேர்வு செய்து அங்கு கூடுவது அவசியமாயிற்று. அப்போது திருவல்லிக்கேணியில் ஏற்கனவே அறிமுகமான "P.T.C. மாரா நர்சரிப் பள்ளி" முதல்வர் திரு. மாரப்பனைச் சந்தித்து விஷயத்தைச் சொல்லிய போது, அவர் நீங்கள் எனது பள்ளிக்கு வருவதே எனக்குப் பெருமை. தவிர சங்கத்தின் மாதாந்திரக் கூட்டங்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறுவதால் எனக்கு எவ்வித இடையூறும் இல்லை என மனமுவந்து இடமளித்ததின் பேரில் 1960 முதல் 1968 வரை சுமார் 8 ஆண்டுகள் P.T.C., மாரா நர்சரி பள்ளியில் சங்கம் செயல்பட்டது. இங்குதான் சங்க விதிகள் வரையறுக்கப்பட்டன. அன்றைய சங்க உறுப்பினர்களில் ரெம்பாலோர் அரசு அலுவலர்கள். அவர்கள் ஓர் இனச் சங்கத்தில் சேர்வது சட்ட விரோதமாகக் கருதப்படலாம் என்ற ஐயப்பாடு நிலவியது. இதை நீக்கும் வகையில் நீண்ட நாள் விவாதத்திற்குப் பின், அவர்களைப் பாதிக்காத வகையில் "கொங்கு நண்பர்கள் சங்கம்" எனப் பெயரிடப்பட்டது. அதன் பின்னர் அன்று நமது இன அமைச்சரை சங்கத் தலைமையை ஏற்கும்படி வேண்டிய போது அவர் தயக்கம் காட்டியதால், பேராசிரியர் திரு. A. பழனிசாமியை உபதலைவராகக் கொண்டு சங்கம் சில ஆண்டுகள் செயல்பட்டது. 1968–ஆம் ஆண்டு அருட்செல்வர் திரு. N. மகாலிங்கம் அவர்கள் சங்கத் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

இந்தக் காலகட்டத்தில்தான் ஆந்திர மாநில எல்லையிலுள்ள "கோனார் நீர்வீழ்ச்சிக்கு" ஒரு சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டது. இரண்டு பேருந்துகளை வாடகைக்கு எடுத்து சங்க உறுப்பினர்கள் தமது குடும்பத்தாருடன் அவற்றில் பிரயாணம் செய்தனர். அப்போது இலந்தை வடைகளைச் சுவைத்துக் கொண்டு கிராமியப் பாடல்களைப் பாடி மகிழ்ந்ததை மறக்க முடியாது. நீர்வீழ்ச்சியை

அடைந்ததும் பெண்கள் அங்கேயே சமையல் செய்ததும், இளைஞர்கள் நீர்வீழ்ச்சிக் குன்றின் மேல் ஏறியும், இறங்கியும் செய்த சாகசங்களைக் கண்டு மகிழ்ந்தோம்.

இதை அடுத்து வந்த பொங்கல் பண்டிகையின் போது உறுப்பினர்கள் குடும்பங்களுடன் மெரீனா கடற்கரையில் கூடிய போது, திரு. R. காந்தியின் தம்பி, நகைச்சுவை நாயகர் திரு. R. ராஜேந்திரன் அங்கு குழுமிய எல்லோருக்கும் பொரி கடலை வழங்கியதும், அவை கடற்காற்றில் பறந்ததால், ஒருவரும் அதைச் சாப்பிட முடியாமல் சிரித்துச் சிரித்து வயிறு புடைத்ததும் இன்றும் மனதில் பசுமையாக உள்ளது.

1973–ம் ஆண்டு வாக்கில் சங்க உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்ததால் மாதாந்திரக் கூட்டத்தை நடத்த “P.T.C. நர்சரிப் பள்ளியை விடப் பெரிய இடம் தேவைப்பட்டது. அன்றைய பழனி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. A. சேனாபதிக் கவுண்டரை நாடிய போது, அவர் மயிலையில் இருந்த தமது “பட்டக்காரர் நிலையத்தை” சங்கக் கூட்டங்கள் நடத்த மனமுவந்து அளித்தார். அங்குக் கூட்டங்கள் நடந்த போதுதான், உறுப்பினர்களை உற்சாகப்படுத்தும் வகையில் “சிட் பண்டு” நடைபெற்றது. மேலும் சங்கத்தை வலுப்படுத்தும் பொருட்டு “ஊக்குவிக்கும் குழு” உருவாகியது. அதில் பெரும் பங்கு வகித்தவர் அமரர் திரு. R. ராஜேந்திரன் ஆவார்.

இந்தக் காலக் கட்டத்தில் குடும்ப விழாக்கள், திருமண வரவேற்புகள், விளையாட்டுப் போட்டிகள் எல்லாமே தேனாம்பேட்டையில் உள்ள “உட்லேண்ட்ஸ்” ஓட்டலில், பேராசிரியர் திரு. A. பழனிசாமிக்கு ஓட்டல் நிர்வாகத்துடன் இருந்த செல்வாக்கால், குறைந்த செலவில் நடைபெற்றன.

இங்குதான் முதன் முறையாக திரு. K. பொன்னுசாமி அவர்கள் தொலைக் காட்சிப் பெட்டிகளை அறிமுகப்படுத்தியதும், அவற்றைக் கண்டு மகிழ்ந்ததும் மறக்க முடியாதது.

இதே காலத்தில்தான் எனது கல்லூரி நண்பர் அமரர் திரு. ஆறுமுகம் (காவல்துறை மாவட்டக் கண்காணிப்பாளர்) மகளுக்கும், சேலம் மாவட்டம் சேர்மேன் கந்தசாமிக் கவுண்டர் மகன் வழக்கறிஞர் திரு. K. துரைசாமிக்கும் திருமணம்

நடந்தது. இந்த இரண்டு குடும்பங்களுக்கும் நமது சங்கத்தின் மூலம் ஏற்பட்ட நட்பால்தான் இத்திருமணம் ஏற்பாடு ஆகியது. இந்த நிகழ்ச்சி சங்கத்தில் "திருமண மையம்" அமைக்கத் தூண்டியது எனலாம்.


சங்கம் பட்டக்காரர் நிலையத்தில் செயல்பட்டபோது, அரசுக் கல்லூரி கணிதப் பேராசிரியராக இருந்த திரு. ராமசாமி அவர்கள் ஒரு குறுகிய காலம் சங்கச் செயலராகப் பணியாற்றினார். ஆனால் அவர் சங்கக் கூட்டங்களுக்கு முறையாக வருவதும் இல்லை. சங்கக் குறிப்பேடுகளைத் தருவதும் இல்லை. இது சம்பந்தமாக நானும் திரு. காந்தியும் அவர் வீட்டிற்குச் சென்று கேட்ட போது அவர் குறிப்பேடுகளை அட்டாலியில் இருந்து எடுத்ததும் அவற்றில் ஒன்று சௌ்ளறித்திருந்ததும் தெரிந்தது. அவர் வகித்த பதவிக்கேற்ப தமது மகன்களுக்கு ஆல்பா, பீட்டா எனப் பெயர் சூட்டியிருந்தார்!

இக்காலத்தில்தான் வழக்கறிஞர்கள் திரு. R. காந்தி மற்றும் திரு. முத்துக் கிருஷ்ணனுடைய முயற்சியால் கொங்கு மாணவர் சங்கம் நிறுவப்பட்டது. இதில் சென்னையில் அனைத்துக் கல்லூரிகளிலும் உள்ள நமது இன மாணவர்கள் சேர்ந்தனர். இந்தக் கிளைச் சங்கத்தின் செயல்பாடுகள் அவ்வப்போது உள்ள மாணவர்களின் ஆர்வத்தைப் பொறுத்து வளர்வதும் தேய்வதுமாக இருந்தன.

இந்தக் காலகட்டத்தில் நமது சங்கத்திற்கென்று சொந்தக் கட்டிடம் தேவை என உணரப்பட்டது. அதன் பொருட்டு சங்க உறுப்பினர்களிடம் நன்கொடை வசூல் செய்யப்பட்டது. மற்றும் கோவை, ஈரோடு போன்ற நகரங்களில் கட்டிட நிதியும் திரட்டப்பட்டது. அவற்றைக் கொண்டு இராயப்பேட்டையில் உள்ள கோகலே பவன் மாளிகையில் ஒரு தளம் வாங்கப்பட்டது. அதில் எதிர்பாராத சில சிக்கல்கள் ஏற்பட்டதால் அதை விற்றும் மேற்கொண்டு நன்கொடை வசூல் செய்தும் இராயப்பேட்டை அம்மையப்பன் தெருவில் ஓர் இடம் வாங்கி அதில் "கொங்கு நாடு இல்லம்" உருவாக்கப்பட்டதும், அந்த ஆண்டு "வெள்ளி விழா இல்லம்" கட்டப்பட்டதும், யாவரும் அறிந்ததே.

சங்கம் ஆரம்ப காலத்தில் நமது இனத்தைச் சேர்ந்த சென்னை மற்றும் அதன் புறநகர் வாசிகள் நலனுக்காகத்தான் தொடங்கப்பட்டது. சில ஆண்டுகளுக்குப்

பின்னர் பிற மாவட்டங்களில் உள்ள நமது இனத்தோர் இச்சங்கத்தில் உறுப்பினராக ஆர்வமும் அக்கறையும் காட்டினர். இதன் அடிப்படையில் சங்கச் செயல்பாடுகளின் பலனை நமது இனத்தவர் அனைவரும் அடையும் பொருட்டும், அதே சமயம், சங்கமும் வளர வேண்டும் என்ற கருத்து உருவாகியது. இதை நிறைவேற்றும் வகையில் சங்க விதிகள் திருத்தப்பட்டன. இதன் காரணமாகவும் ஆண்டவன் அருளாலும் இன்று நமது சங்கம் 2710 ஆயுள் உறுப்பினர்களைக் கொண்ட ஓர் ஆல மரமாக வளர்ந்து காட்சி அளிப்பது கண்டு நமது இனமே பெருமைப்படுகிறது.




## அருட்செல்வர் டாக்டர் N. மகாலிங்கம்

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற மாமனிதர், அருட்செல்வர் ஐயா அவர்களைத் தெரியாதவர்கள் யாரும் இருக்கமுடியாது. கொங்கு வேளாளர் சமூகத்திற்கு மட்டுமல்லாமல் பாரத நாட்டுக்கே பெருமை சேர்ந்த பண்பாளர். தொழில், வேளாண்மை, வியாபாரம், ஆன்மீகம், இலக்கியம், இசை, நாட்டியம், விஞ்ஞானம், விளையாட்டு, சைவ உணவு போன்ற அனைத்துத் துறைகளையும் போற்றி வளர்த்து வரும் பண்பாளர்.

ஐயா அவர்கள் 1968 ஆம் ஆண்டு முதல் 1977 ஆண்டுவரை நமது சங்கத்தின் தலைவராக இருந்து பெருமைப்படுத்தியுள்ளார்கள். அவர்கள் தலைவராக இருந்த போது திரு. K.M. சென்னியப்பன் அவர்களும், Dr. K.K. லட்சுமணன் அவர்களும் செயலாளர்களாக இருந்து பணியாற்றினார்கள். தற்பொழுது கொங்கு நாடு அறக்கட்டளையின் தலைவராக இருந்து நமது சமுதாய மக்களை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஊரிலும் பாராட்டுக் கூட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

பொள்ளாச்சியில் சுமார் 15க்கும் மேற்பட்ட கல்வி நிலையங்களையும், சக்தி குழுமம், ABT போன்ற 20க்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்களையும் மிகச் சிறந்த முறையில் நடத்தி ஆயிரக்கணக்கான கொங்கு மக்களுக்குக் கல்வி பயில வாய்ப்பும், வேலை வாய்ப்பும் கொடுக்கும், ஆயிரம் பிறைகாணும் அருட்செல்வர் ஐயா அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என சென்னை கொங்கு நண்பர்கள் சங்க அனைத்துக் குடும்பங்களின் சார்பாகவும், கோடிக்கணக்கான கொங்குச் சமுதாய மக்கள் சார்பாகவும் பிரார்த்திக்கிறோம்.



# பேராசிரியர். Dr.K.K. லட்சுமணன்

1973 முதல் 1977 வரை சங்கத்தின் செயலாளராக பணியாற்றிய டாக்டர். K.K. லட்சுமணன் அவர்கள் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் வளர்ச்சிக்காக அரும்பணி ஆற்றினார்கள்.

கல்வித்துறை, அரசுப்பணிகளில் வேலை செய்யும் பலரை ஒன்று சேர்த்து சங்கத்தைச் சிறப்பாக நடத்தி செயல்பட்டார். சங்கத்தின் வளர்ச்சிக்காக அன்னார் அவர்கள் ஆற்றிய நற்பணிகளை அன்புடன் நினைவு கூர கடமைப்பட்டுள்ளோம்.



## மூத்த வழக்கறிஞர் கொங்குமாமணி R. காந்தி

கொங்கு நண்பர்கள் சங்கத்தில் என்னை இணைத்துக்கொண்ட ஆண்டு எனக்கு நினைவில் இருக்கிறது. **1963–**ம் ஆண்டு மும்பையில் என்னுடைய சட்டப்படிப்பை முடித்துக் கொண்டு சென்னையிலே வழக்கறிஞர் தொழில் செய்ய நான் வந்திருந்த நேரம். எனது தமக்கையின் கணவர் அமரர் திரு. எம்.சி. சோமசுந்தரம் அவர்கள் பொதுப்பணித்துறையில் பொறியாளராக இருந்தார்கள். அந்தக் காலகட்டத்தில்தான் அமரர் கோவை செழியன், அமரர் பேராசிரியர் ஏ. பழனிசாமி, அமரர் மாரப்பன், திரு. பெருமாள், திரு. தேவணன், பைலட் ஏ. பழனிசாமி, கே.எம். சென்னியப்பன், எம்.ஏ., வேலுசாமி, நல்லுசாமி, சுப்பையா, டி.கே. மணியன் மற்றும் சிலரோடு மாதம் ஒரு முறை திருவல்லிக்கேணியில் பெரிய தெருவில் அமைந்திருந்த பார்த்தசாரதி டுட்டோரியல் கல்லூரியில் கூட்டம் நடக்கும்.

பல ஆண்டுகள் தலைவர் பதவி காலியாக வைத்து பேராசிரியர்பழனிசாமி அவர்களைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து கூட்டங்கள் நடந்து வந்தன. மிகவும் அன்போடும், பாசத்தோடும் மாமன், மாப்பிள்ளை என்று கூட்டம் மிக இனிமையாக நடக்கும். அக்காலகட்டத்தில் நமது இன மக்கள் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவில் சென்னை மாநகரில் இருந்தார்கள். யாருக்காயினும் திருமணம் நடந்தால் மணமக்களை அழைத்து வாழ்த்தி மகிழ்வது ஒரு பழக்கம்.

சில ஆண்டுகளுக்குப் பின்னால் திரு. என். மகாலிங்கம் அவர்களை தலைவராக ஏற்று சங்கம் விரிவடைய ஆரம்பித்தது. கே.எம். சென்னியப்பன் அவர்கள் செயலாளராகவும், பின்னால் நான் சில ஆண்டுகள் செயலாளராகவும் இருந்தேன். அப்பொழுதெல்லாம் மாதம் ரூ. 5 தான் சந்தாவாக

இருந்தது. அதை வசூலிப்பதற்கு நான் பல வீடுகளுக்குச் சென்று வந்திருக்கிறேன். அதற்குப்பின்னால் நான் சில ஆண்டுகள் தலைவர் பொறுப்பை ஏற்று நடத்தி வந்தேன்.

அக் கால கட்டத்தில் நண்பர் திரு. தாமோதரன் அவர்களுடைய முழு முயற்சியால் கொங்கு மாணவர் சங்கத்தை உருவாக்கினோம். எனது இல்லத்திலேயே பல கூட்டங்கள் நடந்திருக்கின்றன. அமெரிக்காவிலிருந்து தமிழகம் வந்து 'கொங்கு இன மக்களின் வாழ்க்கையும், அவர்களது பழக்கவழக்கங்கள்' என்று ஒரு பெரும் ஆராய்ச்சியை திருமதி பிருந்தா பெக் என்றும் அம்மையார் மேற்கொண்டு பல கிராமங்களுக்குச் சென்று கிராம மக்களிடையே வாழ்ந்து ஒரு மிகச் சிறந்த ஆராய்ச்சி நூலை வெளியிட்டிருந்தார்கள். நூற்றுக்கணக்கான கொங்கு இளைஞர்கள் அவருடைய பேச்சைச் கேட்டு மகிழ்ந்தார்கள். கொங்கு வண்ணான், கொங்குப் பண்டாரம், கொங்கு நாவிதன் என்று இனத்திற்கென்றே தொழில் நடத்தி வந்த கூட்டத்தைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்கள்.

பல்வேறு அரசியல் தலைவர்கள், அறிஞர் பெருமக்களை அழைத்து நமது அங்கத்தினர்களிடையே பேச வைத்து அவர்களை மகிழ்வித்தது என் நினைவில் இருக்கிறது. சிறிது காலத்திற்குப் பின் மறைந்த சங்கரனான் பழைய பட்டக்காரர், சேனாபதி கவுண்டர் அவர்களது மயிலை வடக்கு மாசி வீதியில் இருந்த இல்லத்தில் கூட்டங்கள் நடந்தன. ஆண்டுக்கு இரண்டுமுறை ராயப்பேட்டை உட்லண்ட்ஸ் ஹோட்டலில்தான் சிற்றுண்டியோடு விழா நடப்பதுண்டு. அதற்குப் பின்னால் பாம்குரோவ் ஹோட்டலில் கூட்டங்கள் நடந்துள்ளன. அந்தக் காலகட்டத்தில் வருமானத்திற்கும் செலவிற்கும் சரியாக இருக்கும். அல்லது ஓரிரு நண்பர்கள் ரூபாய். 200/– 300/– என்று பணத்தைப் போட்டு நஷ்டத்தை ஈடு கட்டுவோம். அப்படியிருந்தும் சிறப்பாக நடந்தது. பதவிகளுக்குப் போட்டியே இருந்ததில்லை. கட்டாயப்படுத்தி பதவிகளில் அமர்த்துவதுதான் வழக்கம். அப்போது அது மட்டும் தான் தேவையாக இருந்தது.

ஆனால் கடந்த 20 ஆண்டுகளில் கொங்கு நண்பர்கள் சங்கம் பிரமிக்கவைக்கும் வகையில் வளர்ச்சி அடைந்துள்ளது. அதற்காக உழைத்த

அனைத்து இளைஞர்களையும் நான் மிக மிக மனமுவந்து பாராட்டுகிறேன். கடந்த 20 ஆண்டுகளாக வந்த அத்துணை தலைவர்களும், பொறுப்பாளர்களும் மிகச் சிறப்பாக செயல்பட்டு இன்று ஒரு பெரும் அமைப்பாக உருவாக்கி இருக்கிறார்கள். நான் தலைவராக இருந்த காலகட்டத்தில் தான் கொங்கு நாடு அறக்கட்டளை என்ற ஒன்றை உருவாக்கி திரு. என்.மகாலிங்கம் அவர்களைத் தலைவராகவும், திரு. சேனாபதிகவுண்டர் அவர்களைத் துணைத் தலைவராகவும் இருந்து பல நல்ல காரியங்களைச் சேவை மனப்பாங்கோடு செய்ய ஆரம்பித்தோம்.

பல கூட்டங்களில் மற்ற இன மக்களும் கலந்து கொண்டு நம்மைப் பாராட்டி மகிழ்ந்திருக்கிறார்கள். வேற்று இன மக்களோடு எந்தவிதமான வெறுப்போ, காழ்ப்போ இல்லாமல் ஜாதி வெறி இல்லாமல் ஓர் உன்னதமான நண்பர்கள் சங்கமாகவே இருந்து வந்திருக்கிறது. இது சென்னையிலே வாழும் கொங்கு இன மக்களுக்கு இடர் வரும்போது, வீட்டிலே ஒரு துயரம் நடக்கும்போது, அல்லது நல்ல காரியம் நடக்கும் போது எல்லோரும் கலந்து கொண்டு தோள் கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு தான் இந்த அமைப்பு நடந்து வந்திருக்கிறது. இன்றும் நம் மக்களிடத்தில் மேல் ஓங்கி இருப்பது எல்லோரும் ஓரினம் என்கின்ற ஒரு சிறந்த பண்பாடு நின்று நிலவுவதை நாம் அறிய முடிகிறது.

கொங்கு நாடு மக்கள் சேலம், நாமக்கல், திருச்செங்கோடு, பள்ளிபாளையம், ஈரோடு, பெருந்துறை, சென்னிமலை, திருப்பூர், கோவை, நாமக்கல், திருச்செங்கோடு, பொள்ளாச்சி போன்ற நகரங்களில் மிகச் சிறப்பாகவும், செழிப்பாகவும் தொழில் செய்து வளத்தோடு வாழ்கிறார்கள். கல்விக்குக் கொங்கு இன மக்கள் கொடுக்கும் முன்னுரிமை மற்றவர்களிடம் இருக்கிறதா என்பது சந்தேகமாக இருக்கிறது. வரும் ஆண்டுகளில் கொங்குநாடு மிகச் சிறந்த ஒரு வலிமையான, கல்வியிலும், பொருளாதாரத்திலும், நாகரீகத்திலும், கலாச்சாரத்திலும், மிக ஓங்கி இருக்கும் என்பதில் எந்த ஐயமும் இருக்க முடியாது.



# திரு. K. பழனியப்பன்


**1982– 84** ஆண்டுகளில் நமது சங்கத்தில் உதவித் தலைவராக இருந்து அரும்பணி ஆற்றிய திரு. K. பழனியப்பன் அவர்கள் சென்னையில் பிரிசிசன் சயன்டிபிக் கம்பெனி குழுமத்தைச் சிறப்புடன் நடத்தி வருகிறார்கள்.

அன்னார் அவர்களின் ஆலோசனையாலும், ஆசீர்வாதத்தாலும் இன்று பல கொங்கு நண்பர்கள் சென்னையிலும், பிற இடங்களிலும் தொழில் செய்து வருகிறார்கள்.

**1976**ல் சங்கத்திற்குச் சொந்தமாக இடம் வாங்க, சென்னையில் நட்சத்திரக் கலை விழாவை முன்னின்று நடத்தி, சுமார் ரூ.60,000/–த்தை வசூல் செய்து கொடுத்தார்கள். அந்த முதல் மூலதனமே கொங்கு நாடு இல்லம் உருவாகக் காரணமாக இருந்தது என்று சொன்னால் மிகையாகாது.

தன் சொந்த தொழில் வேலைகளுக்கு மத்தியில் சங்கத்தின் வளர்ச்சிக்காக நேரத்தை ஒதுக்கி, சிறப்பாக சமுதாயப் பணி ஆற்றியமைக்காக கொங்குச் சமுதாயம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது.

அன்னார் அவர்கள் பல்லாண்டு நீடுழி வாழ வாழ்த்துகிறோம்.



# K.S. கோவிந்தசாமி

1977 முதல் 1982 வரை செயலாளராக இருந்து சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்திற்காக அரும்பணி ஆற்றியவர் திரு. K.S. கோவிந்தசாமி அவர்கள்.

கொங்கு நாடு இல்லம் வாங்க வெளியூர்களுக்கு திரு. குருநாதன், திரு. K.S.K. வேலு மணி, திரு. புஷ்பண்ணன், திரு. முத்துசாமி, திரு. T.K. சுப்பிரமணியன் ஆகியோருடன் இடைவிடாமல் சென்று சுமார் 2 லட்சம் ரூபாய் அன்று வசூலித்த பெருமை திரு. கோவிந்தசாமி அவர்களையே சாரும்.

மாதம் தோறும் கூட்டங்களை நடத்தி சென்னை வாழ் கொங்கு மக்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகக் காரணமாக இருந்தார்கள். சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வளர முக்கியக் காரணமாக இருந்த திரு. கோவிந்தசாமி அவர்களின் நற்பணிகளை நன்றியுடன் நினைவு கூர்கிறோம்.

## திரு. C. முத்துசாமி I.A.S. (Retd.)

1. நான் தலைவராகப் பொறுப்பேற்றதும் கோர்ட் உத்தரவுப்படி கொங்கு இல்லத்தைக் காலி செய்ய மறுத்த சுமார் 5.6 குடும்பங்களை அரசு உதவியுடனும், குறிப்பாக காவல் துறை அதிகாரிகள், நமது இன அமைச்சர்கள் உதவியுடனும், தக்க முறையில் குடியிருப்போர்களிடம் பேசி காலி செய்ய வைக்கப்பட்டது.

2. அந்த நிலையில் இல்லத்தில் மின்வசதி, குடிநீர் வசதி இல்லாமல் குடியிருந்தவர்கள் செய்து விட்டதால் அவற்றை மீண்டும் பெற மின்துறை, குடிநீர் துறை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு மின் வசதியும், குடிநீர் வசதியும் பெறப்பட்டன. இந்த விஷயத்தில் எனக்கு வலது கரம் போல் உடனிருந்து உதவியவர் அன்றைய துணைத்தலைவர் திரு. அப்பாவு அவர்கள் என்பதைப் பெருமையுடன் நினைவு கூர்கிறேன்.

3. சுமார் 7,8 அறைகளை மராமத்து செய்து அவை சுமார் 15 நமது இன மாணவர்களுக்கு சலுகை வாடகையில் கொடுக்கப்பட்டன. அந்த மாணவர்கள் அனைவரும் சென்னையில் பட்டப் படிப்பு அல்லது மேல் பட்டப்படிப்பு படித்து வந்த தகுதியான இளைஞர்கள்.

4. அவர்களுக்கு இல்லத்திலேயே உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆகும் செலவை அனைவரும் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்தனர்.

5. தமிழ்நாடு தேர்வாணையத்தில் குரூப் 1 பரீட்சை அல்லது I.A.S. பரீட்சை எழுத விரும்பும் தகுதியுள்ள நமது இன மாணவர்களுக்குத் தக்க வழிகாட்டுதல் குறிப்பும், அறிவுரையும் இலவசமாக வழங்கினேன்.

6. அடிக்கடி இல்லத்தில் இருந்த மாணவர்களைச் சந்தித்து ஒழுக்கம், நேர்மை, எளிமை போன்ற குணங்கள் பற்றி கலந்துரையாடல் செய்தது.

**ஆலோசனை :** சென்னையில் பட்டப்படிப்பு, மேல்நிலை பட்டப்படிப்பு படிக்கும் நமது இன ஏழை மாணவர்கள் **15–20** பேருக்கு சலுகை வாடகையில் நமது இல்லத்தில் தங்கும் வசதி செய்து கொடுத்தல் நலம் எனக் கருதுகிறேன். மேலும் மேலும் சங்கம் வளர எனது மனப்பூர்வமான ஆசிகள்.


அன்புடன்,

C. முத்துசாமி, I.A.S., (ஓய்வு)

H-5, லாயிட்ஸ் காலனி,

ராயப்பேட்டை,

சென்னை – 14.




# திரு. Dr.K.S.K. வேலுமணி

1983 முதல் 1998 வரை ஐந்தாண்டு காலம் சங்கத்தின் செயலாளராக இருந்து கொங்கு நண்பர்கள் சங்கத்தைக் கட்டிக் காத்து வளர்த்த பெருமை டாக்டர். K.S.K. வேலுமணி அவர்களையே சாரும். முன்பு இருந்த பழைய கட்டிடத்தில் மாதந்தோறும் கூட்டங்கள் ஏற்பாடுசெய்து அனைவரும் பயன்பெற வழி வகுத்தார்கள்.

சென்னை வரும் நம் இன மக்களுக்கு கல்வி, அரசுப்பணி, வேலைவாய்ப்பு எனப் பல வகைகளில் உதவி செய்தார்கள்.

ஆராய்ச்சி மாணவர்களுக்கு அவ்வப்போது ஆவணங்களைக் கொடுத்தும், ஆலோசனை நல்கியும் சேவை செய்தார்கள்.

அன்னாரின் மேன்மையான பணியினை சங்கம் நன்றியுடன் நினைவு கூர்கிறது.



டாக்டர். **மே.அ. வேலுசாமி** B.E.,M.Sc., (Engg)., Ph.D. (Massachusetts)., FIE, MASME, MISTE, FAESI, MAMM, MISME, Dip.C.H., Engg.

No.33, மூன்றாவது சாலை, தண்டீஸ்வரர் நகர்,

வேளச்சேரி, சென்னை – 42.

நான் 1989 மற்றும் 1990ம் ஆண்டுகளில் தலைவராக நியமிக்கப்பட்டேன். திரு. T.K. சுப்ரமணியன் அவர்கள் செயலாளராக இருந்தார்.

**அப்போதைய முக்கியமான நிகழ்வுகள் :**

1. மிக ஒற்றுமையுடனும், ஊக்கத்துடனும் செயற்குழு எந்த முரண்பாடும் இல்லாமல் செயல்பட்டது.

2. இந்தக் காலகட்டத்தில்தான் முதன்முதாலாக மாதம் ஒரு முறை நான்கு பக்கங்கள் அடங்கிய செய்திமடல் தொடங்கப்பட்டது. நிதியின்மையால் ஒவ்வொரு இதழையும் யாராவது ஒருவர் மனமுவந்து ஏற்றுக் கொண்டார்கள். இதுதான் நம் சங்கம் வளர ஆதாரம். இதைப் படித்துத்தான் வெளியில் இருப்போருக்கு சங்கத்தைப் பற்றித் தெரிய வந்தது. சங்கம் வளர மிக ஏதுவாயிற்று.

3. திருமணச் செய்தி மையம் இந்தக் காலகட்டத்தில்தான் உருவானது. இதன் பலன்களை விவரிக்க வேண்டியதில்லை. பல திருமணங்கள் இதன் அடிப்படையில் நடந்துள்ளன.



# திரு. டி.கே. சுப்ரமணியன்

சுமார் 35 ஆண்டுகட்கு முன் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தில் தீவிர ஊழியனாக, எனது சமுதாயப் பணியைத் தொடங்கியதிலிருந்து ஏற்பட்ட அனுபவங்கள், மனதில் பசுமையாக நிழலாடும் சம்பவங்கள், நினைவுகள் எண்ணிலடங்கா! அப்படிப்பட்ட நிகழ்வுகளில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

சங்கத்தின் துவக்கக் காலகட்டத்தில் மாதாந்திரச் கூட்டங்கள் நடத்துவதற்குச் சொந்த இடமோ, வாடகை இடமோ கிடையாது. கடற்கரை மணலில் கூட, சில கூட்டங்கள் நடந்திருக்கின்றன. அதன்பிறகு சென்னை, திருவல்லிக்கேணி பெரிய தெருவில் பி.டி.சி. டுடோரியல் காலேஜ்–இல் மாதாந்திரக் கூட்டம் தொடங்கும். கூட்டத்தில் கலந்து கொண்டவர்கட்கு பிஸ்கட், தேநீர் வழங்கப்படும். அதற்கான செலவை சில உறுப்பினர்களே ஏற்றுக்கொள்வர்.

அருட்செல்வர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்கள் சங்கத் தலைவராக இருந்த போது, முதன்முறையாக அமெரிக்கப் பயணம் மேற்கொண்டார். ஒரு மாதாந்திரக் கூட்டத்தில் அவருக்குப் பாராட்டு அளிக்க முடிவு செய்யப்பட்டது. அக்கூட்டத்தில் கலந்து கொண்ட திரு. மகாலிங்கம் அவர்கள் தனது பயண அனுபவங்களை எடுத்துக் கூறினார். அக்கூட்டத்தில் சுமார் 15 பேர்கள் கலந்து கொண்டனர். திரு. கே.எம். சென்னியப்பன், வழக்கறிஞர் காந்தி, பேராசிரியர் பழனிசாமி, தேவண கவுண்டர், மீசை பெருமாள், சி.கே. இராமசாமி, காந்தி

அவர்களின் இளவல் ராசேந்திரன், மோகன் மற்றும் சில தலைமைச் செயலக அரசு அலுவலர்களாகப் பணியாற்றியவர்கள் கலந்து கொண்டது இன்றும் பசுமையாக என் மனதில் நிற்கிறது.

கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்களிடையே பரஸ்பரம் உதவிக் கொள்ளவும், ஒருவரை ஒருவம் புரிந்து கொள்ளவும், சென்னை நகர வாழ்க்கை பாதுகாப்பாக இருக்கவும், புதிய உறுப்பினர்களை ஈர்க்கும் வகையிலும் ஆண்டுக்கு இரண்டுமுறை சிற்றுலா மற்றும் சுற்றுலாக்கள் நடத்த சங்கம் முடிவு செய்தது. அதன்படி கார் வைத்திருப்பவர்கள் குறிப்பிட்ட இடத்தில் வந்து நிற்பார்கள் – மற்றவர்கள் அந்த இடத்திற்கு வந்து, குடும்பத்துடன் புறப்படுவார்கள். ஒவ்வொருவரும், தின்பண்டங்கள் கொண்டு வருவர். ஒவ்வொரு சுற்றுலாவிலும் வழக்கறிஞர் இரா. காந்தி அவர்கள் பங்கேற்பார். குழந்தைகளின் பாட்டும், ஆட்டமும் காணக் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். சென்னை ரப்பர் தொழிற்சாலையில் பணியாற்றும் திரு. பழனியப்பன் தம்பதியினர் தவறாமல் கலந்து கொள்வார்கள். திருமதி பழனியப்பன் அவர்களை திரு. காந்தி "திருமதி ரப்பர்" என்று கேலியாகக் கூப்பிடுவார். திருமதி பழனியப்பன் அவர்களும் அவர் கூப்பிடுவதை மிகவும் ரசித்து மகிழ்வார். பயணம் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். மகாபலிபுரம், பூண்டி ஏரி, காஞ்சிபுரம், வேடந்தாங்கல் போன்ற பல இடங்களுக்குச் சுற்றுலா செல்வோம். நான் என் துணைவியுடன் தவறாமல் கலந்து கொள்வேன்.

சென்னை ராயப்பேட்டை அம்மையப்பன் தெரு, 10–ம எண் வீட்டை 1982ல் சங்கம் வாங்கியது. 100 ஆண்டு பழமையான வீட்டுடன் கூடிய இடம் அது. புதிய கட்டிடம் கட்டும் வரை, பழைய வீட்டையே செப்பனிட்டு, குறைந்த பட்ச வசதிகளைச் செய்து, மிகவும் வசதிக்குறைவான இளைஞர்கள் தங்க ஏற்பாடு செய்தோம். தரை, சுவர் ஆகியவற்றைச் செப்பனிட்டு, புதிய மின் வசதி செய்யப்பட்டு, ஒவ்வொரு அறைக்கும் கட்டில், மேசை, நாற்காலி, மின்விசிறி, விளக்கு ஆகிய வசதிகளைச் செய்தோம். அப்போது சங்கத் தலைவராக இருந்த ஓய்வு பெற்ற மாவட்ட ஆட்சியர் திரு. சி. முத்துசாமி அவர்கள் தனது லாயிட் குடியிருப்பு வீட்டில் இருந்து தினசரி


காலை, மாலை நேரங்களில் வருகை தந்து மராமத்து வேலைகளைப் பார்வையிடுவார். நானும் தினமும் அங்கு வந்து அவருக்கு உறுதுணையாக இருந்தேன். பேரறிஞர் அண்ணா அமைச்சரவையில் அங்கம் வகித்த பாவலர் முத்துசாமி அவர்கள் அடிக்கடி என்னிடம் சங்க நடவடிக்கைகள் பற்றி விசாரிப்பார். ஒருமுறை அவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது, புதிதாக வாங்கிய வீட்டில் சுமார் 15 பேர் தங்க வசதியாக சுமார் 10 அறைகள் உள்ளதென்றும், அவற்றிற்கு, புதிய கட்டில்கள் தேவைப்படுவதையும் சொன்னேன். உடனே அவர் மூன்று கட்டில்கள் வாங்குவதற்கான பணத்தைக் கொடுத்தார். பொருளாதார நெருக்கடியில் அவர் இருந்த அந்த நேரத்திலும், சமுதாய உணர்வுடன் அவர் செயல்பட்டதை இன்று நினைத்தாலும் மெய்சிலிர்க்கிறது!

1978 - 1993 காலகட்டத்தில் சங்கத்திற்குப் புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதில் தீவிரமாக ஈடுபட்டோம். சங்கத்தின்பால் கொங்கு நண்பர்களை ஈர்க்கும் வகையில் மாதந்தோறும் ஒரு சொற்பொழிவு நடத்துவதென சங்கம் முடிவு செய்தது. பல்வேறு துறைகளில் முன்னணியில் இருந்த நமது சமுதாயப் பெருமக்களை அழைத்து, சங்சக் கட்டிடத்தில் மாதம் ஒரு ஞாயிற்றுக் கிழமையில் கூட்டம் நடத்தினோம். கூட்டத்திற்று சுமார் 40–50 பேர்கள் வருவார்கள். ஒரு தடவை பாவலர் முத்துசாமி அவர்களைப் பேச அழைத்திருந்தோம். அதுபற்றிய செய்தியை “செய்திமடல்” மாத இதழில் போட்டிருந்தோம். எதிர்பாராமல் நடந்த தபால் துறையினர் வேலை நிறுத்தத்தால் செய்திமடல் உறுப்பினர்கட்குக் கிடைக்க இயலாத நிலை ஏற்பட்டது. சொற்பொழிவு நிகழ்ச்சி தடைபடக்கூடாது என்று எண்ணினேன். ஆகவே “செய்திமடலை” எடுத்துக் கொண்டு நூற்றுக்கணக்கான உறுப்பினர்களின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று விநியோகம் செய்து, சொற்பொழிவு நிகழ்ச்சிக்குக் கட்டாயம் வருகை தர வேண்டும் என்று சொல்லிவந்தேன். அதற்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சிகட்கு வரும் கூட்டத்தைவிட

அதிக அளவில் நண்பர்கள் வருகை தந்திருந்தனர். அன்று நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை! பாவலர் முத்துசாமி அவர்கள் சுமார் ஒரு மணி நேரம் உரையாற்றியது இன்றும் பசுமையாக என் மனதில் நிழலாடுகிறது!

35 ஆண்டு காலம் சமுதாயப் பணியில் எனக்கு நிறைவைத் தந்தவை:

- பல தொழில் அதிபர்களைக் கொங்கு நண்பர்கள் சங்கம் மூலம் இணைத்து சமுதாயப் பணியில் ஈடுபடச் செய்தது.
- தலைநகர் சென்னையில் நமது இனத்திற்குச் சொந்தமாகக் கட்டிடத்தை ஏற்படுத்தியது.
- தமிழக அரசு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் முன்பு, புள்ளி விபரங்களைக் கொடுக்க மாநில ஒருங்கிணைப்புக் குழுவை அமைத்து மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப் போராடியது.




# திரு. K. பொன்னுசாமி

**1991 – 92** ஆம் ஆண்டுகளில் தலைவராகப் பொறுப்பேற்ற திரு. K. பொன்னுசாமி அவர்கள், P.A. கன்ஸ்டிரக்ஸன் குழுமத்தைச் சென்னையில் நடத்தி வருகிறார்கள்.

அவர்கள் காலத்தில் பல பாராட்டு விழா, குடும்ப விழா, கலைநிகழ்ச்சிகளை நடத்தி சங்கத்தைக் கலகலப்பாக வைத்திருந்தார்கள்.

நமது சமுதாய இளைஞர்களை ஊக்குவித்து அவர்களின் மேம்பாட்டுக்காக அரும்பணி ஆற்றிய பேராசிரியர் பழனிசாமி அவர்களின் பெயரில் அறக்கட்டளை ஆரம்பித்து, பள்ளி இறுதித் தேர்வில் முதல் மூன்று மதிப்பெண்கள் வாங்கும் மாணவ, மாணவிகளுக்கு ஆண்டுதோறும் பரிசும், பணமுடிப்பும் வழங்க ஆவண செய்தார்கள்.

அன்னாரின் அரும்பணியைச் சங்கம் மகிழ்வுடன் நினைவு கூர்கிறது.



# திரு S. அருணாசலம்

1993 மற்றும் 1994, இரண்டு ஆண்டுகள் சென்னை சொங்கு நண்பர்கள் சங்கத் தலைவராக பல நண்பர்களின் வேண்டுதலின் பேரில் பணியாற்ற வாய்ப்பு கிடைத்தது.

திரு. தேவராஜ் (Raj Builders) துணைத் தலைவராகவும், திரு. K. பாலசுப்பிரமணியம் செயலாளராகவும் (தற்போதைய துணைத்தலைவர்). திரு. T.K. சுப்பிரமணியன் இணைச் செயலாளராகவும், திரு. K.R. அப்பாவு (Omega Transport). பொருளாளராகவும் அடங்கிய நிர்வாகக் குழு 12 கமிட்டி உறுப்பினர்களுடன் பொறுப்பில் அமர்ந்தோம்.

எனக்கு முன் P.A. Construction உரிமையாளர் திரு. K. பொன்னுசாமி அவர்கள் சில ஆண்டுகள் தலைமைப் பொறுப்பேற்றுச் சிறப்பாக நடத்தி வந்தார்கள்.

எண். 10 அம்மையப்பன் தெரு, இராயப்பேட்டையில் ஏற்கனவே வாங்கப்பட்ட பழைய வீட்டில் சில ஆண்டுகள் சங்கம் இயங்கி வந்தது. மாதாந்திர கூட்டங்கள் அப்பொழுது தரையில் அமர்ந்து நடைபெற்றுக் கொண்டு வந்தன.

1990–92ல் அந்தப் பழைய கட்டிடத்தை இடித்து விட்டுப் புதிய விடுதி கட்ட முயற்சிகள் எடுத்ககப்பட்டு வந்தாலும் அதைச் செயல்படுத்த முடியாத சூழ்நிலை; போதிய நிதி பற்றாக்குறை. இந்தச் சூழ்நிலையில் அன்று பொறுப்பேற்ற நிர்வாகக் குழு மற்றும் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் மிக உற்சாகத்துடன் நமது சமுதாய மக்களும் மற்றும் வசதி குறைவான மாணவ, மாணவியர்கள் தங்க புதிய விடுதி கட்ட வேண்டும் என்று விரும்பினார்கள். அதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு Building Committee அமைக்கப்பட்டது.

திரு. தேவராஜ் (Raj Builders) அவர்களும், திரு. K.R. அப்பாவு (Omega Transport) அவர்களும் கட்டிடம் கட்டும் பொறுப்பை ஏற்று மிக மிகச் சிறப்பாகச் செயல்பட்டு மிகச் சிக்கனமாகவும், விரைவாகவும் ஓர் ஆண்டிற்குள் கட்டி முடித்தார்கள். திரு. K.R. அப்பாவு அவர்கள் கிட்டத்தட்ட நாள்தோறும் இந்த வேலை நடக்கும் இடத்திற்குச் சென்று மேற்பார்வையிட்டு மிகச் சிக்கனமாகக் கட்டுவதற்கு உதவியாக இருந்தார்கள். மொத்த செலவு சுமார் 16 லட்சம் ரூபாய் ஆகியது என்று எண்ணுகின்றேன்.

நிதி தேவைக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை தோறும் தவறாமல் நிர்வாக உறுப்பினர்களும், கமிட்டி உறுப்பினர்களும் சேர்ந்து விடாமுயற்சியுடன் வீடு வீடாகச் சென்று நன்கொடை வசூலிக்க மிகவும் உதவினார்கள். வெளியூர்களில் ஈரோடு, கரூர், நாமக்கல், திருச்செங்கோடு, திருச்சி, சேலம், சங்ககிரி, திருப்பூர் ஆகிய இடங்களுக்கும் சென்று நன்கொடை வசூலித்தோம்.

ஈரோட்டில் திரு. கொழந்தைசாமி (நமது தற்போதைய துணைத் தலைவர்) அவர்கள் எங்களை மிகவும் உபசரித்து பெரும் அளவில் நிதி வசூலிக்க உதவியாக இருந்தார்கள் என்று நன்றியுடன் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். திருப்பூருக்கு நிதி வசூலிக்கச் சென்றிருந்தோம். அங்கு திரு. மோகன் கந்தசாமி அவர்களும், திரு. பெஸ்ட் ராமசாமி அவர்களும் எங்களை மிக நன்றாக உபசரித்து நிதி கொடுத்தும், நிதி வசூலித்தும் பெரும் அளவில் உதவினார்கள். கரூர் சென்றிருந்தோம். அங்கு கரூர் திரு. ராஜேந்திரன் மற்றும் Dr. செல்லப்பன் அவர்கள் எங்களைச் சிறப்பாக உபசரித்து நிதி உதவியும், இல்லத்திற்குத் தேவையான போர்வைகள் நிறைய வசூலித்தும் உதவினார்கள்.

நாமக்கல் சென்றிருந்தோம். அங்கு திரு. M.P. செல்லப்பன் மற்றும் கொங்கு நண்பர்கள் சங்க அன்றைய பொறுப்பாளர்கள் எங்களுக்கு மிக மிக உதவினார்கள். திருச்செங்கோடு சென்றோம். அங்கு திரு. K.S. ரங்கசாமி கவுண்டர் (KSR Engineering College) எங்களைச் சிறப்பாக உபசரித்து நிதி உதவி செய்தும் வசூலித்து கொடுத்தும் மிகவும் உதவினார்கள்.

சேலம் சென்ற போது, திரு. S.P. ராமசாமி கவுண்டர் உதவியாலும், திரு. கருப்பன் (Retired Asst. Collector, Excise Department) உதவியாலும்

எங்களுக்கு நிதி உதவி கிடைத்தது. எங்களை மிகவும் நன்கு உபசரித்தார்கள்.

நிதி வசூலுக்குச் சென்ற எல்லா இடங்களுக்கும் திரு. T.K. சுப்பிரமணியன் அவர்கள் முன் ஏற்பாடு செய்தார்கள். அவரைப் பெரும்பாலான கொங்கு நண்பர்கள் நன்கு அறிவார்கள். அவர் சேவையைக் கொங்கு நண்பர்கள் சங்கம் மனமுவந்து பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

நிதி வசூலிக்கச் சென்ற எல்லா இடங்களுக்கும் சொந்த செலவிலேயே சென்று வந்தோம். இந்த நிலை இன்றும் கடைப்பிடிக்கப்படுகின்றது என்று எண்ணுகின்றேன். சங்கக் கணக்குகள் அவ்வப்போது தணிக்கை செய்யப்பட்டு கமிட்டியில் அங்கீகரிக்கப்பட்டன. தலைவர் மற்றும் செயற்குழு மாறும் பொழுது Assets and Records முறையாக Handing over and taking over செயல்படுத்தப்பட்டது. இவை அனைத்தும் தற்பொழுது நன்கு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

என்னுடன் சேர்ந்து அனைத்து நிர்வாக மற்றும் கமிட்டி உறுப்பினர்கள் மிகவும் பாராட்டும் வகையில் ஒற்றுமையாகச் செயல்பட்டதால் “கொங்கு நாடு இல்லம்” மிகச் சிறப்பாக, சிக்கனமாக ஓராண்டிலேயே கட்டி முடிக்கப்பட்டது. இது தற்பொழுது அனைவருக்கும் மிகவும் பயனுள்ளதாக உள்ளது என்பதை அறிவோம்.

எனக்குப் பின் பொறுப்பேற்ற தலைவர்கள் திரு. தேவராஜ் (Raj Builders), திரு. K.R. அப்பாவு இருவருமே மிக மிகச் சிறப்பாக செயல்பட்டு மேலும் மேலும் சாதனைகள் செய்துள்ளார்கள். புதிய இடம் வாங்கப்பட்டது. தந்பொழுது நிர்வாகத்தில் உள்ள பொறுப்பாளர்கள் திரு. K.C. காளியண்ணன், திரு. E.R. ஈஸ்வரன் அடங்கிய குழுவினர் மிகவும் பாராட்டும் வகையில் செயல்பட்டு வருகிறார்கள். தொடர்ந்து பல சாதனைகள் நிகழட்டும். வாழ்க கொங்கு சமுதாயம்!

நன்றி! வணக்கம்.



# திரு. P. தேவராஜன்

## முன்னாள் தலைவர் (1995 – 1996)

அரசுப் பணிக்காக 1969 ஆண்டு சென்னை வந்த நான் நமது சமுதாயம் முன்னேற வேண்டும் என்று எப்பொழுதும் நினைத்து, அதில் நாமும் சிறிது பங்கு கொள்ள வேண்டும் என்று சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் கூட்டம் திருவல்லிக்கேணியில் இருந்த P.T.C திரு. மாரப்பன் டுடோரியல் கல்லூரியில் நடந்து கொண்டிருந்த போதில் இருந்து சென்று உறுப்பினர் எண் – 45 ஆகப் பதிவு செய்து பணியாற்றிக் கொண்டிருந்தேன்.


சங்கத்தில் 1993–94ம் ஆண்டுகளில் உபதலைவராகவும், 1995–96 ஆண்டுகளில் தலைவராகவும் பதவி வகித்தேன். கொங்கு நாடு இல்லம் உருவாவதில் பல சிரமங்கள் இருந்ததால் 1993ல் இல்லத்தைக் கட்டும் முழுப்பொறுப்பை அன்றைய செயற்குழு என்னிடம் கொடுத்தார்கள். என் நிறுவனம் ராஜ்பில்டர்ஸ் மூலம் பல வகைகளில் உதவி செய்து கொங்கு நாடு இல்லத்தைக் கட்டி முடித்தேன். அது மட்டுமல்லாமல் மேல் தளத்தையும் நான் தலைவராக இருந்த போது முடிக்க ஆவன செய்தேன். அப்போழுது சொந்த செலவில் வெளியூர்களுக்குச் சென்று அனைத்து செயற்குழு உறுப்பினர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, கொங்கு நாடு இல்லம் உருவாகக் காரணமாக இருந்தார்கள் என்பதை இங்குக் கூறக் கடமைப்பட்டடுள்ளேன். அப்போது செயலாளராக இருந்த திரு. K. பாலசுப்பிரமணியன் அவர்கள் மிகுந்த சிரத்தை எடுத்து சங்க விதிமுறைகளைச் சரிபடுத்தியும், நிர்வாகத்தை முறைப்படுத்தியும் சிறப்பாகச் செய்தார்கள்.

முக்கியமாக, அன்றைய அரசின் அமைச்சராக இருந்த திரு. துரை ராமசாமி

அவர்களின் தலைமையில், நமது நீண்ட நாள் கோரிக்கையான தீரன் சின்னமலைக்கு சென்னையில் சிலை அமைக்கக் குழு அமைக்கப்பட்டு நமது சங்கத்தின் தலைவரான என்னையும், செயலாளர் பாலசுப்பிரமணியன் அவர்களையும் குழுவின் உறுப்பினர்களாக நியமித்தார்கள். அக்குழு சிலையின் பீடத்தை அமைக்கும் பணியை என்னிடம் ஒப்படைத்தது. சொந்த வேலைகள் சிறிதளவு பாதித்தாலும் என் சொந்தப் பொறுப்பில் சுமார் 3 லட்சம் ரூபாய் செலவில் அந்த பீடத்தை என் நிறுவனமான ராஜ் பில்டர்ஸ் மூலம் செய்து கொடுத்தேன். மேலும் சிலை உருவாக்கிய போதும், அதை முடிக்கும் போதும் நானும், செயலாளர் பாலசுப்பிரமணியன், நடிகர் சிவகுமார் ஆகியோர் வாரம் தோறும் சென்று அதை முடிப்பதில் கவனம் செலுத்தினோம். பல்வேறு அரசியல் காரணங்களால் சிலையை அப்பொழுது திறக்க முடியாவிட்டாலும், தீரன் சின்னமலையின் சிலையை சென்னையில் நிறுவியதற்குக் காரணமாக இருந்தோம் என்று பெருமையுடன் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

ஒவ்வொரு செயற்குழுவும் அவரவர்கள் காலகட்டத்தில் கடந்த 10 ஆண்டுகளாக நல்ல முறையில் பணியாற்றி, இன்று சென்னை சங்கம் சமுதாய முன்றேற்றத்திற்கு பல்வேறு வழிகளில் உதவ வழிவகுத்துள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரும் காலத்திலும் இதே போல பல நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என வாழ்த்தி, நமது சமுதாயத்தில் உயர்ந்த பதவிகளில் இருந்து ஓய்வு பெற்ற நிபுணர்களும், கல்வியாளர்களும் சென்னையில் உலகத்தரம் வாய்ந்த வர்த்தக மேலாண்மை (Business Management) கல்வி நிறுவனம் ஒன்றை நமது சங்கத்தின் முயற்சியில் நிறுவ வேண்டும் என இந்த நேரத்தில் கூறி, வெள்ளிவிழா மலரை வெளியிட்டு அனைவரின் எண்ணங்களையும் அனுபவங்களையும் பிரதிபலிக்கக் காரணமாய் இருந்த இன்றைய செயற்குழுவிற்கு நன்றியினையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்.



## திரு. K. பாலசுப்பிரமணியன்

முன்னாள் செயலாளர் (1993 – 1996)

1974ம் வருடம் சென்னை முதல்முதலாக வந்த போது, சென்னையில் உள்ள கொங்கு நாட்டு உறவினர்கள் மைலாப்பூரில் கபாலீஸ்வரர் கோயிலுக்கு அருகில் வடக்கு குளக்கரை தெருவில் உள்ள திரு. சேனாபதிக் கவுண்டர் அவர்கள் இல்லத்தில் மாதந்தோறும் கூடுவதை அறிந்து அங்குச் சென்றேன். வந்துள்ள அனைவரும் சுய அறிமுகத்தில் சொந்த ஊர், கூட்டம், செய்யும் தொழில் ஆகியவற்றைச் சொல்லுவதைக் கேட்ட பொழுது, சொந்த ஊரை விட்டு இவ்வளவு தூரம் வந்துவிட்டோமே என்று இருந்த அச்சம் மெதுவாக விலகி, இங்கு நம்மவர்கள் இவ்வளவு பேர்கள் இருப்பதை அறிந்ததும், மகிழ்ச்சியும், தைரியமும் வந்தது. அங்கு நான் சந்தித்த அன்றைய செயலாளர் திரு. K.S. கோவிந்தசாமி, பொருளாளர் திரு.புஷ்பண்ணன், திரு. T.K. சுப்பிரமணியன் ஆகியோர்களின் அறிமுகத்துடன் நானும் சங்கத்தில் சிலகாலம் ஆண்டு உறுப்பினராக இருந்து, பின் ஆயுள் உறுப்பினராக மாறி இன்று வரை பல்வேறு பொறுப்புகளை ஏற்றுப் பணிபுரிந்து வருகிறேன்.

**முகவரிப்புத்தகம் :**

முதன் முதலாக அன்றைய இணைச் செயலாளர் திரு. T.K. சுப்பிரமணியனும், நானும் எப்படியாவது நமது சங்க உறுப்பினர்களின் முகவரிப் புத்தகம் பெளியிட வேண்டும் என முடிவு செய்து கிட்டத்தட்ட சென்னையில் உள்ள அனைத்து உறுப்பினர்களின் வீட்டுக்குச் சென்று முழு விவரங்களையும் சேகரித்து முதல் முகவரிப் புத்தகம் 1990 ஆண்டு வெளியிடப்பட்டது. அதன் இரண்டாம் பதிப்பைப் பெரிய அளவில் வெளியிடுவதற்குக் காரணமாக இருந்த முன்னாள் பொருளாளர் திரு. மெட்டக்ஸ்

லைபரட்டரி திரு. செல்வகுமார் அவர்களின் அரும்பணியை இங்குக் கூறி ஆக வேண்டும்.

**செய்தி மடல் :**

சங்கத்தின் நடப்புகளையும், அதே போல் நமது சமுதாய மக்களுக்கு உபயோகமான மற்ற செய்திகளையும் வெளியிடும் பொருட்டு அன்று 4 பக்க அளவில் மாதந்தோறும் செய்தி மடல் வெளியிடப்பட்டது. பின்பு அதை பத்திரிகையாகப் பதிவு செய்து தொடர்ந்து வெளியிட்ட பெருமை திரு. S.K. கருப்பன் அவர்களைச் சாரும்.

1993 – 1994 ஆண்டுக்கான தேர்தலின் போது என்னைச் செயலாளராக இருக்கும்படி முன்னாள் தலைவர்கள் திரு. S. அருணாசலம், திரு. K.R. அப்பாவு, முன்னாள் செயலாளர் திரு. T.K. சுப்பிரமணியன் ஆகியோர் கேட்ட பொழுது, நம் பதவிக் காலத்தில் ஏதாவது ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கி செயல்படுத்துவதானால் ஏற்றுக் கொள்கிறேன் என்று சொல்ல அனைவரும் அப்படியே செய்வோம் என அளித்த உறுதியுடன் செயலாளர் பொறுப்பை ஏற்றேன்.

**கொங்கு நாடு இல்லம் :**

செயலாளர் பொறுப்பை ஏற்றவுடன் அம்மையப்பன் தெருவில் உள்ள இடத்தில் நம் மக்கள் தங்க இல்லம் ஒன்றை ஏற்படுத்துவதில் தீவிரமாக இறங்கினோம். அன்றைய உபதலைவராக இருந்த திரு. P. தேவராஜன் அவர்களிடம் தாங்கள் கட்டுமானப் பணியின் பொறுப்பை ஏற்று நடத்த வேண்டும் என கேட்டுக் கொண்டோம். அவர்களும், அவருடைய ராஜ் பில்டர்ஸ் நிறுவனத்தின் மூலம் தனது சொந்த மேற்பார்வையில் வேலைகளை நிற்க விடாமல் கட்டுமானப் பொருள்களையும், ஆட்களையும் அனுப்பி 1½ வருடகாலத்தில் தரை தளம், முதல் மாடி, இரண்டாவது மாடிகளைக் கட்டி முடித்ததை இன்றும் நினைவு கூர கடமைப்பட்டுள்ளேன்.

கட்டிடத்தை ஆரம்பிக்கும் பொழுது 1 இலட்சம் ரூபாய் இருப்புதான் இருந்தது. பலரும் இதை வைத்துக் கொண்டு எப்படி 25 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கட்டிடத்தைக் கட்டப் போகிறீர்கள் என்று சொன்னாலும், எப்படியாவது கட்டிவிட

வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் அன்றைய தலைவர் S. அருணாசலம், உபதலைவர் P. தேவராஜன், பொருளாளர் K.R. அப்பாவு, திரு. T.K. சுப்பிரமணியன், திரு. S.K. கருப்பன், ஆடிட்டர் பொன்னுசாமி ஆகியோர் ஒவ்வொரு வாரமும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில், தவறாமல் சென்னையிலும் சேலம், நாமக்கல், திருச்செங்கோடு, ஈரோடு, கரூர் ஆகிய ஊர்களுக்குச் சென்றும் வசூல் செய்து கட்டிடச் செலவுக்கு பணத்தைக் கொடுத்துக் கொண்டே இருந்தோம். இப்பெருமுயற்சிக்கு ரூ. 25,000/–ம் கொடுத்த பெருமக்கள் அனைவரின் பெயரையும் நமது இல்லத்தின் ஒவ்வொரு அறைக்கும் வைத்துள்ளதை இன்றும் பார்க்கலாம். சில நேரங்களில் பணம் பற்றாக்குறை வந்த போதும் கட்டிட வேலைகள் தொய்வில்லாமல் நடக்க தங்களுடைய சொந்தப் பணத்தை கடனாகக் கொடுத்து உதவிய பொருளாளர் K.R. அப்பாவு அவர்களும், திரு. P. தேவராஜன் அவர்களுமே கொங்கு நாடு இல்லம் உருவாவதில் பெரும்பங்கு வகித்தார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

கட்டிட நிதி வசூலுக்குச் சென்ற போது, இந்தச் சமுதாயப் பணியின் முக்கியத்துவத்தை அறிந்து சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தைப் பாராட்டியது மட்டுமல்லாது இன்முகத்தோடு வாரி வழங்கியதை நினைத்துப் பார்த்தால் இன்றும் உடம்பு புல்லரிக்கிறது. முதன் முதலாக சேலத்திற்கு திரு. S.K. கருப்பன் அவர்களின் சம்பந்தி திரு. ராமசாமி அவர்களிடம் சென்ற பொழுது, ‘வாருங்கள் முயற்சிப்போம்’ எனச் சொல்லி திருவாளர்கள் ரங்கநாதன்&கோ. நிறுவனத்தினரிடம் அழைத்துச் சென்று ‘சென்னையில் இருந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் செய்யும் இந்தச் சமுதாயப் பணிக்கு அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும்’ எனச் சொல்ல, உடனடியாக அவர்கள் ரூபாய் 50,000/–க்கு காசோலையைக் கொடுத்தது உண்மையிலேயே போனவர்கள் அனைவருக்கும் இந்த மிகப்பெரிய பணியை முடித்துவிடலாம் என்ற நம்பிக்கையை உருவாக்கக் காரணமாக இருந்தது.

அதே போல் மற்ற நன்கொடையாளர்களை அணுகி அவர்களுக்கு எடுத்துச் சொல்லி வசூல் செய்து கொடுத்ததில் அன்றைய பொறுப்பாளர்கள் அனைவருக்கும் பெரும் பங்கு உண்டு.

கட்டிடத்தை முடிக்கும் தருவாயில் திரு. ஜெம். வீரமணி அவர்களை அணுகிய பொழுது இன்முகத்தோடு தனது நிறுவனத்தின் மூலம் கிரானைட் கற்களைப் பொருத்திக் கொடுத்து கொங்கு நாடு இல்லத்தின் முகப்பைப் பளபளக்க வைத்தார்கள். திரு. அருணாசலம் அவர்களுடைய தலைமையில் 29.05.1994 அன்று கொங்கு நாடு இல்லத்தின் திறப்பு விழாவை சிறப்பாகச் செய்ததுடன் அன்றைய தினம் கொங்கு நாடு தியாகச் சுடர்கள் பொன்னர் சங்கர், இந்தியாவின் முதல் சுதந்திரப் போராட்ட வீரன் தீரன் சின்னமலைக் கவுண்டர், கூட்டுறவு இயக்கத் தந்தை கொங்கனாபுரம் திரு. நாச்சிமுத்துக் கவுண்டர், சுதந்திரப் போரட்ட வீரன் திரு. கோவை அய்யா முத்து, கொங்கு கவிகள் திரு. புலவர் குழந்தை, திரு. பெரியசாமி தூரன், கொங்கு நாடு இளைஞர்களின் வழிகாட்டி பேராசிரியர் பழனிசாமி ஆகிய அமரர்களின் திருவுருவப் படங்களைப் பல்வேறு சமுதாயப் பெருமக்களால் திறந்து, இவர்களை நினைவு கூர்ந்த பெருமை சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்துக்கு மட்டுமே உண்டு என்பதை இங்குக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

**கொங்கு சாதனையாளர்களைப் பாராட்ட நிரந்தர அறக்கட்டளை :**

வேளாண்மையைக் குலத்தொழிலாகக் கொண்டிருந்த நமது கொங்கு இனமக்கள், இன்று தொழில், கல்வி, ஆராய்ச்சி, விஞ்ஞானம், விளையாட்டு, மருத்துவம், பொறியியல், சமுதாயப் பணி, கொங்குச் சமுதாய முன்னேற்றப் பணி என்று பல்வேறு துறைகளில் சாதனைகள் படைத்து முத்திரை பதித்துக் கொண்டுள்ளார்கள்.

இவர்கள் மென்மேலும் சாதனைகள் புரியவும், இவர்களைப் பார்த்து மற்றவர்கள் முன்னேறவும், பாராட்டுவதை ஒரு நல்ல பண்பாகக் கொண்டு அதைத் தொடர்ந்து செய்ய வேண்டிய அவசியத்தை மனதில் கொண்டு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 1995ம் ஆண்டு முதல் சாதனையாளர் விருதினை அறிமுகப்படுத்தி வருடம் தோறும் சாதனைகள் படைத்த பலரைப் பாராட்டி கௌரவித்து வருகிறது.

இதை வரும் காலங்களில் தொடர்ந்து செய்ய வேண்டும் எனக் கருதி, நான் செயலாளராக இருந்த போது பெருமக்களின் உதவியுடன் ரூ. 10,000/– நிரந்தர வைப்பு நிதியாக வைத்து 12 நிரந்தர அறக்கட்டளைகளை உருவாக்கினோம். அதன்

தொடர்ச்சியாக இன்று வரை 104 பேர்களைப் பாராட்டி விருது கொடுத்து கௌரவித்துள்ளோம்.

**கொங்க நாடு இல்லத்தின் மூன்றாவது மாடி :**

திரு. P. தேவராஜன் அவர்கள் தலைவராக இருந்த போது, மாதாந்திர கூட்டம் நடத்துவதற்காக மூன்றாவது மாடியில் அழகான கூடம் ஒன்று அமைக்கப்பட்டது. இதையே குழுவாக வந்து தங்கும் மாணவ மாணவிகளுக்கும், குளித்து விட்டு மட்டும் செல்வதற்கு ஏதுவாக இருக்க அமைக்கப்பட்டது.

**தீரன் சின்னமலைக் கவுண்டருக்குச் சென்னையில் திருவுருவச் சிலை :**

பல ஆண்டுகளாக இந்தியாவின் முதல் சுதந்திரப்போராட்ட வீரன் தீரன் சின்னமலையின் நினைவாக சென்னையில் சிலையும், அரசு போக்குவரத்துக் கழகத்துக்கு பெயரும், மாவட்டப் பெயரும் அமைக்க வேண்டும் என்று கொங்கு வேளாளக் கவுண்டர் பேரவை, கொங்கு வேளாளக் கவுண்டர் முன்னேற்றப் பேரவை, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ஆகிய அமைப்புகள் தொடர்ந்து விடுத்த கோரிக்கைகளின் பலனாகவும், சென்னையில் பேரணி, கரூரில் பேரணி, கூட்டங்கள் நடத்திய போது அன்று இருந்த அ.தி.மு.க. அரசு, நமது அமைச்சர்கள் திருவாளர்கள் துரை ராமசாமி, திரு. செங்கோட்டையன், திரு. முத்துசாமி, திரு. சின்னசாமி, நமது சங்கத்தலைவர், செயலர் உட்பட 40பேர் கொண்ட குழுவை அமைத்து சென்னையில் கிண்டி தொழிற்பேட்டை முகப்பில் சிலையமைக்க இடத்தை ஒதுக்கியது.

மேலும் தீரனின் சிலையை உருவாக்கும் பொறுப்பை முன்னாள் அமைச்சர் திரு. துரை ராமசாமி அவர்கள் தலைமையில் நடிகர் திரு. சிவகுமார், தமிழ்நாடு மருத்துவமனையின் அன்றைய தலைவர் திரு. வேலுசாமி, நமது சங்கத் தலைவர் திரு.தேவராஜன், நான் ஆகியோர் கொண்ட குழுவை ஏற்படுத்தி பொறுப்பை ஒப்படைத்தது.

ஓவியர் திரு. மணியம் செல்வன் அவர்களின் உதவியுடன் நடிகர் திரு. சிவகுமார் அவர்கள் தீரனுடைய படத்தை அழகாக வரைந்து கொடுத்து, சிலை

உருவாகும் போது ஒவ்வொரு கட்டத்திலும் வந்து சிலையை நன்றாக வடிப்பதற்கு ஆலோசனைகளை நல்கினார்கள். சுமார் 4000Kg வெண்கலச் சிலையை திரு. நாகப்பா ஜெகந்நாதன் அவர்கள் மிக சிரத்தையாகச் செய்த போதிலும், மிக உயரமான, கனமான சிலையை முடிப்பதில் சிரமம் இருந்ததால் கடைசியில் என்னுடைய நந்தம்பாக்கம் தொழிற்சாலையில் இறுதி வடிவம் கொடுக்கப்பட்டது.

தீரன் சின்னமலை சிலையின் பீடத்தை உருவாக்கியதில் திரு. தேவராஜன் அவர்களுக்கும், பீடத்தின் மேல் உள்ள 17 டன் உள்ள ஒரே கல்லைக் கொடுத்த திரு. ஜெம் வீரமணி அவர்களுக்கும் இதை உருவாக்கியதில் பெரும்பங்கு உண்டு.

கட்டுமானப் பணிகளை முன்னாள் முதன்மைப் பொறியாளர் திரு. ஆறுமுகம் அவர்கள் முன்னின்று கவனித்தார்கள். இறுதியில் ராட்சத கிரேன் மூலம் தீரனின் பீடத்தில் கல்லையும் சிலையையும் பொருத்தும் பொழுது அன்று இரவு முழுதும் அமைச்சர்கள் முதல் அனைவரும் உடனிருந்து செய்ததை நினைத்தால் ஒற்றுமையாகச் செயல்பட்டால் முடியாதது எதுவும் இல்லை என்றே நினைக்கத் தோன்றுகிறது.

இறுதியாக நான்கு ஆண்டுகால பெருமை மிகு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தில் இருந்து பணியாற்றியதை வாழ்க்கையின் பாக்கியமாகக் கருதுகிறேன். பலரும் தங்கள் சொந்த வாழ்க்கையின் முன்னேற்றத்தை மட்டுமே மையமாக வைத்துச் செயல்படாமல், சமுதாய முன்னேற்றத்திற்காக சிறிது நேரத்தையும், பொருளையும் ஒதுக்கி அனைவருடனும் பழகி, முடிந்த மட்டும் மற்றவர்களுக்கு உதவுவதால் மட்டுமே நமது இனத்தின் ஒட்டு மொத்த முன்னேற்றத்தை நாம் காண முடியும் என்று இந்த நேரத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



# திரு. K.R. அப்பாவு

K.R. அப்பாவு ஆகிய நான் திருச்செங்கோட்டிலிருந்து 1977–ல் சென்னையில் குடிபெயர்ந்து, 1980–ல் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தில் உறுப்பினரானேன். எண்.70. அதேசமயம் அம்மையப்பன் தெருவிலிருக்கும் கட்டிடத்தை வாங்க விலை பேசப்பட்டது. அதற்குண்டான தொகை சேகரிக்கும் முயற்சி பொறியாளர் திரு. K.S. கோவிந்தசாமி தலைமையில் நடந்தது. அன்று என்னால் முடிந்த தொகையாக ரூ. 2000/– நிதியாகத் தந்தேன். பழைய கட்டிடம் வாங்கிய பிறகு அங்கிருந்த குடித்தனக்காரர்களை வெளியேற்றும் பொழுது அவர்கள் கட்டிடத்திலிருந்த தண்ணீர்க் குழாய்கள், மின்சார இணைப்புகளைத் துண்டித்து எடுத்துச் சென்று விட்டார்கள். அது சமயம் தலைவர் திரு. முத்துசாமி I.A.S. அவர்கள் உதவியுடன் குடிநீர் இணைப்பை இரவோடு இரவாக போட்டு முடித்தேன். உயர்திரு. P.A. பொன்னுசாமி தலைமை ஏற்றவுடன் சங்கத்திற்கு நிலையான ஒரு வருமானத்தை உண்டுபண்ண ஏற்பட்ட கருத்தின் அடிப்படையில், கொங்கு இல்லம் கட்ட முடிவெடுக்கப்பட்டது. தலைவர் திரு. S. அருணாசலத்தின் நிர்வாகத்தின் கீழ் கட்டிடம் கட்டும் காலத்தில் பொருளாளராகவும், கட்டிட மேற்பார்வையாளர்களில் ஒருவராகவும், கட்டிட வரவு, செலவு கணக்குகளுக்கும் பொறுப்பேற்று இருந்தேன். கட்டிடம் கட்டி முடித்தபுன், கட்டிடத்தில் நிர்வாகப் பொறுப்பாளராக 3 ஆண்டுகள் இருந்தேன். 1996–ஆம் ஆண்டு சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றேன். தலைவராக இருந்த பொழுது செய்தி மடலின் ஆசிரியராகவும் செயல்பட்டேன். செய்தி மடல் சிறப்பாக எல்லோரும் படிக்கும் வண்ணம் வெளி வந்தது. ஆண்டு தோறும் நடக்கும் குடும்ப விழாவில் எல்லோரும் பங்கு பெறும் வண்ணம் சிறப்பாகவும், சிறந்த மதிய உணவு தரவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

**1998–** ல் நடந்த தேர்தலில் மறுபடியும் தலைவரானேன். அச்சமயம், வெள்ளி விழா கட்டிட நிலத்தை விலை பேசி, வங்கியில் கடன் பெற்று நிலம் பதிவு செய்யப்பட்டது. பதிவிற்குப் பின் நிலத்தில் குடியிருந்த, குடித்தனக்காரர்களை முயற்சி செய்து வெளியேற்றினேன். நிலத்தைக் கையகப் படுத்த, அதனுடைய பட்டா, கார்ப்பரேசன் வரி மாற்றம் எல்லாம், எனது பதவி காலம் முடிந்து, **2000–**ல் நடந்த தேர்தலில் போட்டியிட்டு நான் தோற்றபின், எனது பொறுப்பில் செய்து கொடுத்தேன். **20** ஆண்டுகள் **1980–2000** வரை சங்கத்தின் தீவிர உறுப்பினராக இருந்து, என்னால் முடிந்த கடமைகளைப் பாகுபாடு இன்றிக் கொங்கு இனத்திற்குச் செய்துள்ளேன் என நினைக்கிறேன்.



## திரு. நல்ல கோவிந்தசாமி


2000– ஆம் ஆண்டு நமது சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்ற திரு. நல்ல. கோவிந்தசாமி அவர்கள் சங்கத்தைத் திறம்பட வழி நடத்திச் சென்றார்.

தமிழ்நாடு காவல்துறையில் 36–ஆண்டுகள் ஒப்பற்ற சேவைகள் ஆற்றித் தமிழக முதல்வரின் விருது, பாரதத் குடியரசுத் தலைவரின் விருது ஆகியவற்றைப் பெற்று நாமக்கல் மாவட்ட காவல்துறைத் தலைவராகவும் பணியாற்றி ஓய்வு பெற்ற சிறப்புடையவர்.

தன்னுடைய பணிக்காலத்திலும், சென்னை கொங்கு நண்பர்களுக்கும், வெளியூரில் இருந்து உதவி கேட்டு வரும் மக்களுக்கும் இன்முகத்தோடு உதவி, அவர்களுடைய இன்னல்களைத் தீர்க்கும் பெருந்தகையாளர்.

பணி ஓய்வுக்குப் பின்னும் சமுதாயப்பணியினைத் தொடர்ந்து ஆற்றிவரும் திரு. நல்ல. கோவிந்தசாமி அவர்களை நன்றியுடன் நினைவு கூர்கிறோம்.





**கே.சி.காளியண்ணன்**
தலைவர்

**திரு. ஈ. ஆர். ஈஸ்வரன்**
செயலாளர்

2001 – 2003

சென்னை இராயப்பேட்டையில் “வெள்ளி விழா” கட்டிடம் 23 அறைகளுடன் கிரானைட் கற்களைக் கொண்டு சுமார் ரூபாய் 60 இலட்சத்தில் கட்டி சமுதாயத்திற்கு அர்பணிக்கப்பட்டது.

சென்னை, ஈரோடு நகரங்களில் சங்கத்தின் வரலாற்றிலேயே முதன்முறையாக ஆனந்த மாலை,“சந்தோச மாலை” என்ற இரு நட்சத்திர கலை நிகழ்ச்சிகளை திறம்பட நடத்தி சுமார் ரூ. 35 இலட்சம் நன்கொடை திரட்டியது.

கொங்குச் சமுதாயத்தைச் சேர்ந்த தொழிலதிபர்கள் கொங்கு மாமணி திரு. S.V. பாலசுப்பிரமணியம், கொங்குமாமணி திரு. ஜெம் வீரமணி, சக்தி மசாலா திரு. பி.சி. துரைசாமி, அம்மன் கிரானைட்ஸ், திரு. முத்து இராமசாமி, திரு. S.K. மயிலானந்தன், பி & சி திரு. பெரியசாமி, KPN டிராவல்ஸ் திரு. K.P. நடராஜன் போன்றவர்களிடம் சங்கத்தின் நடவடிக்கைகளை முன்வைத்து அவர்களின் நம்பிக்கையைப் பெற்று சங்கத்தின் வரலாற்றிலேயே தனிமனிதர்களிடம் அதிக நன்கொடை பெற்றது.

வெள்ளிவிழா கட்டிட இடத்திற்காக வாங்கப்பட்ட வங்கிக் கடன் ரூ.20 இலட்சத்தை மொத்தமாக நன்கொடை வசூல் மூலம் திருப்பிச் செலுத்தப்பட்டது.

ஈரோட்டில் அனைத்து மாணவ – மாணவியரின் மேற்படிப்புக்கு ஆலோசனை வழங்கிட, பல பேராசிரியர்களைக் கொண்டு கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது.

சங்கத்தின் “செய்திமடல்” பத்திரிகையைத் தமிழகமெங்கும் உள்ள பல பள்ளிகளின் நூலகங்கள், பொது நூலகங்களுக்கு இலவசமாக அனுப்பி வருவது.

குடும்ப விழா, விளையாட்டு விழாக்களில் பரிசுகள், வழங்கப்பட்ட பதக்கங்கள், உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புகள், அதிர்ஷ்டப் பரிசுகள் போன்றவை நன்கொடை மூலமே வழங்கப்பட்டன. “ஆனந்த மாலை” , “சந்தோச மாலை” போன்ற கலைநிகழ்ச்சி நிதி திரட்டும் போது ஏற்பட்ட போக்குவரத்து, உணவு, தங்கும் விடுதி அறை வாடகை, தொலைபேசி போன்ற செலவுகள், பல சங்கங்களுடன் தொடர்பு கொள்ளும்போது ஏற்பட்ட தொலைபேசி செலவுகள் சங்கத்தின் திட்டங்களை, விழாக்களைச் செயல்படுத்தும்போது ஏற்படும் அலுவலகச் செலவுகள் எனப் பலதரப்பட்ட செலவுகளைச் சங்க நிதியிலிருந்து எடுக்காமல், நிர்வாக குழு உறுப்பினர்களே தனிப்பட்ட முறையில் ஏற்றுக் கொண்டது சங்கத்தின் வரலாற்றில் ஒரு பெருமைக்குரிய செயலாகும்.

கொங்குச் சமுதாயத்தில் பிறந்து, தங்கள் அறிவால், ஆற்றலால், திறமையால், உழைப்பால் வாழ்வில் உயர்ந்து, சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்க்கும் சான்றோர்களுக்கு “கொங்கு மாமணி விருது” என்ற உயரிய விருதை அறிமுகப்படுத்தியது.

அரசு ஒற்றைச் சேர்க்கை மூலம் பொறியியற் கல்லூரிகளில் இடம் கிடைக்காத, ஆனால் படிக்க ஆர்வமுள்ள, வசதியற்ற 8 மாணவ மாணவியருக்கு கொங்கு தாளாளர்கள் நடத்தும் பொறியியற் கல்லூரிகளில், இலவச இடம் ஆண்டுதோறும் பெற்றுத்தருவது.

கொங்குச் சமுதாயத்தைச் சேர்ந்த, தகுதியின் அடிப்படையில் பொறியியற் கல்லூரிகளில் படிக்க வாய்ப்பு கிடைத்தும், கட்டணம் செலுத்த முடியாமல் தவித்த வசதியற்ற மாணவ மாணவியர் 10 பேருக்கு தலா ரூ. 10,000/– கல்வி உதவித் தொகை ஆண்டு தோறும் வழங்கியது.

சென்னையில் நிறுவப்பட்டுள்ள கொங்குச் சமுதாய மாவீரன், இந்திய திருநாட்டின் முதல் சுதந்திரப் போராட்ட வீரன் தீரன் சின்னமலை சிலையை

அலங்கரித்து, பிறந்த நாள், நினைவு நாள் அன்று சமுதாயப் பெரியவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் முறையைக் கொண்டு வந்தது.

தீரண் சின்னமலை உருவம் பொறித்த தஞ்சாவூர் தட்டை அறிமுகப்படுத்தியது.

நாட்டின் பொதுப் பணியில் ஈடுபட்டு, சென்னை தாம்பரத்தில் உள்ள மூளை வளர்ச்சி குன்றிய பள்ளியிலுள்ள ஏழைக் குழந்தைகளுக்கு இலவச சீருடைகள் வழங்கியது.

சென்னை அண்ணா நகரிலுள்ள உடல் ஊனமுற்ற குழந்தைகள் பள்ளிக்கு நாற்காலி, மேஜைகள் இலவசமாக வழங்கியது.

ஈரோடு அரிமா சங்கத்தின் ஒத்துழைப்போடு கிராமங்களில் இலவச கண் சிகிச்சை முகாம்கள் நடத்தியது.

சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கையை கணிசமான அளவில் உயர்த்தியது.

கொங்கு இல்லத்தின் நிர்வாக முறையை சீர்படுத்தி தங்குபவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, சங்கத்திற்கு அதிக நிதி பெற நடவடிக்கை எடுத்தது.

சங்கத்தின் மூலம் மாதாமாதம் இலவசமாக அனுப்பப்படும் “செய்தி மடல்” , பத்திரிகையைப் புதிய பொலிவுடன், ஆனால் மிகக் குறைந்த செலவில் தொடர்ந்து வெளியிடுவது.

ஆண்டு விழாவை முழு நாள் விழாவாக அறிமுகப்படுத்தி, திரைப்பட நடிகர்களின் புகழ்பெற்ற நாடகங்கள், அசைவ உணவு, அதிக அதிர்ஷ்டப் பரிசுகள் எனக் கோலாகலத் திருவிழாவாக நடத்தப்படுவது.

ஈரோட்டில் ஈரோடு இளைஞர் சங்கத்துடன் சேர்ந்து, சுமார் ரூபாய் **3** இலட்சம் செலவில் “மணமக்கள் தேர்வு விழா” நடத்தி எண்ணற்ற கொங்கு மணமக்களை ஒன்று சேர்த்தது.

தீரன் சின்னமலை மணிமண்டபம், அவரின் பிறந்த நாளை அரசு விழாவாக, அறிவிக்கக் கோரி தமிழக அரசிடம் மனுகொடுக்கப்பட்டு, இந்த ஆண்டு முதல் தீரன் சின்னமலை பிறந்த நாளை அரசு விழாவாக அரசு அறிவித்துள்ளது, இந்த நிர்வாகக் குழுவின் சமுதாயப் பணி.

தீரன் சின்னமலை சிலை பராமரிப்பை ஏற்றுக் கொண்டு செயல்படுத்தியது.

ஈரோடு, பெங்களூர், நாமக்கல், சேலம், பாண்டிச்சேரி, நெய்வேலி, தருமபுரி, திருச்செங்கோடு போன்ற பல நகரங்களில் உள்ள சங்கங்களுடன் நல்லதொரு நட்புறவை ஏற்படுத்தி அவர்கள் நடத்தும் விழாக்களில் தவறாமல் பங்குக் கொள்ளும் முறையை ஏற்படுத்தியது.

மேற்கண்ட சாதனைகள் அனைத்தும் இந்தச் செயற்குழுவின் காலகட்டத்தில் நடந்திருந்தாலும், அதற்கான பெருமைகள் அனைத்தும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்திற்கு அடித்தளமிட்ட இதுநாள்வரை வளர்த்து வந்த அந்த அந்த காலகட்டத்தில் அரும்பணி ஆற்றிய முன்னாள் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், பணிகளைச் செவ்வனே செய்திட மனமுவந்து உதவிய நன்கொடையாளர்கள், ஒத்துழைத்த சங்க உறுப்பினர்கள் அனைவரையும் சாரும். இதை ஒரு தனிப்பட்ட எங்களின் சாதனையாக நாங்கள் கருதவில்லை. சங்கப் பொறுப்பில் இது நாங்கள் ஆற்ற வேண்டிய கடமையாகவே கருதுகிறோம்.

## சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின்
# நிரந்தர அறக்கட்டளை

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் நமது சமுதாயத்தில் சாதனை படைத்த பெருமக்களைக் கௌரவிக்கும் பொருட்டு நிரந்தர அறக்கட்டளைகளை 1996 ஆம் ஆண்டு ஆரம்பித்தது. அதற்கு உதவி செய்த கீழ்க்காணும் பெருமக்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

| | பெயர் | அறக்கட்டளை தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திரு.கே.ஆர். அப்பாவு<br>25A, ஸ்ரீபுரம் முதல் தெரு,<br>இராயப்பெட்டை, சென்னை–14<br>GE 5063/ dt 03.09.96. | 10,000/– |
| 2. | திர. பி. தேவராஜன்<br>44, லஸ் அவன்யூ,<br>மைலாப்பூர், சென்னை– 4<br>GE 5062/ dt 03.09.96. | 10,000/– |
| 3. | திரு.என்.வடிவேலு, பி.இ.,<br>216, 42வது தெரு, 8வது செக்டார்,<br>கே.கே.நகர், சென்னை – 78.<br>GE 5070/ dt 03.09.96. | 10,000/– |
| 4. | திரு.எம். முருகேசன்<br>67, போயஸ் கார்டன், எம்.ஜி.எம். இல்லம்<br>சென்னை – 86.<br>GE 5071/ dt 03.09.96. | 10,000/– |

5. திரு.எஸ்.கே. கருப்பண்ணன் 10,000/–
13, சென்டரல் எக்சைஸ் காலனி
ஹாஸ்பிட்டல் ரோடு, சைதாப்பேட்டை,
சென்னை–15.
GE 5068/ dt 03.09.96.

6. திருமதி. மாலா நல்லதம்பி 10,000/–
13/3, ஜெயம்மால் ரோடு,
சென்னை– 18
GE 5066/ dt 03.09.96.

7. திரு.கே. பழனியப்பன் 10,000/–
6, ராஜாச்சார் தெரு, தி.நகர்,
சென்னை – 17.
GE 5067/ dt 03.09.96.

8. திரு. கே.சி. காளியண்ணன் 10,000/–
AA, 86, 'B' அண்ணா நகர்,
சென்னை –40.
GE 5069/ dt 03.09.96.

9. திரு.எம். பொன்னுசாமி 10,000/–
பியூர் செமிக்கல்ஸ்,
செ. 32, H பிளாக், 15வது மெயின் ரோடு,
அண்ணாநகர், சென்னை – 40.
GE 5065/ dt 03.09.96.

10. திரு.கே.ஆர். பாலசுப்ரமணியன் 10,000/–
1/53–I இரண்டாவது தெரு, ஸ்ரீபுரம் காலனி,
பரங்கிமலை, சென்னை – 16.
GE 5064/ dt 03.09.96.

11. திரு.ஆர். செல்லப்பன் 10,000/–

8, விஸ்வேஸ்வபுரம், மைலாப்பூர்,

செ. 32, H பிளாக், 15வது மெயின் ரோடு,

சென்னை – 4.

GE 5075/ dt 12.09.96.

12. Dr. K.R. பாலசுப்ரமணியன் 10,000/–

கேலாக் பிரைவேட் லிட்.,

11–வது கிராஸ் தெரு, சாஸ்திரி நகர்,

சென்னை.

GE 5074/ dt 03.09.96.

குறிப்பு :

1. சங்கம் மற்றும் நன்கொடையாளர் பெயரைச் சேர்த்து நிரந்தர அறக் கட்டளைக்கான தொகையை நிரந்தர வைப்பு நிதியாக வைக்கப்படும்.
2. அதில் இருந்து வரும் வட்டித் தொகையை சாதனையாளர் விருது அளிக்க உபயோகப்படுத்தப்படும்.
3. மேலும் நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன.

## சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

### கௌரவித்த

# கொங்கு மாமணிகள்

கொங்குச் சமுதாயம் பெருமைப்படும் வகையில் பல்வேறு சாதனைகளைப் புரிந்து சமுதாய முன்னேற்றத்திற்காக அரும்பணியாற்றும் பெரியோர்களை ஆண்டுதோறும் கௌரவிக்கும் பொருட்டு 2001–ஆம் ஆண்டுமுதல் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் "கொங்கு மாமணி" என்ற சிறப்பு விருதினை வழங்கி வருகிறது.

## 2001 – ஆம் ஆண்டு விருது பெற்ற கொங்கு மாமணிகள்

**1. திரு. கே.எம். சென்னியப்பன்**

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தை உருவாக்கி, சங்கத்தின் விதிமுறைகள், சட்டதிட்டங்கள் ஆகியவற்றை வகுத்து சங்கம் நல்லமுறையில் செயல்பட பெரும் பங்கு வகித்தும், சங்கத்தின் செயலாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றி சங்கம் வளரப் பெரிதும் காரணமாகவும் இருந்தமைக்காக பாராட்டி 'கொங்கு மாமணி' விருது வழங்கப் பெற்றது.

**2. டாக்டர் பழனி ஜி. பெரியசாமி**

1974, 1975 ஆகிய ஆண்டுகளில் அமெரிக்காவின் தலைசிறந்த கல்வியாளர், பல்கலைக்கழகத்தின் தலைசிறந்த மாணவர் என்ற பட்டங்கள், சென்னை மருத்துவக் கல்லூரியின் Honorary Fellow, பால்டிமோர் பல்கலைக் கழகத்தின் விருது. 1993–இல் இந்திய அரசு வழங்கிய National Unity Award ஆகிய விருதுகளும், நாட்டுக்காகவும், சமுதாயத்திற்காகவும் அவர் ஆற்றிய பணிகளுக்காகவும் 'கொங்கு மாமணி' விருது வழங்கப் பெற்றது.

**3. திரு. ஜெம். R. வீரமணி**

தலைசிறந்த கிரானைட் ஏற்றமதியாளர் விருது, சிறந்த ஏற்றுமதி விருது, தேசிய விருதுகள், மாநில விருதுகள் போன்ற மத்திய, மாநில அரசுகளின் விருதுகளைப் பெற்றமைக்காகப் பாராட்டி 'கொங்கு மாமணி' விருது வழங்கப் பெற்றது.

## 2002 – ஆம் ஆண்டு விருது பெற்ற கொங்கு மாமணிகள்

**1. திரு. S.V. பாலசுப்பிரமணியம்**

பல்வேறு வகையான துறைகளில் ஈட்டிய சாதனைகளுக்காகவும், பல்வேறுபட்ட துறைகளில் வளர்ந்து நமது இனத்தில் மிகுந்த சிறப்புப் பெற்றவராக ஓங்கி உயர்ந்து நின்று சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்தமைக்காகவும், சமுதாய வளர்ச்சியில் அவர் காட்டும் ஈடுபாட்டிற்காகவும் பாராட்டி 'கொங்கு மாமணி' விருது வழங்கப்பெற்றது.

**2. திரு. R. காந்தி**

கொங்கு நாட்டின் பெருமையைச் சென்னையில் நிலைநாட்டியவர். சி. சுப்ரமணியத்தின் சீடர். பேச்சாற்றல் மிக்கவர். நிதிக்காக வாதாடாமல் நீதிக்காக வாதாடுபவர். மனிதநேயர், அஞ்சாநெஞ்சினர், சிறந்த பண்பாளர். திருக்குறளில் அளவற்ற ஈடுபாடுடையவர். எல்லாவற்றிற்கும் மேலாக கவுண்டர் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை கொள்பவர். இத்தகு பண்புகளைப் பாராட்டி 'கொங்கு மாமணி' விருது வழங்கப்பெற்றது.

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

## கௌரவித்த

# சாதனையாளர்கள்

பாராட்டுவதை ஒரு பண்பாகவும், மென்மேலும் சாதனைபுரிய ஊக்குவிக்கும் பொருட்டும் 1995-ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் பல்வேறு துறைகளிலும் சாதனை படைத்து வருவோருக்கு **சாதனையாளர் விருது** வழங்கி பாராட்டி வருகிறோம்.

அந்த வரிசையில் இதுவரை நமது சங்கம் கீழ்க்காணும் 104 சாதனையாளர்களை இனங்கண்டு பாராட்டி கௌரவித்துள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**1995 ஆம் ஆண்டு**

| எண். | பெயர் | | விபரம் |
|---|---|---|---|
| 1. | திரு. **பத்மஸ்ரீ ஆர்.எம்.வாசகம்** | - | துணை வேந்தர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை. |
| 2. | திரு. **R.வீரமணி** | - | தலைவர், ஜெம் கிரானைட்ஸ், சென்னை. |
| 3. | திரு. **பழனி. ஜி. பெரியசாமி** | - | தலைவர், பி.ஜி.பி. தரணி குரூப் நிறுவனங்கள், சென்னை. |
| 4. | திரு. **R.காந்தி** | - | வழக்கறிஞர், சென்னை. |
| 5. | திரு. எம்.மாசி | - | தலைவர், அம்மன் கிரானைட்ஸ், அரூர். |
| 6. | திரு. **செ. தமிழ்மணி** | - | விஞ்ஞானி, பெங்களூர். |
| 7. | திரு. **ஆர். தீனதயாளு** | - | கணிப்பொறி வல்லுநர், ஐ.ஐ.டி, சென்னை. |
| 8. | திரு. **பி. கொங்குவேள்** | - | செஸ் விளையாட்டு வீரர், சென்னை. |

| | | | |
|---|---|---|---|
| 25. | திருமதி மலர் முத்துசாமி | - | தொழில் துறையில் சிறந்த உயர்வுக்காக. |
| 26. | திரு. பி.எஸ்.செங்கோடன் | - | பொதுப்பணி,திருச்செங்கோடு. |
| 27. | திரு. C.குமாரசாமி | - | கல்விப்பணி, ஈரோடு. |
| 28. | திரு. M.முருகேசன் | - | சமூக சேவை, சென்னை. |
| 29. | சிலம்பொலி செல்லப்பன் | - | தமிழ்வளர்ச்சிப் பணி. |
| 30. | திரு. பி. என்.பழனிச்சாமி | - | கல்விப் பணி |
| 31. | திரு. கே.வரதராஜன் | - | மின்சார வாரியம், அரசுப்பணி |
| 32. | திரு. சிற்பி பாலசுப்பிரமணியம் | - | இலக்கியப் பணி |
| 33. | டாக்டர். விஜயகுமார் | - | சிறந்த மருத்துவர். |
| 34. | திரு. கே. முத்து சாமி | - | கொங்குச் சமுதாயப் பணி |
| 35. | திரு. N.கொளந்தசாமி | - | கொங்குச் சமுதாயப் பணி |
| 36. | திரு. S.அருணாசலம் முன்னாள் தலைவர் | - | கொங்குச் சமுதாயப் பணி |
| 37. | திரு. P.தேவராஜன் முன்னாள் தலைவர் | - | கொங்குச் சமுதாயப் பணி |

**1998 ஆம் ஆண்டு**

| | | | |
|---|---|---|---|
| 38. | திரு. M.இராமசாமி | - | அம்மன் கிரானைட்ஸ், அரூர். சிறந்த ஏற்றுமதியாளர். |
| 39. | Dr. ஜனகரத்தினம் | - | கோபி, கல்விப் பணி. |
| 40. | திரு. Dr. நிர்மலா ராமமூர்த்தி | - | ஆராய்ச்சியாளர். |
| 41. | திரு. P.C.துரைசாமி | - | சக்தி மசாலா, சிறந்த தொழில் அதிபர். |
| 42. | திரு. Dr. C.பழனிவேலு | - | சிறந்த மருத்துவர். |
| 43. | திருமதி. செல்லம்மாள் | - | சிறந்த பெண் தொழிலதிபர். |
| 44. | திரு. M.சந்திரசேகரன் | - | சிறந்த தொழிலதிபர் |

| | | | |
|---|---|---|---|
| 9. | செல்வி. **பி.சுமதி** | - | செஸ் விளையாட்டு வீராங்கனை. |
| 10. | Dr. **சி.பழனிவேலு** | - | அறுவைசிகிச்சை நிபுணர், கோவை. |
| 11. | திரு. **R.தெய்வசிகாமணி** | - | விஞ்ஞானி, கல்பாக்கம் |
| 12. | செல்வன். **பி.நரேந்திரன்** | - | டென்னிஸ் வீரன், சென்னை. |

**1996 ஆம் ஆண்டு**

| | | | |
|---|---|---|---|
| 13. | செல்வி. **எம்.நீலா** | - | மருத்துவக் கல்லூரி நுழைவுத் தேர்வில் அதிக மதிப்பெண். |
| 14. | திரு. **எஸ். தனஞ்செயன்** | - | ஐ.ஏ.எஸ். |
| 15. | திரு. **பி. செந்தில்குமார்** | - | ஐ.ஏ.எஸ். |
| 16. | திரு. **வி.சி.பெருமாள்,** IPS | - | ஜனாதிபதி பரிசு |
| 17. | திரு. **ஆர். செல்லப்பன்** | - | சிறந்த இளம் தொழிலதிபர் நியூமெரிக் பவர்சிஸ்டம்,. சென்னை. |
| 18. | டாக்டர். **R.பாலசுப்பிரமணியன்** | - | சிறந்த சமூக சேவை. |
| 19. | திரு. **பி.குமாரசாமி** | - | சிறந்த ஏற்றுமதியாளர், திருப்பூர். |
| 20. | செல்வன் **வி. அரவிந்தன்** | - | பரதநாட்டியம், சென்னை. |
| 21. | திரு. **ஆயி கவுண்டர்** | - | விஞ்ஞானி, பெங்களூர். |

**1997 ஆம் ஆண்டு**

| | | | |
|---|---|---|---|
| 22. | செல்வி **திவ்யா** | - | மருத்துவத் தேர்வில் முதல் இடம் |
| 23. | திரு. **என். செல்வகுமார்** | - | 1987ம் ஆண்டு ஐ.ஏ.எஸ். தேர்வு பெற்றமைக்காக. |
| 24. | திரு. **செங்கதிர்** | - | 1997ஆம் ஆண்டு ஐ.பி.எஸ். தேர்வு பெற்றமைக்காக. |

| | | | |
|---|---|---|---|
| 45. | திரு. **M.பொன்னுசாமி** | - | பியூர் கெமிகல்ஸ்,<br>சிறந்த தொழிலதிபர். |
| 46. | Dr. **ராஜாமணி** | - | சிறந்த ஆராய்ச்சியாளர். |
| 47. | புலவர் **செ. இராசு** | - | சிறந்த கொங்கு ஆராய்ச்சியாளர். |
| 48. | Dr. **தாமோதரன்** | - | சிறந்த தடயவியல் ஆராய்ச்சியாளர். |
| 49. | திரு. **கந்தசாமி** | - | நல்லாசிரியர். |
| 50. | Dr. **அன்பழகன்** | - | சிறந்த ஆராய்ச்சியாளர். |
| 51. | திரு. **மயில்சாமி** | - | சிறந்த தொழிலதிபர். |

**1999 ஆம் ஆண்டு**

| | | | |
|---|---|---|---|
| 52. | திரு. **K.கந்தசாமி** | - | சிறந்த கல்விப் பணி. |
| 53 | Dr. **C.நமச்சிவாயம்** | - | சிறந்த கல்விப் பணி. |
| 54. | Dr. **A.M.சச்சிதானந்தம்** | - | சிறந்த கல்விப் பணி. |
| 55. | Dr. **G.குமாரவேலு**, IFS., | - | சிறந்த வனத்துறைப் பணி |
| 56. | திரு. **K.R.மணி** | - | சிறந்த ஏற்றுமதியாளர். |
| 57. | திரு. **S.V.குமரகுருபரசாமி** | - | சிறந்த ஏற்றுமதியாளர். |
| 58. | Dr. **ராஜ் கவுண்டர்** | - | கணிப்பொறி ஆராய்ச்சி வல்லுநர் |
| 59. | திரு. **பொன்வண்ணன்** | - | திரைப்படத்துறையில் சாதனை |
| 60. | திரு. **C.முத்துசாமி** | - | சிறந்த சமுதாயப் பணி. |
| 61. | திரு. **A.ஈசுவரன்** | - | சிறந்த கல்விப் பணி. |
| 62. | Dr. **V.இராமசாமி** | - | சிறந்த மருத்துவப் பணி. |
| 63. | திரு. **V.பரமசிவம்** | - | சிறந்த ஏற்றுமதியாளர் |
| 64. | திரு. **A.K.வெங்கிடசாமி** | - | தொழிற்துறை |
| 65. | Dr. **C.பழனிவேலு** | - | சிறந்த மருத்துவப் பணி |
| 66. | செல்வி **வினோதினி வாசுதேவன்** | - | கல்விச் சாதனை. |

2000 ஆம் ஆண்டு

| | | | |
|---|---|---|---|
| 67. | திரு. சம்பத் குமார் | - | கிரிக்கெட் வீரர், சென்னை. |
| 68. | திரு. S.நகல்சாமி | - | ஐ.ஏ. & ஏ.எஸ்., சென்னை |
| 69. | செல்வி. ஜெயந்தி | - | வேளாண் பல்கலைகழகம், கோவை விவசாயத்துறையில் சாதனை |
| 70. | திரு. கன்னையன் | - | H.H.E., கோவை. |
| 71. | Dr. மணி | - | சிறந்த மருத்துவர், நாமக்கல். |
| 72. | திரு. K.பழனிசாமி | - | கவின்கேர், சிறந்த தொழில் மேலாண்மை, சென்னை. |
| 73. | திரு. கருப்பன் | - | சிறந்த ஆசிரியர், நாமக்கல். |
| 74. | திரு. K.K. சோமசுந்தரம் | - | ஐ.எப்.எஸ்., சென்னை. |
| 75. | திரு. காளியப்பன் | - | தென்பாண்டியன் போக்குவரத்து, நாமக்கல். |
| 76. | திரு. ஞானசேகரன் | - | சட்டமன்ற உறுப்பினர், வேலூர் |
| 77. | திரு. ஷண்முகம் | - | சாந்தி எலக்ரிகல்ஸ், சென்னை. |
| 78. | திரு. காசி | - | இளம் தொழிலதிபர், ஜலகண்டாபுரம். |
| 79. | Dr. பாலசுப்ரமணியம் | - | உமா கிளினிக், சென்னை. |
| 80. | திரு. முத்துராஜா | - | G.T.P. மார்பில்ஸ், சேலம். |
| 81. | திரு. கோபால் | - | சாதனையாளர். |

2001 ஆம் ஆண்டு

| | | | |
|---|---|---|---|
| 82. | திரு. எஸ்.கே. செங்கோடகவுண்டர், சேலம் | - | சிறந்த தொழிலதிபர். |
| 83. | திரு. கே.பொன்னுசாமி நாமக்கல் | - | சிறந்த தொழிலதிபர். |

| | | |
|---|---|---|
| 84. | திரு. **கா.அரங்கசாமி,**<br>தாராபுரம் | - சிறந்த ஆராய்ச்சியாளர். |
| 85. | திரு. **கே.ஆர்.அப்பாவு,**<br>சென்னை, முன்னாள் தலைவர், | - சிறந்த தொழிலதிபர். |
| 86. | டாக்டர். **எஸ். அசோகன்** | - சிறந்த மருத்துவர். |
| 87. | டாக்டர். **எம்.கந்தசாமி,**<br>நாமக்கல். | - சிறந்த கல்வியாளர். |
| 88. | திரு. **ஆர். செல்வராஜ்,**<br>சென்னை. | - சிறந்த இளம் தொழிலதிபர். |
| 89. | திரு. **ஆர். ராஜேந்திரன்**<br>மேட்டூர். | - சிறந்த சமூக சேவையாளர். |
| 90. | செல்வி. **காஞ்சி கைலாசம்,**<br>சென்னை. | - இளம் விளையாட்டு (நீச்சல்) வீராங்கனை. |

**2002 ஆம் ஆண்டு**


| | | |
|---|---|---|
| 91. | திருமதி **பாரதி செங்கோட்டுவேல்**<br>சென்னை. | - சிறந்த கட்டிட வடிவமைப்பாளர். |
| 92. | திரு. **கே. செல்லமுத்து,**<br>ஒட்டன்சத்திரம் | - விவசாயிகள் நலப்பணி. |
| 93. | அரிமா. **திரு. கே.தனபாலன்,**<br>ஈரோடு | - சிறந்த சமூகசேவைப்பணி. |
| 94. | திரு. **ஆர்.கணேசன்,**<br>சென்னை. | - சிறந்த இளம் தொழிலதிபர். |
| 95. | திரு. **க.கிருஷ்ணமூர்த்தி,**<br>நாமக்கல். | - நல்லாசிரியர் விருது பெற்றவர். |
| 96. | முனைவர். **எஸ்.முத்து,**<br>நாமக்கல் | - தொழில்நுட்ப கல்வி வளர்ச்சிப்பணி |
| 97. | திரு. **கே.பி.நடராஜன்,**<br>சேலம். | - சிறந்த தொழிலதிபர் போக்குவரத்து (KPN) |

| | | |
|---|---|---|
| 98. | திரு. **பி.சி.பழனிச்சாமி,**<br>பெருந்துறை | - சிறந்த வழக்கறிஞர். |
| 99. | திரு. **S. பிரேம்துரை,**<br>திருப்பூர். | - சிறந்த தொழிலதிபர்,<br>ஏற்றுமதியாளர். |
| 100. | திரு. **M. ராமசாமி, இராசிபுரம்** | - வேளாண்மைத்துறை. |
| 101. | பேராசிரியர்<br>Dr. **கே.சண்முகசுந்தரம்,**<br>சென்னை. | - மருத்துவத் துறை. |
| 12. | முனைவர். **இரா.வடிவேலன்,**<br>ஈரோடு. | - இலக்கிய வளர்ச்சிப் பணி |
| 13. | திரு. **எஸ். வரதராஜன்** | - அறிவியல் அறிஞர். |
| 14. | திருமதி. **சி.விஜயலட்சுமி,**<br>சென்னை. | - சிறந்த கல்விப்பணி. |

# 2003 ஆம் ஆண்டின்

# “கொங்கு மாமணிகள்”

## கொங்கு மாமணி



### திரு. D.R. கார்த்திகேயன், I.P.S., (Retd.)

தலைவர் – தேசிய விவசாயிகள் விழிப்புணர்வு இயக்கம் (NAAM)

முன்னாள் இயக்குநர் – CBI & தேசிய மனித உரிமை ஆணையம்

கொங்கு நாட்டில் கோவை அருகில் தொண்டாமுத்தூர் தேவராயபுரம் என்னும் கிராமத்தில் காடை கூட்டத்தைச் சேர்ந்த திரு. N.R. இராமசாமி கவுண்டர் – திருமதி. வள்ளியம்மாள் தம்பதியருக்கு 02.10.1939 அன்று மகனாகப் பிறந்தார். நமது தேசப்பிதா மகாத்மா காந்தியின் பிறந்த தேதியான அக்டோபர் 2ம் தேதியே இவருடைய பிறந்த தேதியாக இருப்பது குறிப்பிடத்தக்கது. இவர் பள்ளிக் கல்வியைக் கோவையிலும், பட்டப் படிப்பை (B.Sc.) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், சட்டப் படிப்பை (பி.எல்.) சென்னையிலும் பயின்று I.P.S தேர்வு பெற்று இந்திய காவல் துறைப் பணியில் சேர்ந்து பல உயர் பதவிகளில் பணியாற்றி பேரும் புகழும் பெற்று ஓய்வு பெற்றவர்.

1964ல் I.P.S அதிகாரியான இவர் கர்நாடக காவல் துறையில் பல்வேறு உயர் பதவிகளை (DGP உட்பட) சிறப்பாக வகித்து, பலரது பாராட்டுக்களையும் பெற்று பின்னர் புதுடில்லியில் சி.பி.ஐ. டைரக்டராக நியமிக்கப்பட்டார். அது சமயம் இந்திய அரசின் சார்பாக ருசியா, ஆஸ்திரேலியா, மலேசியா போன்ற வெளிநாடுகளிலும் சிறப்பாகப் பணியாற்றினார்.

1991ல் ஸ்ரீபெரும்புதூரில் சதிகாரர்களின் திட்டமிட்ட சூழ்ச்சியால் மனித வெடிகுண்டு மூலம் இராஜீவ் காந்தி கொல்லப்பட்டார். உலகை உலுக்கிய அந்தக் கொலை வழக்கைத் துப்புத் துலக்க அமைக்கப் பெற்ற தனி விசாரணைக் குழுவின்

தலைவராக நியமனம் பெற்ற இவர் திறம்படப் பணியாற்றி, உண்மையை உலகுக்கு எடுத்துக் காட்டினார்.

முழு உண்மைகளை, உள்ளதை உள்ளபடி சொன்ன இவரது நடுநிலையையும், ஆற்றலையும் கண்டு உலகே வியந்து பாராட்டியது.

நடுநிலமை; பெருந்தன்மை; நீதிவழுவாமை; சான்றாண்மை ஆகிய நமது கொங்கு இனப்பண்புகளுக்குச் சிகரமாக விளங்கி, சிறந்த முறையில் அரசுப் பணியாற்றி ஓய்வு பெற்ற பின் விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க முழு மூச்சுடன் செயல் ஆற்றத் துவங்கியுள்ளார்.

நமது இந்தியாவில் 75% மக்கள் விவசாயிகள்தான். ஆனால், நிலை என்ன ? “உழுபவன் கணக்குப் பார்த்தால் உழக்கு மிஞ்சாது” , என்பதுதான் அல்லவா ? அன்றும், இன்றும் அதே நிலைதான். விவசாயக் குடும்பத்தில் பிறந்த திரு. D.R. கார்த்திகேயன் அவர்களுக்கு விவசாயிகளின் அவலநிலை நன்கு தெரிந்ததே. அதனால்தான் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற உடனேயே “தேசிய விசாயிகள் விழிப்புணர்வு இயக்கம்” (National Agriculturists Awareness Movement - NAAM) என்ற அமைப்பை உருவாக்கிச் செயல்பட்டு வருகிறார். மிகக் குறுகிய காலத்தில் அவரது சாதனைகள் பின்வருமாறு.

1. தென்னை விவசாயிகள் பயன்பெறும் வகையில் – அரசை வலியுறுத்தி கொப்பரைத் தேங்காய் ஒரு கிலோ ரூ. 33/–க்குக் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்ததால், வெளிச்சந்தையில் வெறும் ரூ. 16/–க்கு (ஒரு கிலோ) விற்ற நிலைமை மாறி 15 நாளில் ரூ. 35/– ஆக மதிப்பு உயர்வு பெற்று இன்று வரை அதே நிலவரம் நிலவுகிறது.
2. கோவை மாவட்டம் அத்திக்கடவு அவனாசி பாசனம் மற்றும் குடிநீர் திட்டத்திற்கு ரூபாய் இருநூற்று எழுபது கோடியை தமிழ்நாடு அரசாங்கத்தை அறிவிக்க வைத்தது.
3. கரும்புக்கு டன் ஒன்றுக்கு விலை ரூ. 50/–ஐ அதிகமாகப் பெற்றுத் தந்தது.
4. உற்பத்தியாகின்ற நெல்லைக் கட்டுப்பாடில்லாமல் நாடு முழுவதும் எடுத்துச் செல்ல அனுமதி பெற்றுத் தந்தது.

5. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தொடர வேண்டும் என்று தீவிரமாக வலியுறுத்த, அந்தக் கோரிக்கைக்காக "NAAM" அமைப்பு சார்பாக சேலத்தில் பிரம்மாண்டமான பேரணியும் மாநாடும் நடத்திக் காட்டியது.

11.05.2003 அன்று நடைபெற்ற அந்தப் பிரம்மாண்டமான பேரணியிலும், மாநாட்டிலும் கட்டுக்கடங்காத கூட்டமாக பல்லாயிரக் கணக்கில் விவசாயிகள் கூடினர். அதே கோரிக்கைக்காக இதற்கு முன்பு சர்வ கட்சியினர் கூட்டியிருந்த கூட்டத்தைப் போல் பதினைந்து மடங்கு விவசாயிகள் "NAAM" அமைப்பு கூட்டிய கூட்டத்திற்குக் கூடியதைக் கண்டு அரசியல் கட்சிகளே ஆச்சரியமடைந்தன! "அரசியல் பின்னணி எதுவுமில்லை; அண்மையில் தான் ஆரம்பிக்கப்பட்டது "NAAM" என்ற விவசாயிகள் இயக்கம்! அதற்குக் கூட்டம் சேராது" என்று ஆருடம் சொன்னவர்கள், பிரம்மாண்டமான பேரணியையும்; மாநாட்டையும் அதன் மாட்சியையும் கண்டு வாயடைத்துப் போனார்கள்! இவரது செயல் திறனும் அவர் தேர்ந்தெடுக்கும் வியூகமும் சிறப்பான தளபதிகளும் அவருடைய வெற்றிக்கு அடித்தளமாக அமைகின்றன.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"


என்பதற்கேற்ப சிறந்த செயல்திறன் மிக்க தலைவர்களை நாடு முழுதும், நியமித்து சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள்.

அமெரிக்கா, இங்கிலாந்து, துருக்கி, ருசியா முதலிய நாடுகளுக்குச் சென்று வந்திருக்கும் இவர், மனித உரிமைக் குழுவின் (National Human Rights Commission) தலைவராகவும் திறம்படப் பணியாற்றியுள்ளார்.

ஆன்மீகத்திலும், யோகப் பயிற்சியிலும் ஆர்வ மிக்கவர்.

உலகம் வியக்கும் அன்னாரின் சாதனைகளைப் பாராட்டியும், விவசாயிகளின் நலனுக்காக தனது ஓய்வுக்காலத்தை அர்ப்பணித்திருக்கும் தன்னலமற்ற சேவையைப் பாராட்டும் முகமாகவும் 'கொங்கு மாமணி' என்னும் இச்சிறப்பு விருதினை வழங்குவதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

## கொங்கு மாமணி



# திரு. R. தேவராசன்

மாநிலத் தலைவர்

கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவை

நாமக்கல் மாவட்டம் தோளூர் கிராமம் சாத்தம்பூர் விளையன் கூட்டத்தைச் சாந்த திரு. போத்தி, இராமசாமி கவுண்டர் – திருமதி. காளியம்மாள் தம்பதியருக்கு இரண்டாவது மகனாக 08.01.1941 அன்று பிறந்தார். தனது 7வது வயதில் தகப்பனார் இறந்ததால் குடும்பச் சூழ்நிலை காரணமாக ஆரம்பப் பள்ளிப்படிப்பிற்கு மேல் தனது படிப்பைத் தொடரவில்லை. விவசாயத்தில் ஈடுபட்டுருந்த இவருக்கு தனது 18வது வயதில் தாயாரும் இறந்துவிட்டார். விவசாயத்தில் உரிய பலன் இல்லை என்று கருதி 1960ம் ஆண்டு நாமக்கலில் மோட்டார் ஓட்டுனர் உரிமம் எடுத்துக் கொண்டு தொழில் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு 1961ம் ஆண்டு திருச்சிக்கு வந்தார். திருச்சியில் ஒரு பஸ் கம்பெனியில் தாய்மாமன் திரு. சங்கரன் அவர்களின் ஆதரவோடு தனது வாழ்க்கையைத் தொடங்கினார். சிறிது காலத்திற்குப் பிறகு ஓட்டுனராகப் பணிபுரிய வாய்ப்பு கிடைத்தது.

தனது கடின உழைப்பால் 1965ம் ஆண்டு சொந்தமாக ஒரு லாரி வாங்கி அதில் தானே ஓட்டுனராகச் செயல்பட்டார். மோட்டார் தொழிலில் ஈடுபட்டிருந்தபோதே 1967ம் ஆண்டு சிறிய அளவில் அரசு நிறுவணங்களில் சிவில் காண்ட்ராக்ட் வேலை எடுத்து செய்யத் தொடங்கினார். கடின உழைப்பாலும், விடா முயற்சியாலும், வேலை செய்யும் அரசுத் துறைகளில் கிடைத்த நற்பெயராலும் சிவில் தொழிலில் படிப்படியாக நல்ல வளர்ச்சியைக் கண்டார். இதன் காரணமாக 1982ம் ஆண்டு அகில இந்திய கட்டுனர் சங்க திருச்சி மையத்தின் பொருளாளராகத் தேர்வு

செய்யப்பட்டார். பின்பு செயலாளராகவும், துணைத் தலைவராகவும் செயல்பட்டு, **1988–89**ம் ஆண்டு கட்டுனர் சங்க திருச்சி மையத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டு, அன்றைய தமிழக அமைச்சர் திரு.கே.என். நேரு அவர்கள் மற்றும் திருச்சி மாவட்ட ஆட்சியர் ஆகியோரது முன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

மேலும் திருச்சி மாவட்ட லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகவும், திருவெறும்பூர் வட்டார மண்பாடி லாரி உரிமையாளர் சங்கத் தலைவராகவும், தமிழ்நாடு பஸ் உரிமையாளர்கள் சம்மேளனத்தின் உறுப்பினராகவும், கீழ்சாத்தம்பூர் செல்லாண்டியம்மன் கோயில் விளையன் கூட்ட நற்பணி மன்றத் தலைவராகவும் இருந்து வருகிறார். ஆன்மீகத்தில் ஈடுபாடு குறைந்தவராக இருந்தாலும் நான்கு கோயில்கள் கட்ட பேருதவியாக இருந்துள்ளார். மேலும் இளைஞர்களுக்கு விளையாட்டில் ஆர்வத்தைத் தூண்டும் விதத்தில் **1984–**ம் ஆண்டு முதல் 'டேக்–வன்–டோ' (தற்காப்புக் கலை) அமைப்பின் அகில இந்தியத் தலைவராக இருந்து வருகிறார்.

கொங்குச் சமுதாயத்தின் மீது மட்டற்ற சமுதாயப் பற்றுள்ள காரணத்தால் திருச்சியில் இருக்கும் கொங்குக் குடும்பங்களை ஒன்றிணைத்து **1975**ம் ஆண்டு திருச்சி கொங்கு நண்பர்கள் சங்கத்தைத் தோற்றுவித்ததில் இவருக்குப் பெரும்பங்கு உண்டு. திருச்சி கொங்கு நண்பர்கள் சங்கத்தில் பல ஆண்டுகளாகத் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றிருந்த போது திருச்சியிலிருக்கும் கல்லூரிகளில் படிக்கும் கொங்கு சமுதாய மாணவ, மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் திருச்சி அனைத்துக் கல்லூரி கொங்கு மாணவ, மாணவியர்கள் சங்கத்தை ஏற்படுத்தி வைத்து அதற்குப் பல ஆண்டு காலமாகக் காப்பாளராக செயல்பட்டார். இன்றுவரை ஆண்டுதோறும் திருச்சி கொங்கு நண்பர்கள் சங்க ஆண்டு விழாவை சிறப்பாக நடத்தி கொங்குச் சமுதாய மாணவ, மாணவியருக்குப் பரிசுப் பொருட்கள் வழங்கியும், தகுதி உள்ள ஏழை எளிய கொங்கு மாணவ மாணவிகளுக்குக் கல்வி ஊக்கத் தொகை அளித்தும் அவர்களுக்குச் சமுதாயப்பற்றை ஏற்படுத்தி வருகிறார்.

திருச்சி கொங்கு நண்பர்கள் சங்கத் தலைவராக இருந்தபோது **1988**ம்

ஆண்டு நமது கொங்கு இனத்திற்கு ஏற்பட்டிருந்த நெருக்கடியின் காரணமாக திரு. அரூர் முத்துக் கவுண்டர் அவர்கள் தலைமையிலும், திரு. கோவை செழியன் அவர்கள் முன்னிலையிலும் சென்னை அசோகா ஹோட்டலில் அனைத்து கொங்கு நண்பர்கள் சங்க பிரதிநிதிகளும் ஒன்று கூடி கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவை என்ற அமைப்பை ஏற்படுத்தினார்கள். அதன் தலைவராக திரு. கோவை செழியன் அவர்களும், பேரவைத் துணைத் தலைவராக திரு. R. தேவராசன் அவர்களும் தேர்வு செய்யப்பட்டனர்.

கொங்கு வேளாள கவுண்டர்கள் பேரவைத் தலைவரும், கொங்கு மாத இதழின் நிறுவனருமான அமரர் கோவை செழியன் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, பேரவையின் அதிகாரபூர்வ இதழாக வெளிவரும் “கொங்கு” என்ற மாத இதழை 1992ம் ஆண்டு முதல் இன்றுவரை பல இன்னல்களுக்கிடையிலும் தவறாமல் வெளியிட்டு வருகிறார். கொங்குச் சமுதாய மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஈரோடு, நாமக்கல், கரூர் மற்றும் சென்னையில் பேரவையால் நடத்தப்பட்ட மாநாடுகளின் வெற்றியில் இவருக்குப் பெரும்பங்கு உண்டு.

பேரவையின் தலைவர் அமரர் கோவை செழியன் அவர்கள் மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றபோது பேரவையின் பொறுப்பை இவரிடம் அதிகார பூர்வமாக ஒப்படைத்தார். அன்னாரின் மறைவுக்குப் பிறகு ஏப்ரல் 2000ம் ஆண்டு பேரவையின் மாவட்ட நிர்வாகிகளால் கரூரில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் பேரவையின் மாநிலத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார். இவர் பொறுப்பேற்ற பிறகு மத்திய அமைச்சர் அரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களை சிறப்பு விருந்தினராக அழைத்து பழனியில் திண்டுக்கல் மாவட்ட மாநாடு நடத்தினார். அதன்பிறகு 2000ம் ஆண்டு ஈரோட்டில் அப்பேரவையின் மாபெரும் 5வது மாநில மாநாட்டை நடத்தினார். கடந்த சட்டமன்றத் தேர்கலில் அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி பெருந்துறை சட்டமன்றத் தொகுதியைப் பெற்று, ஓய்வு பெற்ற காவல்துறை கண்காணிப்பாளர் திரு. நல்ல கோவிந்தசாமி அவர்களை வேட்பாளராகத் தேர்வு செய்து அந்தத் தேர்தலில் முழு பொறுப்பேற்றுப் பாடுபட்டார்.

திருச்சியில் கொங்கு நண்பர்கள் சங்கக் கல்வி அறக்கட்டளை ஒன்றை நிறுவி பெண்களுக்கான கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்க இடம் வாங்கி இருப்பதில் இவருக்குப் பெரும்பங்கு உண்டு. திருச்சி கொங்கு நண்பர்கள் பலரின் தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி புரிந்துள்ளார். உதாரணமாக பஸ், கல் உடைக்கும் இயந்திரம் (கிரசர்), சுடு கலவை எந்திரம், டயர் ஏஜென்சி போன்ற பல தொழில்களைக் கூட்டாக நடத்தி பலரும் பயன்பெறச் செய்துள்ளார் என்ற பெருமை இவருக்கு உண்டு.


திரு. R. தேவராசன் – திருமதி பழனியம்மாள் தம்பதியருக்கு இரு பெண்மக்களும், ஒரு மகனும் உள்ளனர். மூவருக்குமே திருமணமாகி விட்டது.

நம்மவரிடையே “திருச்சி தேவராசன்” என்று அன்போடு அழைக்கப்படும் இவர் நம் கொங்கு இன மக்கள் ஒற்றுமைக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் அயராது தொடர்ந்து பாடுபட்டு வருகிறார்.

அன்னார் அவர்கள் கொங்குச் சமுதாய முன்னேற்றத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துள்ளார் என்று சொன்னால் அது மிகையாகாது.

அவருடைய மேன்மையான இப்பணியினைப் பாராட்டி அன்னார் அவர்களுக்கு ‘கொங்கு மாமணி’ விருதினை வழங்குவதில் சங்கம் பெருமைப்படுகிறது.

## கொங்கு மாமணி



# G.R. சுந்தரவடிவேல்

திரு. G.R. சுந்தரவடிவேர் 1941–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 22–ம் தேதி நாமக்கல் மாவட்டம் காளிப்பட்டியில் பிறந்தார்.

| | | |
|---|---|---|
| தந்தை | : | G. ராமசாமிக் கவுண்டர் |
| தாயார் | : | பெரியக்காள் |
| வீட்டு முகவரி | : | 16/26, அகத்தியர் தெரு, சாலிகிராமம்,<br>சென்னை – 93. தொ.பே. 23622354 |

இவர் மல்லசமுத்திரம் உயர்நிலைப் பள்ளியில் பயின்ற பின் கல்லூரிப் படிப்பினை சென்னனையில் விவேகானந்தா கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி லயோலா கல்லூரி ஆகியவற்றில் பயின்று, கல்லூரியின் முதல் மாணவனாக M.Com பட்டத்தைப் பெற்றார்.

ஓராண்டு காலம் சென்னை லயோலா கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய பின் 1964–ம் ஆண்டு இந்தியன் வங்கியில் Probationary Officer ஆகச் சேர்ந்தார். கல்வித் தகுதியையும் மேன்மேலும் உயர்த்திக் கொண்டார். C.A.I.I.B. தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றுத் தங்கப் பதக்கம் பெற்றார். B.G.L. சட்டக் கல்வி பட்டம் பெற்றார். வங்கிப் பணியில் இந்தியாவின் பல பகுதிகளிலும் பணியாற்றி, கிளை மேலாளர், முதன்மை மேலாளர், பிராந்திய மேலாளர், மண்டல மேலாளர் என்று படிப்படியாக பதவி உயர்வு பெற்றார்.

1987–ஆம் ஆண்டு ஆங்கிலேய நாட்டு அரசினரால் இந்தியாவிலேயே

முதன் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கி அதிகாரியாக மேற்படிப்பிற்கும் பயிற்சிக்கும் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார். அங்குச் சென்று லண்டன் மாநகரில் உள்ள National West Minister Bank - ல் பயிற்சி பெற்றார். அதோடு GLASGOW - ல் உள்ள STRATHCLYDE BUSINESS SCHOOL – ல் DEVELOPMENT BANKING படிப்பையும் முடித்தார். 1994–ஆம் ஆண்டு இந்தியன் வங்கியின் பொது மேலாளராகப் பதவி உயர்வு பெற்றார்.

1995–ஆம் ஆண்டு மீண்டும் வங்கி உயர் பயிற்சிக்காக அமெரிக்கா சென்றார். பெருமை பெற்ற WORLD TRADE CENTER - நியூயார்க்கில் நான்கு வார பயிற்சி பெற்றார். வங்கிப் பணி சம்மந்தமாக அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து, லக்ஸம்பர்க் போன்ற மேலை நாடுகளிலும் கிழக்காசிய நாடுகளான சிங்கப்பூர், ஹாங்காங், பாங்காக் முதலிய நாடுகளுக்கும் சுற்றுப்பயணம் செய்ததோடு பல பயிற்சி அரங்கங்களிலும் பங்கேற்றுள்ளார்.

1997–ம் ஆண்டு இந்திய அரசு, நிதித்துறை இவரை EXECUTIVE DIRECTOR-ஆக பதவி உயர்வு செய்து அரசு வங்கியான யூனைடெட் வங்கியின் EXECUTIVE DIRECTOR - ஆக ஏப்ரல் 1997–ல் நியமித்தது. 2001–ம் ஆண்டு அவ்வங்கித் தலைவராகப் பணிபுரிந்தார்.

இவரது துணைவியார் திருமதி வசுமதி முதுகலைப் பட்டதாரி ஆசிரியராக சென்னை பிரசிடென்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் பணிபுரிகிறார். இவர்களது மகனும், மகளும் அமெரிக்காவில் மருத்துவர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர். முன்னாள் E.C. Member உயர்திரு. R. செங்கோட்டையன் B.E. (Hons), B.L., Ex Chief Engineer, TNEB அவர்களது புதல்வன் திரு. S. செந்தில்குமரன் (CUMMINS, U.S.A) இவரது மருமகனாவார்.

திரு. சுந்தரவடிவேல் சிறந்த வங்கி அதிகாரியாக, எளிமைக்கும், நற்பண்புகளுக்கும் பாத்திரமானவர். வங்கியின் சேவையை ஏழை எளியவர்களுக்கும், குறிப்பாக விவசாயப் பெருமக்கள், கிராம கலை வல்லுநர்கள்,

தொழில் முனைவோர் ஆகியோருக்கு மிகப் பெரிய அளவில் சென்று சேரும்படியாகப் பணியாற்றியவர். வங்கியின் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அவர்களது உண்மைத் தேவைகளுக்கேற்ற சேவை சென்றடையும் நோக்கில் முனைப்பாக இருப்பவர். ரிசர்வ் வங்கியின் சட்ட திட்டங்களுக்குட்பட்டு வங்கியின் சேவை அனைத்து மக்களுக்கும் உடனடியாக தங்கு தடையின்றிக் கிடைக்க வேண்டுமென்ற குறிக்கோளோடு பணிபுரிபவர்.

ரிசர்வ் வங்கியும், இந்திய அரசும் இவரது சிறந்த சேவையை மனதிற்கொண்டு செப்டம்பர் 2001–லிருந்து கேரள மாநிலம், லட்சத்தீவுகள் உள்ளடங்கிய பகுதிக்கு BANKING OMBUDSMAN ஆக பணியில் நியமித்துள்ளது.

பணியில் இருந்தாலும் பணி ஓய்வு பெற்ற பின்னரும் இவரது சேவை என்றென்றும் சிறந்து விளங்கிட வாழ்த்துகிறோம்.

அன்னார் ஆற்றிய அரும்பணிகளைப் பாராட்டியும், நமது இனம் பெருமைப்படும் வகையில் ஓங்கி உயர்ந்து, நமது சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்தமைக்காகவும் சங்கம் ‘கொங்கு மாமணி’ விருதினை வழங்கி சிறப்பித்து மகிழ்கிறது.

# 2003 ஆம் ஆண்டின்

# “சாதனையாளர்கள்”


# 2003 ஆம் ஆண்டு

## "சாதனையாளர் விருது"

## பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| திரு. நல்ல கோவிந்தசாமி | - சென்னை | சிறந்த சமுதாயப்பணி. |
| திரு. K.நல்லியப்பன் | - சென்னை | சிறந்த தொழிலதிபர். |
| திரு. J.P.லியோ கணேஷ் | - சென்னை | சிறந்த சமுதாயப்பணி. |
| திரு. 'தங்கமணி' P.M.பழனிசாமி கவுண்டர் | - புதுப்பாளையம் | சிறந்த சமூகப்பணி. |
| Dr. K.V.காளியப்பன் | - சென்னை | சிறந்த பேராசிரியர்/ ஆராய்ச்சியாளர். |
| Dr. R.பாலசுப்பிரமணியன் | - சென்னை | சிறந்த பேராசிரியர். |
| Dr. K.R.பழனிசாமி | - சென்னை | சிறந்த மருத்துவர். |
| திரு. செ.நல்லசாமி | - அரச்சலூர் | சிறந்த விவசாயிகள் முன்னேற்றப் பணி. |
| திரு. M.சிவப்பிரகாசம் | - நாமக்கல் | தேசிய நல்லாசிரியர் விருது. |
| திரு. R.சாய்நாதன் | - ஈரோடு | சிறந்த சமூகப்பணி. |
| திரு. S.ஜெயவேலன் | - பெங்களூர் | சிறந்த சமுதாய முன்னேற்றப்பணி. |
| திரு. K.சிவலிங்கம் சகோதரர்கள் | - அந்தியூர் | சிறந்த கல்விப்பணி. |
| திரு. V.அன்பழகன்/V.சுந்தரேசன் | - சேலம் | சிறந்த தொழிலதிபர். |
| திருமதி Dr. உமா செல்வராஜ் | - சேலம் | சிறந்த சமூக சேவகி. |
| திருமதி Dr. R.சாந்தி | - கோவை | சிறந்த மண்ணியல் மற்றும் வேளாண் வேதியல் விஞ்ஞானி. |

# கொங்கு சாதனையாளர்



## திரு. நல்ல கோவிந்தசுவாமி, த.கா.ப.

மாவட்ட காவல்துறைத் தலைவர் (ஓய்வு)

வீட்டு எண். 83, ஐந்தாவது பிளாக், 4வது மெயின் ரோடு,

அண்ணாநகர், சென்னை – 600 040.

திரு. நல்ல கோவிந்தசுவாமி அவர்கள் 19–08–1940 அன்று, ஈரோடு மாவட்டம், பள்ளபாளையம் என்ற கிராமத்தில் திரு. நல்லசுவாமி – திருமதி தங்கம்மாள் தம்பதியருக்கு கண்ணன் குலச்செல்வனாகப் பிறந்தார். சித்தோட்டில் பள்ளிக்கல்வியையும், கோவை அரசினர் கலைக்கல்லூரியில் பட்டப்படிப்பையும் முடித்து 1962ம் ஆண்டு காவல் துறையில் சப்இன்ஸ்பெக்டராகச் சேர்ந்தார். நம் இனத்திற்கே உயரிய அப்பழுக்கற்ற தன்மையோடு, நேர்மையாகப் பணி புரிந்து காவல்துறையின் உயரிய விருதுகளான, தமிழக முதல்வரின் விருது, பாரதக் குடியரசுத் தலைவரின் விருது ஆகியவற்றைப் பெற்றார். 36 ஆண்டுகள் ஒப்பற்ற பணி ஆற்றி, இறுதியாக நாமக்கல் மாவட்ட காவல்துறைத் தலைவராகப் பணியாற்றி 1998ல் ஓய்வு பெற்றார்.

தன் தாய்மாமன் மகள் கூரைக்குலச்செல்வி சரஸ்வதியை 1965ம் ஆண்டு மணந்தார். இவர்களுக்கு கலையரசி என்ற மகளும், அமெரிக்கத் திருநாட்டில் பணி புரியும் செந்தில்குமார், தேவ் ஆனந்த் என்ற இரு மகன்களும் இருக்கிறார்கள். மூவருக்கும் திருமணம் ஆகிவிட்டது.

1965ம் ஆண்டு முதல் நமது கொங்கு நண்பர்கள் சங்கச் செயல்பாடுகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். சங்கத்தில் செயற்குழு

உறுப்பினராகவும், 2000 ஆண்டு சங்கத்தின் தலைவராகவும் திறம்படப் பணியாற்றியுள்ளார். சென்னை வாழ் கொங்குச் சொந்தங்களின் இல்லங்களில் நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு, தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து வருகிறார்.

ஓய்வுக்குப்பின், சென்னை தேனாம்பேட்டையில் உள்ள ஸ்டெர்லிங் நிறுவனத்தில் பாதுகாப்பு ஆலோசகராகவும், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் அமைந்துள்ள "சுபஸ்ரீ பயோ எனர்ஜீஸ் அன்ட் பிரைவேட் லிமிடெட்" என்ற நிறுவனத்தின் டைரக்டராகவும் பணி புரிந்து வருகிறார்.

"இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள"
என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப

குலப்பெருமையை வாழ்வில் கடைப்பிடித்து, எங்கு வாழ்ந்தாலும் பிறந்த மண்ணும், சார்ந்த இனமும், வாழ்கின்ற நாடும் வளர்ந்து வான்புகழ் தேட, தாய் வளர்த்த பண்பு மறவாது, வளரும் அன்பு குறையாமல் வாழ்ந்து வருகிறார்.

"நவில்தொறும் நூல் நயம் போலும் பயில்தொறும்

பண்புடையாளர் தொடர்பு"

என்ற வள்ளுவர் வாக்கிற்கு, தன்னை உவமையாக்கிக் கொண்டு

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தலின்
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்
அதனினும் சிறந்தது"


என்ற மகாகவி பாரதியின் வாக்கிற்கிணங்க, தான் பிறந்த ஈரோடு மாவட்டத்தில், தன் இல்லாளின் பெயரில் அமைந்த சரஸ்வதி நகரில், சரஸ்வதி வித்யா நிகேதன் உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி, மெட்ரிக்குலேசன் பள்ளி, இவற்றை நமது கொங்கு இனச் சொந்தங்களோடு சேர்ந்து 2001ல் துவக்கி தற்போது

சுமார் 1000 குழந்தைகளுக்குக் கல்விவசதி அளித்து வருகிறார்.

"நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே;

நாட்டுக்கு நீ என்ன செய்தாய் என்று சிந்தி"

என்ற முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி திருமிகு. கென்னடி அவர்களின் அறிவுரைக்கேற்ப, கொங்கு இன வளர்ச்சிக்காக, சேவைகள் செய்து நல்ல பல சமுதாயப் பணிகளை ஆற்றியமைக்காக அன்னார் அவர்களுக்கு "கொங்கு சாதனையாளர்" விருதினை வழங்குவதில் சங்கம் பெருமையடைகிறது.



## திரு. K. நல்லியப்பன், B.Sc., D.B.M.,

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், முத்துகாளிப்பட்டி கிராமத்தில் திரு. கைலாச கவுண்டர் – திருமதி அரமாயி தம்பதியருக்கு 05.10.1948அன்று மகனாகப் பிறந்து தனது பள்ளிப்படிப்பை இராசிபுரம் அரசினர் உயர்நிலைப்பள்ளியிலும், பட்டப்படிப்பை வடஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியிலும், DBM பட்டயப் படிப்பை சென்னை பல்கலைக்கழகத்திலும் படித்துள்ளார். இவர் கண்ணன் கூட்டத்தைச் சேர்ந்தவர்.

1976ம் ஆண்டு சென்னைக்கு வந்து ஸ்ரீ இராமச்சந்திரா நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தை நிறுவிய திரு. N.P.V. இராமசாமி உடையார் அலுவலகத்தில் பொது மேலாளராகப் பணிபுரிந்தார். அவருக்கு மிகவும் நெருங்கியவராகவும், குடும்பத்தில் ஒருவராகவும் இன்றும் திகழ்கிறார்.

1980ம் ஆண்டு விஜயா பெஸ்ட்டிசைட்ஸ் என்ற பெயரில் பூச்சி மருந்து தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவி குறுகிய காலத்திலேயே தலைசிறந்த நிறுவனமாக மாற்றினார். விஜய் பெர்டிலைசர்ஸ், புவனேஸ்வரி பல்வரைசிங் மில்ஸ், ராசிமினரல்ஸ் (பி) லிட், ஏர் போம் இன்டஸ்ட்ரீஸ் (பி) லிட் போன்ற தொழிற்சாலைகளையும் நிறுவி சிறப்பாக நடத்தி வருகிறார். விஜய் (LPG) கேஸ் ஏஜென்சீஸ் மூலம் சென்னை நகரில் உள்ள பெரிய ஹோட்டல்களுக்கு கேஸ் சப்ளை செய்து வருகிறார்.

1986 ஆண்டு விஜயா கன்ஸ்டிரக்சன்ஸ் என்ற கம்பெனியை ஆரம்பித்து கட்டுமானத் தொழிலில் சென்னை அண்ணாநகரில் 200க்கும் மேற்பட்ட அழகான கட்டிடங்களைக் கட்டி பலரின் பாராட்டைப் பெற்றுப் பிரபலமானார்.

சென்னை அண்ணாநகரில் முக்கியச் சாலைகளில் பல பெரிய வணிக வளாகங்களைச் சொந்தமாகக் கட்டி நிர்வகித்து வருகிறார். சென்னை அண்ணாநகரில் மிகப் பெரியதும் பிரபலமானதுமான விஜய் ஸ்ரீமஹால் ஏ/சி திருமண மண்டபத்தையும் மற்றும் 3 பெரிய திருமண மண்டபங்களையும் ஒரு லட்சம் சதுர அடியில் ஒரே வளாகத்தில் நிறுவி, தன்னுடைய மேற்பார்வையில் சிறப்பாக நடத்தி வருகிறார்.

இவருடைய மனைவி திருமதி N. வடிவழகி, M.Sc., B.Ed., படித்துள்ளார். இவர்களுக்கு இரண்டு மகன்கள். மூத்த மகன் திரு. N. விஜய்கிருஷ்ணன் லண்டனில் BA (Hons) Mkt., Mgt., M.B.A (U.K) படித்துவிட்டு தன் தந்தைக்கு உதவியாக உள்ளார். இளைய மகன் விஜய பாலாஜி இந்த ஆண்டு Hotel Management Degree படிப்பதற்கு ஸ்விட்சர்லாந்து செல்ல உள்ளார்.

கடின உழைப்பால் அன்னார் அவர்கள் பல்வேறு சமுதாயப் பணிகளையும் ஆற்றி வருகிறார்கள்.

தனது சொந்த முயற்சியால் இன்று பல்வேறு தொழில் நிறுவனங்களை உருவாக்கி திறம்பட நடத்திவரும் அன்னாரின் சாதனையைப் பாராட்டி ''கொங்கு சாதனையாளர்'' விருதினை வழங்குவதில் சங்கம் மகிழ்ச்சியடைகிறது.

முகவரி :

திரு. K. நல்லியப்பன், B.Sc., D.B.M.,

"விஜய் இல்லம்"

W-99, இரண்டாவது அவென்யூ,

அண்ணாநகர்,

சென்னை – 600 040.



## திரு. J.P. லியோ கணேஷ், B.A., B.L.,

A-10- ஈடண்டர் நகர்,

சைதாப்பேட்டை, சென்னை – 600 015.

தொலைபேசி எண் : 24332079

சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரம் மலையம்பாளையம் கிராமத்தில் திரு. வ. பழனியப்ப கவுண்டர்– திருமதி பாப்பாயம்மாள் தம்பதியருக்கு 09.08.1940 அன்று, முதல் மகனாகப் பிறந்தார். ஈசன் குலத்தைச் சார்ந்த இவர்களது குலதெய்வம் ஈங்கூர் ஸ்ரீதம்பிராட்டி அம்மன் ஆகும்.

பெற்றோர் சூட்டியிருந்த "P. கணேசன்" என்ற தனது பெயரை, புதுமை, புரட்சி, ஃபேஷன் கருதி உரிய விதிமுறைகளைப் பின்பற்றி தனது 36வது வயதில் "J.P. லியோ கணேஷ்" என்று மாற்றம் செய்து கொண்டவர்.

ஜலகண்டாபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் 1957ல் S.S.L.C., தேர்ச்சி பெற்றபின் T.N.P.S.C., மூலம் தேர்வாகி அரசுப் பணியில் நியமனம் பெற்று, பள்ளிக் கல்வித்துறையில் 30.12.1960 அன்று எழுத்தராகச் சேர்ந்தார். அது முதற்கொண்டு 1977 வரை அத்துறையில் பணியாற்றிய பின் கல்லூரிக் கல்வித்துறைக்கு மாற்றப்பட்டு, உதவியாளர், கண்காணிப்பாளர், நிதி அலுவலர் என்று படிப்படியாக உயர்வு பெற்று, பணியாற்றி 28.02.1998 அன்று அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

அரசுப் பணியில் இருந்த சமயம் T.N.G.O., யூனியன் இயக்கப் பணிகளில்

பங்கேற்றுச் செயல்பட்டவர். அதன் காரணமாக 1982ல் சிறைக்கும் சென்று மீண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது கல்வித் தகுதியை உயர்த்திக் கொள்ள, மத்தியப்பிரதேச இன்டர்மீடியட் (1965) தேர்ச்சி பெற்றபின், டில்லி பல்கலைக் கழக அஞ்சல் வழிக் கல்வித் திட்டத்தில் சேர்ந்து 1971–ல் படித்து B.A. பட்டம் பெற்றார். சென்னை சட்டக் கல்லூரியில் மாலை நேரக்கல்லூரியில் சேர்ந்து படித்து (1992–95 batch) B.L. பட்டமும் பெற்றுள்ளார்.

இவரது துணைவியார் திருமதி K. சின்னம்மாள் தூரன்குலத்தில் உதித்தவர். திருச்செங்கோடு சீத்தாரம்பாளையம் இவரது சொந்த ஊராகும். சென்னை கோட்டையில் உள்ள தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் 1980ல் பணி நியமனம் பெற்று தற்போது பிரிவு அலுவலராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். சுமார் 6000 பேருக்கு மேல் பணியாற்றும் அந்த அலுவலகதில் சேர்ந்த நமது கொங்கு வேளாளர் இனத்து முதல் பெண்மணி என்ற பெருமைக்குரியவர்.


திரு. J.P. லியோகணேஷ் – திருமதி K. சின்னம்மாள் தம்பதியருக்கு ஒரு மகளும், ஒரு மகனும் உள்ளனர். மகளுக்குத் திருமணமாகிவிட்டது. மகன் B.E., பட்டதாரி. அடையாறில் உள்ள தனியார் நிறுவனதில் பணியாற்றுகிறார். இவருக்குத் திருமணம் ஆக வேண்டியுள்ளது.

அரசுப் பணிநிமித்தம் இடமாற்றம் செய்யப்பட்டு திரு. J.P. லியோகணேஷ் 1978ல் சென்னைக்கு வந்து சேர்ந்தது முதலே நமது சங்கத்திலும் உறுப்பினராக இருக்கிறார். (எண். 222) அது முதற் கொண்டு 2000 வரையிலும் இடைப்பட்ட கால கட்டத்தில் சுமார் பத்து ஆண்டுகள் நமது சங்கச் செயற்குழு உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். இவரது சொந்த ஊரான ஜலகண்டாபுரம் பகுதிக்கு 1994–95ல் அப்போதைய நிர்வாகிகளை அழைத்துச் சென்று கொங்கு நாடு இல்லம் கட்டுவதற்கு நன்கொடை திரட்டவும், நிறைய ஆயுள் உறுப்பினர்களைச் சேர்க்கவும் ஒத்துழைத்தார். பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஆரம்பம் முதல்

இன்றுவரை தம்மால் இயன்ற சமுதாயப் பணிகளைத் தொடர்ந்து ஆற்றி வருகிறார்.

அன்னார் அவர்களின் சிறந்த சமுதாயப் பணியினைப் பாராட்டி "கொங்கு சாதனையாளர்" விருதினை வழங்கி வாழ்த்துவதில் சங்கம் மகிழ்ச்சியடைகிறது.

## கொங்கு சாதனையாளர்



# திரு. "தங்கமணி" P.M. பழனிச்சாமி கவுண்டர்

ஈரோடு மாவட்டம் கோபி புதுப்பாளையத்தில் அமரர் "தங்கமணி" திரு. முத்துவேலப்ப கவுண்டர் – திருமதி பொன்னாயம்மாள் தம்பதியருக்கு இரண்டாம் மகனாகப் பிறந்தார்.

இவரின் தந்தை அமரர் திரு. "தங்கமணி" முத்தவேலப்ப கவுண்டர் அவர்கள் கோபியில் அருமையான கலைநயத்துடன் கூடிய சீதா கல்யாண மண்டபம் கட்டி இலவசமாகத் திருமணங்களுக்கு வழங்க அறக்கட்டளை அமைத்தவர். அதே போல சீதா மருத்துவமனை என்றதொரு மிக நவீன மருத்துவ மனையைத் தொடங்கி ஏழை எளியோருக்கு மருத்துவ வசதியும் செய்து கொடுத்தவர். கோபி பாரியூர் கோயிலைப் புதுப்பித்து அதை ஈரோடு மாவட்டத்தின் சிறந்த கோயிலாக மாற்றியவர். பல்வேறு கோவில்களைப் புனரமைத்து கும்பாபிசேகம் தன் சொந்தச் செலவில் நடத்தியவர். இன்றைக்கும் கோபி பகுதியில் கோவில் புனரமைப்பு என்றால் இவரைத்தான் தேடி வருகிறார்கள்.

தனது தந்தையின் அறவழியில் திரு. P.M. பழனிச்சாமி கவுண்டர் அவர்கள் இன்றும் தொடர்ந்து பொதுவாழ்வில் ஈடுபட்டு பல அரும்பணிகளைச் செவ்வனே ஆற்றி வருகிறார்.

கோபியில், பாரியூர் டெக்ஸ்டைல்ஸ் என்ற நூற்பு ஆலையை முதன்முதலில் நிறுவி, அப்பகுதியை நூற்பாலைக்கு ஏற்றது என நிரூபித்ததன் மூலம் இன்றைக்கு கோபி மற்றும் சுற்றுப் பகுதிகளில் பல நூற்பு ஆலைகள் நிறுவுவதற்கும், அதனால்

வேலை வாய்ப்பும், பொருளாதாரமும் பெருகுவதற்கும் காரணமானவர்.

தந்தையின் விருப்பத்திற்கு ஏற்ப இன்றையளவும், சீதா கல்யாண மண்டபத்தை சாதி, சமயப் பாகுபாடில்லாமல் அனைவருக்கும் திருமணம் மற்றும் விழாக்களுக்கு இலவசமாக அளித்து வருகிறார். மண்டபத்தைப் புதுப்பித்து, நவீன சமையலறை போன்ற வசதிகளைச் செய்து கொடுத்தும், எவரிடமும் மண்டபத்திற்கு வாடகை வாங்குவதில்லை. மண்டபத்தின் தினசரி பராமரிப்புச் செலவுகளை இவரது குடும்பத்தார் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதும், தமிழகத்திலேயே இதுபோன்று, வேறு எந்த மண்டபமும், இலவசமாக வழங்கப்படுவதில்லை என்பதும் மிகவும் போற்றத்தக்கதாகும்.


கோபி பாரியூர் அம்மன் கோவிலைத் தற்போது புதுப்பித்து 12வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் கும்பாபிசேகத்தினை இந்த ஆண்டு அனைத்து பிரிவினரையும் ஒன்று திரட்டி சிறப்பாக நடத்திக் காட்டிய பெருமை இவரைச் சாரும். கும்பாபிசேகத்திற்கு ஆன பல இலட்சங்கள் ரூபாய் செலவில், இவரின் குடும்பத்தார் பெரும்பகுதியை ஏற்றுக் கொண்டனர். இதன்மூலம் ஆன்மீகப் பணியிலும் பின்தங்காதவர் எனப் பெயரெடுத்தவர்.

சீதா மருத்துவமனையில் தற்போது வருடந்தோறும் இலவச கண்சிகிச்சை முகாம் நடத்தப்பட்டு, இலவச அறுவைசிகிச்சை, இலவசமாகத் தங்குவதற்கு இடம், உணவு, மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதே போல மற்ற நோய்களுக்காக இந்த மருத்துவமனையில் சிகிச்சை பெறவரும் ஏழை எளியோருக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதன் பராமரிப்புச் செலவுகளுக்காகத் தனி அறக்கட்டளை நிறுவப்பட்டுள்ளது.

பல பொது நலப்பணிகளில் மட்டுமல்லாது இலக்கியம், நாடகம், இசை போன்ற பல கலைகளை கோபி பகுதி மக்கள் அனுபவிக்க ஏற்ற வகையில் தனது தந்தை ஆரம்பித்த ஸ்ரீ ராமகான சங்கீத சபையை இன்றையளவும் தொடர்ந்து நடத்தி வருகிறார். சொற்பொழிவுகள், இசைக் கச்சேரிகள், கம்பன் விழா, நாடகங்கள் போன்றவை சீதா கல்யாண மண்டபத்தில் நடத்தப்பட்டு மிகக் குறைந்த கட்டணத்துடன், சில நேரங்களில் இலவசமாகவும் மக்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

ஆண்டுதோறும் பல இலட்சம் ரூபாயைத் தன் சொந்தக் குடும்ப வருமானத்திலிருந்து எடுத்து பொது நலப்பணிக்கு செலவு செய்பவர்களை விரல்விட்டு எண்ணி விடலாம். அவர்களில் ஒருவராகத் தன் தந்தையின் சீரிய வழியில் தொடந்து ஆன்மீகம், கலைத் தொண்டு, மக்கள் நல்வாழ்வு, கல்விப்பணி, சமுதாயப் பணி என அனைத்தையும் சிறப்புற ஆற்றி, மனித நேயக் செயலால் நிரூபித்துக் கொண்டிருக்கிற மதிப்பிற்குரிய திரு. P.M. பழனிச்சாமி கவுண்டர் அவர்களையும், இவருக்குத் தோளோடு தோள் கொடுத்து சேவை ஆற்றிவரும் இவரது குடும்பத்தார் அனைவரையும் கொங்குச் சமுதாயம் போற்றிப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

அவரது சமுதாயப் பணி என்றும் தொடரவேண்டும் என வாழ்த்தி சங்கம் ‘‘கொங்கு சாதனையாளர்’’ விருதினை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறது.



## **Dr.கே.வி. காழியப்பன்,** Ph.D.,

தெய்வத் திரு. நா. வேலுசாமி – தெய்வத் திருமதி வள்ளியம்மாள் ஆகியோரை பெற்றோர்களாகப் பெருமையாய்க் கொண்டாடும் செம்பன் கூட்டத்தைச் சேர்ந்த முனைவர் கே. வி. காழியப்பன் அவர்களின் சாதனைகள் ஏராளம். அவரால் பலனடைந்தோர் ஆயிரக் கணக்கில் உள்ளனர்.

ஆளுமை காழியப்பன் அவர்கள் மருத்துவ உளவியல் அறிஞர் ஆவார். இவர் அகில உலக நிறைவாழ்வு சங்கத்தை நடத்தி வருகின்றார். 'உளவியல் உங்கள் கடவுள்' என்னும் அருமையான நூலை வெளியிட்டுள்ளார். இந்நூல் மாணவ மாணவிகளுக்கு மிகவும் பயனளிக்கும் நூலாகும்.

இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் 35 ஆண்டுகளாகப் பணியாற்றியுள்ளார். இவர் ஆளுமை வளர்ச்சிப் பயிற்சி முகாம்கள் 21000 மாணவர்களுக்காக நடத்தியுள்ளார். மன உளைச்சல் குறைப்பு பட்டறைகள் பல நடத்தியதில் நூற்றுக் கணக்கானோர் பயன் அடைந்துள்ளனர். புதுவாழ்வு மையங்கள் மூலமாக 6000 குடி நோயாளிகள் இலவசமாக உளவியல் சிகிச்சையால் நலம் பெற்றுள்ளனர். இது எவ்வளவு பெரிய சாதனை!

'Psychology for effective living' என்னும் இவரது புத்தகம் மிகவும் பயனுள்ளதாகும். The Madras Psychology Society - ஐ நிறுவி, அதன் மூலம் Indian Journal of applied Psychology ஆண்டுக்கு இரண்டும், Journal of Psychological Researches ஆண்டுக்கு ஒன்றுமாய் வெளியிட்டு வருகிறார். ஆராய்ச்சிக் கட்டுரைகள் அனைத்தும் நம் நாட்டுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்து வருகின்றன.

இவரது பணி தொய்வில்லாமல் தொடர்ந்து நடந்து கொண்டுள்ளது. சென்னை அரும்பாக்கம் பகுதி கொங்கு உறவினர்கள் அமைப்பின் ஜனவரி மற்றும் பிப்ரவரி – 03 மாதாந்திரக் கூட்டத்தில் இவர் ஆற்றிய உரை மற்றும் மாணவ மாணவிகளுக்கு நடத்திய பயிற்சி அனைவருக்கும் பயனுள்ளவை ஆகும்.

ஆளுமை என்பது – தன்னை ஆள்கின்ற தன்மை மற்றும் பிறரை ஆளுகின்ற தன்மை. அத்தகைய ஆளுகின்ற தன்மையை தன்னிடத்தில் கொண்டதால்தான் “முனைவர் காழியப்பன்” அவர்கள் “ஆளுமை காழியப்பனாக” உயர்ந்து நிற்கிறார்.

சிறந்த பேராசிரியராக, ஆராய்ச்சியாளராக, உளவியல் அறிஞராக கொங்குச் சமுதாயம் பெருமைப்படும்படி பணியாற்றியதற்காக “கொங்கு சாதனையாளர்” விருதினை அளித்து சங்கம் கௌரவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறது.


முகவரி :

28, 8–வது குறுக்குத் தெரு,

செனாய்நகர் மேற்கு,

சென்னை – 30

ph : 044–6260571



## Dr. R. பாலசுப்பிரமணியன், M.A., Ph.,D.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள அம்மாப்பேட்டை என்னும் சிற்றூரில் விவசாயக் குடும்பத்தில் திரு. அரங்கசாமி – திருமதி சின்னம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்து அவ்வூரிலேயே தொடக்கக் கல்வியையும், அண்டை ஊரான சிங்கம்பேட்டையில் பள்ளிக் கல்வியையும், தஞ்சை மாவட்டத்தில் பூண்டியில் உள்ள புஷ்பம் கல்லூரியில் புதுமுகக் கல்வியையும் முடித்த இரா.பாலசுப்பிரமணியன் சென்னை மாநிலக் கல்லூரியில் 1964 முதல் 1969 வரை பயின்று அரசியல் அறிவியலில் இளங்கலைப் பட்டத்தையும் (B.A.,), அரசியல் மற்றும் பொது ஆட்சியியலில் நிறைகலைப் பட்டத்தையும் (M.A.) பெற்றார்.

சென்னைப் பல்கலைக்கழக அரசியல் மற்றும் பொது ஆட்சியியல் துறைவழியாக 1975–இல் எம்.லிட், பட்டத்தையும், 1979–இல் பி.எச்டி. பட்டத்தையும் பெற்றவர். ஆய்வு மாணவராக இருந்தபோதே யுகோஸ்லோவியாவில் உள்ள பெரும்புகழ்மிகு பெல்கிரேடு பல்கலைக்கழகத்தின் அழைப்பை ஏற்று 1972–இல் உலகமாநாட்டில் கலந்து கொண்ட பெருமைக்கு உரியவர்.

டாக்டர் பாலசுப்பிரமணியன், தான் பயின்ற சென்னை மாநிலக் கல்லூரியில் 1972 முதல் விரிவுரையாளராகவும், சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1980 முதல் இணைப் பேராசிரியராகவும், துறைத் தலைவராகவும் செயல்பட்டுவருகிறார். மேலும், கிளிவ்லேண்டு மாநிலப் பல்கலைக்கழகத்தின் வருகைதரு பேராசிரியராகவும் இருந்து வருகிறார்.

இவ்வாறு 32 ஆண்டுகால ஆசிரிய அனுபவமும், 22 ஆண்டுகால ஆராய்ச்சி அனுபவமும் கொண்ட இவருடைய வழிகாட்டலில் 35 பேர் எம்.பில். பட்டமும், 16 பேர்

டாக்டர் பட்டமும் பெற்றுள்ளனர். இப்போதும் இவருடைய மேற்பார்வையில் 10 பேர் டாக்டர் பட்டத்திற்காக ஆய்ந்துவருகின்றனர். 100–க்கும் மேற்பட்ட ஆய்வேடுகளை மதிப்பிட்ட பெருமை படைத்தவர்.


சென்னைப் பல்கலைக்கழகத்தில் மட்டுமன்றி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம், ஆந்திரப் பல்கலைக்கழகம், காகத்தியா பல்கலைக்கழகம் முதலியவற்றில் பாடத்திட்டக்குழுவில் இடம்பெற்று இவர் ஆற்றிய பணி மகத்தானது. புது தில்லியில் உள்ள பல்கலைக்கழக நல்கைக் குழுவின் பல்வேறு குழுக்களில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்.

மாநில அளவிலும், தேசிய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நிகழ்ந்த பல்வேறு மாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டு கட்டுரைகள் வழங்கியும், அமர்வுத் தலைமை ஏற்றும் புகழ் ஈட்டியுள்ளார். அவற்றுள் 1991–இல் அர்ஜென்டைனாவிலும், 1994–இல் பெர்லினிலும், 1997–இல் தென்கொரியாவிலும் அவர் பங்கேற்ற மாநாடுகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. ஐந்து நூல்களும், 30–க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும் படைத்துள்ளார்.

தான் பணியாற்றும் பல்கலைக்கழகத்திற்கும், துறைக்கும் நிதிவளத்தை மேம்படுத்த அவர் பலவகைகளில் பாடுபட்டுள்ளார். புது தில்லியில் உள்ள பல்கலைக்கழக நல்கைக் குழுவிடமிருந்து 50இலட்சம் ரூபாய் நிதியுதவி பெற்றுத் துறையை வளப்படுத்திவருவதும், பல்வேறு தேசியக் கருத்தரங்குகள் நடத்திவருவதும் குறிப்பிடத்தக்கன. பல்வேறு அமைப்புகளில் பல்வேறு பொறுப்புகளை வகித்துவரும் அவர் பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தரைத் தேர்வு செய்யும் குழுவிலும் பணியாற்றியுள்ளார்.

மூன்று முறை இங்கிலாந்து நாட்டிற்கும், ஏழு முறை அமெரிக்காவிற்கும், மூன்று முறை ஜெர்மனிக்கும், ஒரு முறை பிரான்சு, சுவிட்சர்லாந்து, இத்தாலி, அர்ஜென்டைனா, யுகோஸ்லேவியா, சிங்கப்பூர், ஹாங் காங், தென்கொரியா, மலேசியா ஆகிய நாடுகளுக்கும் ஆராய்ச்சி மற்றும் கல்விப் பயணம் மேற்கொண்டவர் ஆவார்.

பல்வேறு சாதனைகளைப் படைத்து நமது கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்க்கும் பேராசிரியர் Dr. R. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு “கொங்கு சாதனையாளர்” விருது வழங்கி கௌரவிப்பதில் சங்கம் மகிழ்ச்சியடைகிறது.



## டாக்டர். கே. ஆர். பழனிசாமி

M.D. (General Medicine), D.M. (Gastroenterology)

கோபி செட்டிபாளையம், கள்ளிப்பட்டி, திரு. K.M. ராமசாமி – திருமதி மரகதம் ராமசாமி தம்பதியரின் புதல்வர் Dr. K.R. பழனிசாமி அவர்கள் இன்று சென்னையில் தலைசிறந்த குடல் இரைப்பை மருத்துவராக உள்ளார்கள்.

M.B.B.S. from Davanagiri, Karnataka - Award of Pharmacology and best out-going student.

M.D. (Internal Medicine) from Madras Medical College.

D.M. (Gastroenterology) from Madras Medical College - 1981.

Assistant Professor in Gastroenterology, Department of Gastroenterology in Madras Medical College from 1981 - 1986.

Founder - Department of Gastroenterology, Stanley Medical College, Chennai. Department is well established with D.M. Gastroenterology Programme and facilities for various diagnostic and therapeutic procedures.

Professor and Head, Dapartment of Gastroenterology, Stanley Medical College from 1986 - 2000.

Special areas of interest are Hepatitis, Portal - hypertension, Peptic Ulcer and Endoscopy.

Presented research papers in National and International meetings.

Attended several National and international Conferences/Seminars.

Visited many Gastroenterology and Endoscopy centres all over the world.

Delegate in Academic Exchange Programme to Germany 1986.

Delegate in Academic ExchangeProgramme to USSR 1987.

Served as Member, Academic Board, Sanjay Gandhi Postgraduate Institute of Medical Sciences.

Examiner for DM Gastroenterology in Various Universities,

Served as Governing body member in the Indian Society of Gastroenterology and Society for Gastrointestinal Endoscopy of India,


President - Society for Gastro - Intestinal Endoscopy of India from 1999 - 2000.

Secretary - Tamilnadu Chapter of Gastroenterology 2001 - 2002.

Organising Secretary - Annual Conference of Indian Society of Gastroenterology, November, 2003 at Chennai.

Consultant Gastroenterologist - Appollo Hospital, Chennai.

அன்னார் அவர்கள் மருத்துவத்துறையில் சாதனை புரிந்தமைக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பாராட்டி “கொங்கு சாதனையாளர்” விருது வழங்கி கௌரவிக்கிறது.



**திரு. செ. நல்லசாமி,** M.A., B.L.,
அறச்சலூர் – 638 101,
ஈரோடு மாவட்டம்.
ph : 0424/2357090

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், அறச்சலூர் கிராமத்தில் திரு. க. சென்னிமலை கவுண்டர் – திருமதி செல்லம்மாள் தம்பதியருக்கு 02.01.1951 அன்று பிறந்தார். உள்ளூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் S.S.L.C., தேர்ச்சி பெற்று, பின் கல்லூரியில் சேர்ந்து பயின்று B.Sc., (Chemistry) பட்டம் பெற்றார். அதனைத் தொடர்ந்து, அரசியல், தமிழ், காந்தீய சிந்தனை ஆகிய மூன்று துறைகளிலும் M.A. பட்டங்களும், பின் B.L., பட்டமும் பெற்றுள்ளார். இவ்வளவு பட்டங்கள் பெற்றிருந்த போதிலும், வேறு எந்த உத்தியோகத்துக்கும் போகாமல், நம் கொங்கு இனக்குலத் தொழிலான வேளாண் தொழிலையே பிரதானமாகக் கருதி செம்மையாகச் செய்து வரும் திரு. செ. நல்லசாமி அவர்கள் தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் செயலாளராகவும், கீழ் பவானி பாசன விவசாயிகள் சங்கத் தலைவராகவும், ஈரோடு கொங்கு வேளாளர் கல்வி நிறுவணங்களின் இணைச் செயலாளராகவும் பணியாற்றி வருகிறார்.

“யாதும் ஊரே, யாவரும் கேளிர்” என்ற மாத இதழின் ஆசிரியராகவும் செயல்பட்டு வந்தார்.

1996 பொதுத் தேர்தலில் மொடக் குறிச்சி சட்டப் பேரவைத் தொகுதியில் 1033 வேட்பாளர்களைக் களம் இறக்கி தேர்தல் ஆணையத்திற்கும் மத்திய அரசுக்கும் நெருக்கடியைக் கொடுத்து அதன் மூலம் பல தேர்தல் சீர்திருத்தங்கள் கொண்டுவர


அப்போதைய ஆணையாளர் திரு, T.N. சேஷன் அவர்களுக்கு உதவி புரிந்துள்ளார்.

கடந்த **25** ஆண்டு காலமாக விவசாயிகள் நலனுக்காகக் குரல் கொடுத்து வருகிறார். கீழ்பவானி பாசனக் கரையில் சுமார் **6.** கீ.மீ. தொலைவிற்கு மரங்கள் நட்டுக் காப்பாற்றி வருகிறார். பலதரப்பட்ட மரங்களைப் பண்ணையில் நட்டு பண்ணைக் காடாக உருவாக்கியுள்ளார்.

இவரது துணைவியார் திருமதி சௌந்தரம் ஆவார். இவர்களுக்கு இரு பெண் மக்கள். மூத்தவர் திருமதி அனிதா அரவிந்த் திருமணமானவர். இளையவர் செல்வி பிரியதர்சினி, B.E., படித்து வருகிறார்.

தமிழ்நாடு விவசாயிகள் பிரச்சினை எதுவானாலும், முன்னின்று செயல்படுபவர் என்ற பெருமைக்குரியவரான திரு. செ. நல்லகாமி அவர்கள் தொடர்ந்து விவசாயிகள் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டு வருகிறார்.

விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபடும் திரு. செ. நல்லசாமி அவர்களுக்கு “கொங்கு சாதனையாளர்” விருதினை அளித்து பெருமைப்படுத்துவதில் சங்கம் மகிழ்ச்சியடைகிறது.



## திரு. எம். சிவப்பிரகாசம்

## தன் விவரக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| பெயர் | : | எம். சிவப்பிரகாசம் |
| த/பெ | : | முத்துசாமிக் கவுண்டர் |
| செந்த ஊர் | : | பழைய பாளையம், நாமக்கல் மாவட்டம் |
| பிறந்த தேதி & வயது | : | 06.11.1943 – 60 வயது |
| பணிக்காலம் | : | இடைநிலை ஆசிரியராக 23 ஆண்டுகள்<br>தலைமை ஆசிரியராக 15 ஆண்டுகள்<br>மொத்தம் 38 ஆண்டு கல்விப் பணி |
| பணி புரிந்த பள்ளி | : | பாரதி நிதி உதவிப் பள்ளி, சின்ன பெருமாப்பட்டி, நாமக்கல் வட்டம் |
| மாநில நல்லாசிரியர் விருது | : | 05.09.1995<br>பின்னர், 2001–ல் மாவட்டத்தில் சிறந்த பள்ளி என இயக்குநரால் நற்சான்று கேடயம் வழங்கப்பட்டது. |
| தேசிய நல்லாசிரியர் விருது | : | 15.09.2002 |

இவர் பணியாற்றிய பள்ளியை மாவட்டத்திலேயே சிறந்த பள்ளியாக உயர்த்தி உள்ளார். ஒவ்வொரு மாணவனுக்கும் தனிக்கவனம் செலுத்தி அனைத்து

மாணவர்களின் கையெழுத்துத் திறனும் சிறந்து விளங்கப் பாடுபட்டுள்ளார். பள்ளியில் மாணவர் மன்றம் முறையாக நடைபெறச் செய்து, வினாடி – வினா நிகழ்ச்சிகள், தேசிய விழாக்கள் தொடக்கப்பள்ளியில் சிறப்பாக நடைபெறச் செய்து மாணவர்களை ஊக்கப்படுத்தி உள்ளார். விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்களை ஈடுபாடு கொள்ளச் செய்து, அவர்களின் ஆதரவால் கட்டடம் மற்றும் இதர தளவாடச் சாதனங்களை நன்கொடையாகப் பெற்று பள்ளியின் வளர்ச்சிக்கு உதவியதுடன், தொடர்ந்து 5–ஆம் வகுப்பில் 100% தேர்ச்சி பெறக் செய்து தரமான கல்வி அளித்துள்ளார்.

இப்பள்ளி மாணவர்களுக்குச் சிறந்த பயிற்சி அளித்து அமராவதி சைனிக் பள்ளியில் சேர்ந்து படிக்க உதவி உள்ளார். அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் திருக்குறள் ஒப்புவித்தல் பயிற்சி நன்முறையில் அளித்துள்ளார். 5–ஆம் வகுப்பு மாணவர், 3–ஆம் வகுப்பு மாணவர் ஆகியோர் 1330 குறள்களையும் ஒப்பித்து மாவட்டத்தில் முதல் பரிசு பெற ஊக்கப்படுத்தி உள்ளார். அனைத்து மாணவ, மாணவியரையும் 'சஞ்சயிக்கா திட்டத்தில்' சேர்த்துள்ளார்.

சின்ன பெருமாப்பட்டி பள்ளி என்றாலே சிறந்த பள்ளி எனப் பெயர் பெறச் செய்து, கிராமப்புற மாணவர்கள் உயர வழி வகுத்துள்ளார். கிராமப் புற மக்களிடம் கல்வியின் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தி உள்ளார். சின்ன பெருமாப்பட்டியில் 5 வயது நிரம்பிய அனைத்து மாணவ, மாணவியரையும் பள்ளியில் சேர்த்துள்ளார். இவரது முயற்சியால் சிறப்பான பள்ளி எனப் பெயர் பெற்றதால் சுற்றுவட்டாரத்தில் உள்ள குழந்தைகளும் 50% மேல் இப் பள்ளியில் சேர்ந்துள்ளனர். கிராமப் புற மக்களால் பெரிதும் மதிக்கப்படுபவர். கல்வி அலுவலகர்களின் நன்மதிப்பையும், பெற்றோர்களின் அன்பையும், மாணவர்களின் மரியாதையையும் பெற்றவர்.

தேசிய நல்லாசிரியர் விருது பெற்று கிராமப்புற குழந்தைகளின் கல்விக்கு அரும்பணி ஆற்றியதைப் பாராட்டி சங்கம் "கொங்கு சாதனையாளர்" விருது அளித்து கௌரவிக்கிறது.



## திரு. R. சாயிநாதன், B.A., B.L:.,

ஈரோடு தாலூகா, மொடக்குறிச்சி கிராமம் காட்டுப்பாளையத்தில் வேளாண்மையை அடிப்படைத் தொழிலாகக் கொண்ட நமது இனத்து தூரன் கூட்டத்தைச் சேர்ந்த அமரர் திரு. பொ. இராமலிங்க கவுண்டர் – திருமதி தனபாக்கியம் தம்பதியரின் இரண்டாவது மகனாக ஆர். சாயிநாதன் 04.09.1947–ல் பிறந்தவர். ஆரம்ப காலங்களில் காட்டுப்பாளையம், மேட்டூர் கிராமப் பள்ளியிலும், பின் பவானி, மொடக்குறிச்சி உயர்நிலைப் பள்ளியிலும் பயின்று, பி.யூ.சி. சென்னை சர். தியாகராய கல்லூரியிலும், பி.ஏ., சென்னை மாநிலக் கல்லூரியிலும், சட்டப்படிப்பை சென்னை சட்டக் கல்லூரியிலும் பயின்றவர். இவரது துணைவியார் திருமதி சந்திரலேகா ஈரோட்டில் பெண்கள் அழகுநிலையம், காஸ்ட்டியூம் டிசைனர் (Costume Designer) தொழில் நடத்தி வருகிறார்.

ஆர். சாயிநாதன் 1965–ம் ஆண்டு சென்னையில் கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே கொங்கு வேளாளக் கவுண்டர் அமைப்புகளில் பங்கு பெற்றவர். சென்னை மாநிலக் கல்லூரி மாணவர் மன்றத்தின் துணைத் தலைவராகவும் (1967–68), அனைத்துக் கல்லூரி மாணவர் மன்றத்தின் துணைத் தலைவராகவும் தேர்வு செய்யப்பட்டுச் செயலாற்றினார். 1967–ல் நடந்த மிகப்பெரிய இந்தி எதிர்ப்பு போராட்டத்தின் போது மாணவர் தலைவர்கள் குழுவில் இடம் பெற்று டெல்லி சென்று அன்றைய பிரதமர் இந்திரா காந்தியைச் சந்தித்து அந்தப் போராட்டத்தின் நோக்கத்தை எடுத்துரைத்தவர்.

மாணவர் காலத்திலும், பின்பும் காங்கிரஸ் இயக்கத்தில் பங்கு பெற்று பல பொறுப்புகளில் இருந்தவர். 1977, 1980, 1989 சட்ட மன்றத் தேர்தலில் காங்கிரஸ்

வெற்றி பெறப் பணியாற்றியவர். பல அரசியல் போராட்டங்களைத் தலைமை ஏற்று நடத்தி பல முறை சிறை சென்றவர்.


சிறு வயது முதலே சாரண இயக்கம், போன்ற அமைப்புகளில் பங்கு பெற்று நாட்டு நலப்பணித் திட்டத்தில் ஈடுபாடு கொண்டவர். இவரது பகுதி அரிசன மக்கள் மத்தியில் மிகுந்த பிடிப்பும், அவர்களது முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறையும் கொண்டவர். சிறிது காலம் வழக்கறிஞர் தொழிலை விட்டு விட்டு விவசாயத்தை முழு நேரமாகச் செய்து அதன் லாப, நஷ்டத்தை, சிரமத்தை நன்கு அறிந்தவர்.

1999–ல் மீண்டும் ஈரோட்டில் வழக்கறிஞர் தொழிலைத் தொடர்ந்தார். 2001–ம் ஆண்டு முதல் ஈரோடு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் உறுப்பினர்/நீதிபதியாகப் பொறுப்பேற்றுப் பணியாற்றி வருகிறார்.

கிராமத்தின் நலனைப் பாதுகாக்கவும், மக்களுக்கு சேவை செய்து பல வழிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் காட்டுப்பாளையம் – மேட்டூர் பகுதியில் 1998 – மே மாதம் பகவதி வெல்பேர் டிரஸ்ட் நிறுவி அதன் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

திரு. ஆர். சாயிநாதன் – சந்திரலேகா தம்பதியினருக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். மூத்தவர் டாக்டர்.எஸ்.சங்கர்குகன், எம்.டி.எஸ். படித்துக் கொண்டே சென்னை சாலி கிராமத்தில் Charm Dental Clinic நடத்தி வருகிறார். இளையவர் எஸ். ஸ்ரீராம் ஆனந்த்ராஜ், எம்.எஸ்., (கம்யூட்டர் சயின்ஸ்) பட்டதாரி. H.C.L. Ltd-ல் சென்னையில் பணியாற்றி வருகிறார்.

தன்னலம் பாராமல் கொங்குச் சமுதாயம் முன்னேற வேண்டும் என கிராமங்கள் தோறும் சென்று இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் அன்னார் அவர்களின் சேவையைப் பாராட்டி “கொங்கு சாதனையாளர்” விருதினை வழங்குவதில் சங்கம் பெருமகிழ்ச்சியடைகிறது.



## திரு. S. ஜெயவேலன்

வரகுதின்னாப் பெருங்கடி கூட்டத்தைச் சேர்ந்த திரு.எஸ். ஜெயவேலனுக்கு 59வயது ஆகின்றது. நாமக்கல் மாவட்டம், ப.வேலூர், பாலப்பட்டி – களிமேடு இவரின் சொந்த ஊர். இவர் தந்தையார் அமரர் திரு. K.M. சாமியப்ப கவுண்டர், கொங்கணாபுரம் திரு. நாச்சியப்பகவுண்டர், திரு. சுப்ரமணியகவுண்டர், திருசெங்கோடு திரு. T.M. காளியண்ண கவுண்டர் ஆகியோர் தலைமையின் கீழ் சேலம் நாட்டாண்மைக் கழகத்தில் பணிபுரிந்தவர்.

இவர் படிப்பு B.Sc., DMIT (electronics), M.Tech (IIT Madras). இவர் B.Sc., யில் Good Conduct and Merit க்காக – முதல் மாணவனாக கௌரவிக்கப்பட்டு, பரிசும் பெற்றார்.

இவர் 34 ஆண்டுகளாக விஞ்ஞானியாக பாதுக்காப்பு விஞ்ஞான ஆராய்ச்சி மையத்தில் (DRDO) பெங்களூரில் பணி ஆள்றுகின்றார்.

தன் தந்தையைப் பின்பற்றி, கொங்கு இன (கிராமப்புற) மாணவர்கட்கும் மற்றும் உள்ள தமிழருக்கும், பிற மாநில மாணவர்கட்கும், வேலை வாய்ப்பு, Project work வாங்கித் தந்துள்ளார். இவரால் பயன் அடைந்தவர்கள் 150 க்கும் மேல் உள்ளனர். இவர் உதவியால் பலர் வெளிநாடு சென்று உள்ளனர்.

'பெங்களூர் கொங்கு நண்பர்கள் சங்கம்' - 1981ல் ஆரம்பித்த போது அதன் தொடக்ககாலச் செயலாளர் ஆக இருந்து, இன்றும் சங்கத்தின் பணிகளைச் செய்துவருகின்றார்.


பேராசிரியர் அமரர் பழனிசாமி (Principal, Madras Law College) அவர்களைத் தன் வழிகாட்டும் தெய்வமாகக் கொண்டு உள்ளார்.

அமரர் கோவை செழியன், அமரர் நல்ல சேனாபதி மன்றாடியார் (பட்டக்காரர்), அமரர் பாவலர் முத்துசாமி, பொள்ளாச்சி 'சாமுண்டி–Sugars' அழகப்பக்கவுண்டர், Dr. வாசகம், திரு. T.K. சுப்ரமணியன், திரு. நல்லகோவிந்தசாமி, திரு. அருணாசலம், Dr. ஆயிகவுண்டர், திரு. K.C. காளியண்ணன் இவர்களுடன் எப்பொழுதும் தொடர்பு கொண்டு பல சமுதாயப் பணிகளை ஆற்றி வருகிறார்.

இவரது துணைவியார் திருமதி சத்தியபாமா 'கொங்கு திருமண மையம்' வைத்து நமது இனத்தவருக்கு உதவி செய்கின்றார். இவரின் இரண்டு பெண்களுக்கும் திருமணமாகி வாழ்வில் நன்றாக உள்ளனர்.


'தேங்கிக்கிடக்கும் தண்ணீர் நாற்றம் எடுத்துவிடும்' என்ற அரேபிய பழமொழிக்கேற்ப, நமது இனம், தேங்கி நின்றுவிடாமல் கல்வி, தொழில், அரசாங்க உத்தியோகம், அரசியல், வெளிநாடு செல்லுதல் போன்றவைகளில் முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதும், நம்மிடையே ஒற்றுமையை வளர்த்து, நமது இனமாணவர்கட்கும், இளைய தலைமுறையினருக்கும், இன உணர்வை உண்டாக்கி, மற்றவர்கள் அவர்கட்கு வழிகாட்டியாக வேண்டும் என்பதும், நமது இனம் M.B.Cயில் சேர்க்க ஆவன செய்ய வேண்டும் என்பதும் இவரின் ஆசை. இதை நிறைவேற காமாட்சி அம்மன் துணை செய்வார் என்கிறார்.

கொங்குச் சமுதாய மேம்பாட்டிற்காக அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கும் திரு. S. ஜெயவேலன் அவர்களுக்கு 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கி கௌரவிப்பதில் சங்கம் பெருமையடைகிறது.




**கே. சிவலிங்கம்**

**நிறுவனர் மற்றும் தாளாளர்**



**கே. சக்திவேல்**

**தலைவர் மற்றும் தலைமை ஆசிரியர்.**



**கே. நடராஜன்**

**செயலர்**

"சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" என்ற பழமொழிக்கேற்ப மாணவ–மாணவியர்களை அறிஞர்களாக உருவாக்குவது கல்வி நிறுவனங்களே. அவற்றில் மாநில அளவில் சாதனை படைத்து வருவது அந்தியூர் ஐடியல் கல்வி அறக்கட்டளை பள்ளியாகும்.

ஈரோடு மாவட்டம் பவானிக்கு அருகே இயற்கை காடுகளால் சூழப்பட்ட அந்தியூர் என்ற கிராமத்திற்கு இடையில் சுமார் 30 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இப்பள்ளியின் நிர்வாகிகள்

திரு. கே. சிவலிங்கம் – நிறுவனர் மற்றும் தாளாளர்

திரு. கே. சக்திவேல் – தலைவர் மற்றும் தலைமை ஆசிரியர்

திரு. கே. நடராஜன் – செயலர்

ஆகியோரின் சீரிய மேற்பார்வையின் கீழ் அனுபவமும், திறமையும் மிக்க ஆசிரியர் / ஆசிரியைகள் மற்றும் பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

மாணவ–மாணவிகளுக்குத் தனித்தனியாக பாதுகாப்புடன் கூடிய மிகச்சிறந்த விடுதிவசதி செய்யப்பட்டு சுகாதார முறையில் தயாரிக்கப்பட்ட சைவ உணவு மாணவ–மாணவிகளுக்குப் பரிமாறப்படுகிறது.

சிராமப்புற மாணவர்களின் கல்வியைக் கருத்தில் கொண்டு நகர்ப்புற மாணவர்களுக்குச் சமமாகச் தொழிற்பயிற்சிக் கல்லூரிகளில் இடம் பெறச் செய்வது இந்நிறுவனத்தின் நோக்கமாகும். இந்த மூன்று சகோதரர்களும், இப்பள்ளி வளர்ச்சிக்காகத் தொடர்ந்து பாடுபட்டு வருகிறார்கள்.

சாதனைகளில் சில :

2001 – 2002 ஆண்டு – மாணவி கவுசல்யாவின் கட்ஆப்மார்க் – 299.15

– 270 பேர் M.B.B.S / 665 பேர் B.E.

2002 – 2003 ஆண்டு – S. ஜெயகுமார், ஸ்ரீபிரியா நுழைவுத் தேர்வில் 100க்கு 100

– Physical Science ல் 9 பேர் 50க்கு 50.


– Biology ல் 45 பேர் 50க்கு 50.


– 210 பேர் M.B.B.S. / 350 பேர் B.E.
முதல் மதிப்பெண் – 11693

நுழைவுத் தேர்வில் – 99க்கு மேல் வாங்கியவர்கள் – 264 பேர்.

M.B.B.S. படிப்பிற்கு 295க்கு மேல் வாங்கியவர்கள் – 264 பேர்

வருங்காலத்தில் சிறந்த வல்லுனர்களை உருவாக்குவதில் ஈடுபட்டுக் கல்விப் பணியாற்றியமைக்காக திரு. கே. சிவலிங்கம், திரு கே. சக்திவேல், திரு.கே. நடராஜன் சகோதரர்களுக்கு “கொங்கு சாதனையாளர்” விருதினை வழங்கி கௌவிரப்பதில் சங்கம் பெருமையடைகிறது.





**திரு. வி. அன்பழகன்**　　**திரு. வி. சுந்தரேசன்**

வரலட்சுமி ஸ்டார்ச் இண்டஸ்ரீஸ், சேலம் – **636 007.**

போன் : **0427 – 2316280, 2316281.**

நாமக்கல் மாவட்டம் மல்லூர் அருகில் உள்ள நெ. **3.** கொமார பாளையம் திரு. R. வரதராஜன் – திருமதி லட்சுமி தம்பதியருக்கு மகன்களாகப் பிறந்த வி. அன்பழகன் மற்றும் வி. சுந்தரேசன் சகோதரர்கள் மரவள்ளிக் கிழங்கிலிருந்து உலகத்தரம் வாய்ந்த ஜவ்வரிசி, ஸ்டார்ச் மற்றும் மாடிபைடு ஸ்டார்ச்களை உற்பத்தி செய்து வெளிநாடு மற்றும் உள்நாட்டில் விற்பனை செய்து வருகின்றார். தந்தை வழி வந்த மேற்படி தொழிலை தந்தையின் மறைவுக்குப் பின் **1984** ஆம் ஆண்டில் இவர்கள் மேற்பார்வையில் வளர்ச்சி அடையச் செய்தனர். இவர்களின் இந்த மாபெரும் சாதனையானது இந்தியாவில் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் உற்பத்தித் துறை வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் தயாரிப்பில் **40** ஆண்டு கால பழைய முறையையே பின்பற்றி உற்பத்தி செய்து வந்ததை மாற்றியமைத்து தாய்லாந்து , ஸ்வீடன், ஜெர்மனி ஆகிய வெளி நாடுகளிலிருந்து இயந்திரங்களைத் தருவித்து இந்தியாவிலேயே முதன் முறையாக புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தியும் வெற்றி கண்டுள்ளனர்.

இந்தியாவில் முதன் முதலாக, இந்திய தரக் கட்டுப்பாட்டுக் கழகத்தின் ஐ.எஸ்.ஐ. தரச் சான்றானது வழங்கப்பட்டது இவர்களது ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் தயாரிப்புக்களுக்கேயாகும். இன்று வரை வேறு எவருடைய ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச்சுக்கும் இந்த ஐ.எஸ்.ஐ. தரச் சான்றானது வழங்கப்படவில்லை.

மற்றும் மரவள்ளிக் கிழங்கு ஸ்டார்ச் மற்றும் மாடிபைடு ஸ்டார்ச்களை முதன் முதலாக 5 வெளிநாடுகளுக்கு இன்று வரை 20,000டன் ஏற்றுமதி செய்துள்ளனர்

என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுடைய சாதனைகளைப் பாராட்டும் வகையில் மாநில அரசு, மத்திய அரசு, வங்கிகள், இதர நிறுவனங்கள் தரம் மற்றும் சிறந்த தொழிற்சாலை நிர்வாகம் ஆகியவற்றிற்காக 10 க்கும் மேற்பட்ட அவார்டுகளை வழங்கி கௌரவித்துள்ளன.

இவர்களுடைய சாதனைகள் உற்பத்தித் துறையோடு மட்டும் நின்றுவிடாமல் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் உற்பத்தியின் போது வெளியாகும் கழிவு நீரிலிருந்து எரிவாயு (17000 m3/day) உற்பத்தி செய்து அந்த எரிவாயுவிருந்து மின்சாரம் (1020 கிலோ வாட்) உற்பத்தி செய்யும் மிகப் பெரிய எரிசக்தி ப்ளாண்ட்டுக்காக UNDPன் மான்ய நிதியினை அரசின் உதவியுடன் பெற்று நிறுவியுள்ளனர்.

இவர்களது சீரிய பணிகள் மேற்சொன்னவற்றுடன் நின்று விடாமல் ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டு ஆலயங்களை சீரமைப்பது முதலான பணிகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். தவிர கண்பார்வை இழந்தவர்களுக்குச் சொந்தமாக தொழில் தொடங்க பண உதவி, கல்வி கற்பதற்குப் பண உதவி மற்றும் தேவையான பிற உதவிகளைச் செய்து வருகிறார்கள்.

கொங்கு வேளாளக் கவுண்டர்களில் வசதியற்ற குடும்பங்களிலிருந்து படிப்பில் முதன்மை பெற்று விளங்கும் மாணவ/மாணவியருக்கு தற்சமயம் பொறியியல் பட்டமேற்படிப்புக்காக மூன்று பேருக்கும், கணிப்பொறி பட்டமேற்படிப்புக்காக ஒருவருக்கும், மருத்துவப் பட்ட மேற்படிப்புக்காக ஒருவருக்கும் உதவி வருகின்றனர்.

கொங்கு வேளாளக் கவுண்டர்கள் சமுதாயத்தின் முக்கியத் தொழில் விவசாயமாகும். இதில் சிறந்த பணப்பயிரான மரவள்ளியிலிருந்து தயாரிக்கப்படும் ஜவ்வரிசி, ஸ்டார்ச் மற்றும் மாடிபைடு ஸ்டார்ச்களை உலக அளவில் கொண்டு சென்று உலகச் சந்தையில் இவைகளுக்கு நல்ல மதிப்பை ஏற்படுத்திக் கொடுத்து

நல்ல விலை கிடைக்கச் செய்வதன் மூலம் மரவள்ளிக்கு விலை உயர்வை ஏற்படுத்தி உள்ளனர். விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி வருகின்றனர் என்று சொன்னால் அது மிகையாகாது.

தங்களுடைய சொந்த முயற்சியால் இவர்கள் தொழிலில் சிறந்து விளங்கும் சாதனையை பாராட்டி திரு. வி. அன்பழகன், திரு. வி. சுந்தரேசன் சகோதரர்களுக்கு ‘‘கொங்கு சாதனையாளர்’’ விருது வழங்கி பெருமைபடுத்துவதில் சங்கம் மகிழ்ச்சியடைகிறது.



**திருமதி உமாசெல்வராஜ்,** B.A.,
10, பாரதியார் தெரு,
சுப்பிரமணியநகர்,
சேலம் – **636 005.**

திருமதி உமாசெல்வராஜ், சேலம் திரு. "L.R.N." ஷண்முகம் அவர்களின் மகளாவார். இவர் படிக்கும் காலம் தொட்டே தன்னைச் சமூக நலப்பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டவர்.

**இவர் வகித்த பதவிகள் :**

1. சேலம் மாநகராட்சி மன்ற உறுப்பினர் **1996 – 2001**
2. சேலம் பார்வையற்றோர் நலச் சங்கத்தின் உறுப்பினர் **1991–95**
3. குளூனி மெட்ரிகுலேஷன் பள்ளியின் முன்னாள் மாணவர் சங்கத்தின் செயலாளர் **1995–2000.**

**தற்போது வகித்து வரும் பதவிகள் :**

1. சேலம் கொங்கு வெள்ளாளர் அறக்கட்டளை மகளிர் அணித்தலைவர்
2. சுமார் **30** சங்கங்களை ஒருங்கிணைத்துள்ள சேலம் மகளிருக்கான "SWASUM" என்ற அமைப்பின் தலைவர்.
3. இந்திய மருத்துவ சங்கத்தின் மகளிர் பிரிவு தலைவர்.
4. சேலம் மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் துணைத் தலைவர்.
5. "நேசக்கரங்கள்" என்னும் குழந்தைகள் காப்பக உறுப்பினர்.

6. சேலம் தியாகராஜா பாலிடெக்னிக்கின் சமூக நலச்சங்கம், உறுப்பினர்.

7. பெரியார் பல்கலைக்கழக N.S.S. அமைப்பு உறுப்பினர்.

8. L.I.C. பாலிசிதாரர் அமைப்பு ஆகியவற்றின் அட்வைசரி கமிட்டி உறுப்பினர்.

மேற்கண்டவாறு பல பொது நல அமைப்புகளில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டு சமூக நலத் தொண்டு ஆற்றிவருகிறார்.

சேலத்தில் தோற்றுவிக்கப் பெற்றுள்ள கொங்கு வேளாளர் அறக்கட்டளையினால் நடத்தப்பட்டுவரும் மெட்ரிகுலேஷன் பள்ளி துவக்குவதற்கு முக்கியப் பங்காற்றியவர்களில் திருமதி உமா செல்வராஜும் ஒருவர். இவர் அப்பள்ளியின் வளர்ச்சி நிதிக்காக "நாட்டியாஞ்சலி" மூலம் நிகழ்ச்சிகள் நடத்தி பெரும் தொகை நன்கொடையாகத் திரட்ட சிறந்த முறையில் செயல்பட்டார்.

ஏற்காட்டில் மலைவாழ் மக்களுக்கான மருத்துவ முகாம்கள் நடத்தி வருகிறார்.

"SWASUM" (Salem Women Associations Collective Forum) என்ற மகளிருக்கான அமைப்பை உருவாக்கி **1997** முதல் இது வரை தொடர்ந்து பணியாற்றி வருகிறார். அதன் மூலம் சேலம் மற்றும் சுற்றுப் பக்க கிராமங்களில் உள்ள சுமார் **30** பெண்களுக்கு மேல் சுயதொழில் மூலம் வேலை வாய்ப்பு பெற ஏற்பாடுகள் செய்து உதவியுள்ளார். மாதந்தோறும் கவுன்சிலிங் கூட்டங்கள் ஏற்பாடு செய்து, மகளிரிடையே விழிப்புணர்ச்சி உண்டாக்கி வருகிறார். வசதியற்ற அநேக ஏழைக் குழந்தைகள் கல்வி கற்க பொருளுதவியும் செய்து வருகிறார்.

இவர் ஆற்றிய சேவைக்குப் பெற்ற விருதுகள் பின்வருமாறு :

1. இன்னர்வீல் மாவட்டம் **298** – சிறந்த தலைவர் **(1997 – 98)**

2. ரோஜா விருது, சென்னை **(1996)** – சிறந்த பெண்மணி

3. சேலம் அரிமாசங்கத்தின் மூலமாக இரண்டு முறை "Best Citizen Award"

4. சேலம் மக்களால் "மனித நேய விருது"

இவரது கணவர் Dr. T.S. செல்வராஜ், M.D., சேலம் கோகுலம் மருத்துவமனையில் இயங்கி வரும் சேலம் ஸ்கேன் சென்டரின் இயக்குநர் ஆவார். மேலும் கோவையில் இயங்கி வரும் ஹைடெக் ஸ்கேன் சென்டர் இயக்குநராகவும் இருக்கிறார். இந்தத் தம்பதியருக்கு இரண்டு மகள்கள் மூத்த மகளுக்குத் திருமணம் ஆகிவிட்டது. இளைய மகள் தற்போது B.E., படித்து வருகிறார்.

சிறந்த சமூக சேவகியாக பல்வேறு சமுதாயப்பணிகளை அயராது ஆற்றிவரும் திருமதி உமா செல்வராஜ் அவர்களுக்கு “கொங்கு சாதனையாளர்” விருதினை வழங்குவதில் சங்கம் மகிழ்ச்சியடைகிறது.



## Dr. R. சாந்தி, M.Sc., Ph.D.,

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மண்ணியல் மற்றும் வேளாண் வேதியல் துறையில் இணைப்பேராசிரியராகப் பணிபுரியும் முனைவர் R. சாந்தி அவர்கள், நாமக்கல் மாவட்டம் வெண்ணாந்தூரில் செல்லன் குலத்தில் திரு. N. அரங்கசாமி – திருமதி நல்லம்மாள் தம்பதியருக்கு 1964 ஆம் வருடம் பிறந்தார். இவர் தமிழ்நாடு வேளாண் அறிவியல் 200ம் ஆண்டிற்கான “இளம் மகளிர் விஞ்ஞானி” என்ற பெருமைமிகு விருதினைப் பெற்றுள்ளார்.

தமிழ்நாட்டில் பெரும்பான்மையாகப் பயிரிடப்படும் நெல், எண்ணெய் வித்துக்கள், மரவள்ளிக்கிழங்கு மற்றும் காய்கறிப்பயிர்களுக்கு, குறிப்பிட்ட மண்வகை மற்றும் சூழ்நிலைக்கு உகந்த மண் வளத்திற்கும், திட்டமிட்ட மகசூலுக்கும் ஏற்ற ஒருங்கிணைந்த உரப்பரிந்துரைகள் என்ற தொழில் நுட்பத்தை உருவாக்கியதற்காகவே இவ்விருதினைப் பெற்றுள்ளார்.

கோவை வேளாண் பல்கலைக் கழகத்தின் மண்வளம் மற்றும் வேளாண் அறிவியல் தொடர்பான பட்டங்களைப் பெற்றதுடன், வேளாண் ஆய்வுக்களுக்கான முனைவர் பட்டத்தினைப் பெற்றவர். ஏறத்தாழ சென்ற 15 ஆண்டுகளாக கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வருபவர்.

புதுதில்லி இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் புதுதில்லியின் இளநிலை ஆராய்ச்சி உதவித் தொகை. எரிக் ஸ்டேன்ஸ் கேடயம்.எஸ்.ஆர்.பி. பொன்னுசாமி செட்டியார் தங்கப் பதக்கம். ஏ.எல். முதலியார் பரிசு, ராவ் சாஹெப் என் முருகேச முதலியார் பரிசு,

புதுதில்லி இந்திய மண்ணியல் கழகத்தின் முனைவர் ஆராய்ச்சிக்காக தென்மண்டல விருது (1996).

கல்வி மற்றும் ஆராய்ச்சியில் பெண் சாதனையாளர் விருது 2002, இன்றைய மங்கை அமைப்பாளர்கள் கோவை.

அறிவியல் நகரம் சென்னையின் இளம் மகளிர் விஞ்ஞானி விருது 2002 ஆகிய விருதுகள் மற்றும் பரிசுகள் பெற்றுள்ளார்.

Dr. R. சாந்தியின் கணவர் திரு. E. கந்தசாமி, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், சாங்கயம்பாளையத்தைச் சேர்ந்தவர், பேங்க் ஆப் இந்தியா கோடம்பாக்கம் கிளை, சென்னையில் துணை மேலாளராகப் பணிபுரிகிறார். மகன் செல்வன் S.K. ஷியாம் கோவை, ஸ்டேன்ஸ் பள்ளியில் பயின்று வருகிறார்.

நமது வேளாண் பெரு மக்களுக்குப் பயன்படும் வகையில் ஆராய்ச்சி செய்து வேளாண்மை தொழிலில் அறிவியல் நோக்குடன் சாதனை கண்டு பல்வேறு விருதுகள் பெற்ற கொங்கு நாட்டு இளம் மகளிர் விஞ்ஞானி Dr. R. சாந்தி அவர்களைப் பாராட்டி "கொங்கு சாதனையாளர்" விருதினை வழங்குவதில் சங்கம் பெருமையடைகிறது.

# கொங்கு மாமணிகள்

"சூரியனே அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்" (The Sun never sets in British Emipire) என்று சொல்லப்பட்டு வந்தது. ஆனால், நம் இந்திய நாடு சுதந்திரம் பெற்றபின், காலனி ஆதிக்கத்தில் அடிமைப்பட்டுக்கிடந்த பெரும்பாலான நாடுகள், ஒவ்வொன்றாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெற்று விட்டதால் மேலே சுட்டிக்காட்டப்பட்ட கூற்றுக்குத் தற்போது இடமில்லாது போயிற்று.

நமது பாராத நாடு சுமார் **300** ஆண்டு காலம் ஆங்கில ஆட்சியில் அடிமைப்பட்டுக்கிடந்தது. சுமார் நூறு ஆண்டுகால விடுதலைப் போராட்டத்துக்குப் பின் **1947**ல் சுதந்திரம் பெற்று தற்போது **56** ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. சுதந்திரப் போரட்டத்தில் அகில இந்தியா முழுவதும் பல்லாயிரக்கணக்கானோர் சொத்து சுகத்தை இழந்து சொல்லொணாத் துயரம் அடைந்தனர் என்பது வரலாறு சொல்லும் பாடமாகும்.

போற்றத்தகு அச்சுதந்திர வேள்வியில், நம் கொங்கு வேளாளர் இனப் பெருமக்களும் பெருமளவில் பங்கேற்று, பல இன்னல்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள். நமது கொங்கு நண்பர்கள் சங்கம் வெள்ளி விழா காணும் இத்தருணத்தில் அவர்களைப்பற்றி நினைவுகூர்தல் நமது கடமை எனக் கருதிடுவோம்.

### தீரன் சின்னமலை

ஈரோடு காங்கயம் பகுதியை ஆண்டு வந்த கரியான் சர்க்கரை மரபில் உதித்த தீர்த்தகிரியே பின்நாட்களில் "தீரன் சின்னமலை" என்று அழைக்கப்பட்டார். பழைய கோட்டைக்குப் பக்கத்திலுள்ள மேலப்பாளையத்தில் நான்கு சகோதரர்களுடன் பிறந்தார்.

அப்போது கொங்கு நாடு மைசூரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. ஹைதர் அலியின் மகன் திப்பு சுல்தான் ஆட்சிக்காலத்தில் கொங்கு நாட்டுப் பகுதியிலிருந்து வசூலிக்கப்பட்ட வரிப்பணம் மைசூருக்குச் சென்றதை வழிமறித்துத் தடுத்துப் பறித்து சிப்பாய்களைத் துரத்திவிட்டார். அவர்கள், மன்னருக்கு என்ன பதில்

சொல்வது என்று கேட்டதற்கு, தீர்த்தகிரி தைரியமாகவும், விநயமாகவும் “சென்னிமலைக்கும், சிவன் மலைக்கும் இடையில் உள்ள சின்னமைலை பறித்துக் கொண்டது என்று போய்ச் சொல்லுங்கள்” என்றார். அதுமுதற்கொண்டு “தீரன் சின்னமலை” என்று அழைக்கப்படலானார்.

இந்தச் சம்பவத்தின் மூலம், தீரன் சின்னமலையின் வீரத்தையும், சுதந்திர மனப்பான்மையையும் அறிந்த திப்பு சுல்தான், இவருடன் நட்பு பாராட்டி இவரைத் தனது படையில் சேர்த்து பயிற்சியளித்துப் பின்னர் ஒரு படைப்பிரிவின் தளபதியாக்கினார். சின்னமலை கொங்கு நாட்டு இளைஞர்களைத் திரட்டி பலம் கொண்ட சேனையாகப் பெருங்கினார். கொங்கு நாட்டுப் பாளையக்காரர்களை எல்லாம் ஒருங்கிணைத்து வெள்ளையரை எதிர்க்கும் வீர அணியொன்றைத் திரட்டினார். சென்னி மலைக்கு அருகில் நொய்யலாற்றின் கரையில் ஓடாநிலையில் எஃகு போல உறுதியான கோட்டை கட்டி அதிபதியாய் விளங்கினார். “கோவை கோன்” என்று எல்லோராலும் கொண்டாடப்பட்டார்.

திப்புவுக்கும், வெள்ளையருக்கும் இடையே நிகழ்ந்த மைசூர் போர்களின் இறுதியில் வெள்ளையருக்கே வெற்றி கிட்டியது. அதனால் மைசூர் ஆட்சிக்குட்பட்டிருந்த அனைத்துப் பகுதியும் வெள்ளையர் வசமான போதிலும், தீரன் சின்னமலை நிர்வாகத்துக்குட்பட்டிருந்த கோவை பகுதியை மட்டும் அவர்களால் கைப்பற்ற முடியவில்லை. அதனால் வெள்ளையருக்கு சிம்ம சொப்பனமாக விளங்கினார்.

சென்னையிலிருந்து மலையாள (கேரளா) பகுதிக்குக் குறுக்கு வழியாகச் செல்வதென்றால் கோவை வழியாகத்தான் செல்ல வேண்டும். சங்ககிரி கோட்டையிலிருந்து கோவை வழியாகச் செல்ல முயன்ற வெள்ளையரின் படையை மூன்று முறை தடுத்து நிறுத்திப் பொராடி வெற்றி கண்டார். நேர்மையாகப் போரிட்டு இவரை வெற்றி கொள்ள முடியாது என்ற நிலைக்கு ஆளான பரங்கியர் சூழ்ச்சியும், சதியும் செய்து தீரன் சின்னமலையைக் கைது செய்து சிறையிலிட்டுப் பின் தூக்கிலிட்டனர். இவர் கைதானார் என்றதை அப்போதைய வைஸ்ராய் வெல்லஸ்லி ஆரம்பத்தில் நம்ப மறுத்தாராம். அந்த அளவுக்கு அசகாயச் சூரராக விளங்கியிருக்கிறார்.

வெள்ளைப் பரங்கியரை எதிர்த்த முதல் தமிழன் என்று பெருமைக்குரியவர் நமது கொங்கு இனத்தைச் சேர்ந்த தீரன் சின்னமலைதான் என்றால் நமக்குப் பெருமிதம்தான் அல்லவா ? அவரது நினைவைப் போற்றும் வகையில் சென்னை கிண்டியில் நிறுவியுள்ள அவரது சிலைக்கு நமது கொங்கு நண்பர்கள் சங்கம் சார்பாக ஆண்டு தோறும் அவர் பிறந்த நாளன்றும், நினைவு நாளன்றும் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி வருவதோடு அதனை நல்லமுறையில் பராமரித்தும் வருகிறோம். அவரது நினைவு நாள் ஆடிப் பதினெட்டாம் பெருக்கன்று ஆகும். அந்தத் தினத்தை தமிழக அரசு விடுமுறை நாளாக அறிவிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து அதற்கான அறிவிப்பு பெறத் தொடர்ந்து முயற்சித்து வருகிறோம்.

## திரு. கோவை அய்யாமுத்து

"அய்யாமுத்து அயர்வறியாத உழைப்பாளி" - மகாத்மா காந்தி.

"அய்யாமுத்து என்றால் கதர் ; கதர் என்றால் அய்யாமுத்து" - இராஜாஜி.

"அய்யாமுத்து ஒரு ஹிட்லர்" - மதுரை டி.கல்லுப்பட்டி காந்தி கிராம நிறுவனர் ஜி. இராமச்சந்திரன்.

இவ்வாறெல்லாம் புகழாரம் பெற்ற திரு. கோவை அய்யாமுத்து அவர்களும், அவரது துணைவியார் திருமதி கோவிந்தம்மாள் அவர்களும், இந்திய விடுதலைக்கும், கதர் இயக்கத்துக்கும் ஆற்றியுள்ள தன்னலமற்ற சேவை அளவிடற்கரியன.

**1898** ஆம் ஆண்டில் கோவை மாநகரில் கொங்கு வேளாளர் இனத்தில் மிகச் சாதாரண உழைப்பாளர் குடும்பத்தில் பிறந்த அய்யாமுத்து தேசப்பிதா மகாத்மா காந்தியின் அஹிம்சா வழி அறப்போராட்டத்திலும், அதன் அங்கமான கதர் இயக்கத்திலும், துணைவியாரோடு தன்னையும் ஐக்கியப்படுத்திக் கொண்டு தன்னலமற்ற சேவை புரிந்தவர். இவர் சிறந்த எழுத்தாளராகவும், பத்திரிக்கை ஆசிரியராகவும், பேச்சாளராகவும், திரைக்கதை ஆசிரியராகவும், பன்முக ஆற்றல் பெற்ற சிறந்த நிர்வாகியாகவும் திறம்படப் பணியாற்றிய ஒப்பற்ற தேச பக்தராகத்

திகழ்ந்தார்.

புஞ்சைப் புளியம்பட்டி பகுதியில் கள்ளுக்கடை மறியலில் தீவிரமாக ஈடுபட்டு, சுமார் பத்து மைல் சுற்றளவில் கள் இறக்க மரம் இல்லாது செய்து, கள்ளுக்கடை ஏலம் எடுத்தவர்களைத் திணற அடித்தவர். சுதந்திரப் போராட்டத்தில் தீவிரப் பங்கேற்றதற்காகப் பலமுறை சிறைவாசம் அனுபவித்தவர். மது உண்ணாமை, தீண்டாமை அகற்றல், மூடப் பழக்கங்களை முறியடித்தல் போன்ற நிர்மாணப் பணிகளிலும் சிறப்பாகத் தொண்டாற்றினார். இராஜாஜி, தந்தை பெரியார் ஆகிய இருவரின் நண்பராகவும் விளங்கினார். இந்திய விடுதலைப் போரின் ஒப்பற்ற தியாகியான "அஞ்சாநெஞ்சன் கோவை அய்யா முத்து" புகழ் ஓங்குக.

## திரு. சி. சுப்பிரமணியம்

கோவை பொள்ளாச்சி வட்டம், செங்குட்டப் பாளையம் கிராமத்தில் திரு. சிதம்பரக் கவுண்டரின் மகனாகப் பிறந்த இவர் சிறந்த சிந்தனையாளர். ஆன்மீக வழிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் திருப்பாராய்த்துறை இராமகிருஷ்ணா தபோவனத்தின் நிறுவனரான சுவாமி சித்பவானந்தா அவர்கள் இவரது சித்தப்பா ஆவார் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

"சி.எஸ்." என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப் பெற்ற திரு.சி.சுப்பிரமணியம் அவர்கள், கல்லூரியில் படிக்கும்போதே விவேகானந்தரின் உரைகளால் ஊக்கம் பெற்று, காந்தியடிகளின் கருத்தால் சிந்தனை செய்யும் ஆற்றல் பெற்றவரானார். தான் படித்துப் பட்டம் பெற்ற வழக்கறிஞர் ஆன போதிலும், இந்திய நாட்டின் விடுதலைக்கு உழைத்திட வேண்டும் என்ற உறுதிப்பாட்டினை மேற்கொண்டார்.

1932 ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு மறியல் செய்ததற்காக முதன் முதலாக சிறை சென்றார். அதனைத் தொடர்ந்து 1941, 1942ல் தமிழகம் கல்வியிலும், தொழில் வளர்ச்சியிலும் முன்னேற்றம் பெற்றது. பின்னர் மத்திய அரசின் நிதி, கன ரகம், விவசாயம் ஆகிய துறைகளின் அமைச்சராகப் பணியாற்றி முத்திரை பதித்தவர். விவசாயத்துறை அமைச்சராக இருந்த காலத்தில் பசுமைப் புரட்சி ஏற்படுத்தி உணவுப் பஞ்சத்தை ஒழித்தவர்.

இவருடைய ஆழ்ந்த சிந்தனை, அரிய கருத்துக்களை உணர்ந்த பல வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் இவரை உரையாற்ற அழைத்து கௌரவித்துள்ளன. மகாராட்டிர ஆளுநராக நியமிக்கப் பெற்று பணியாற்றி ஓய்வு பெற்றபின் சென்னையில் அமரத்துவம் எய்திய அஞ்சா நெஞ்சன் சி.எஸ். அவர்களுக்கு இந்திய நாடே கண்ணீர் அஞ்சலி செலுத்தியது. இது போன்ற புகழுக்குரியவர் நம்மவர் என்பதை எண்ணிப் பெருமிதம் கொள்வோம்.

## டாக்டர் பி. சுப்பராயன்

முந்தைய சேலம் மாவட்டம் தற்போது நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், குமாரமங்கலம் ஜமீன் குடும்பத்தைச் சேர்ந்தவர் டாக்டர் வி. சுப்பராயன் ஆவார். இவரது தந்தையார் குமாரமங்கலம் ஜமீன்தார் திரு. பரமசிவ கவுண்டர் கொலை செய்யப்பட்டதால், ஜமீன் நிர்வாகத்தை பிரிட்டிஷ் அரசே பொறுப்பேற்றுக் கொண்டு, சிறு வயது முதற்கொண்டு இவரை இங்கிலாந்துக்கு அழைத்துச் சென்று அங்கேயே கல்வி கற்கவும் ஏற்பாடு செய்தது.

குமாரமங்கலம் என்ற ஜமீன் பெயரே இவருக்குப் பின்வந்த சந்ததியினர் பரமசிவம் குமாரமங்கலம்; மோகன் குமாரமங்கலம்; ரங்கராஜன் குமாரமங்கலம் என்று அழைக்கக் காரணமாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. சட்டப்படிப்பு முடிந்து இந்தியா திரும்பியதும் தேசப்பிதா காந்தி அண்ணலின் சுதந்திர இயக்கத்தில ஈர்க்கப் பெற்று, அதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். அந்தக் காலத்திலேயே கலப்பு மணம் செய்து கொண்டு புரட்சி செய்தவர். இருப்பினும், தூரன் குலத்தைச் ரேந்தவரான இவர், குலதெய்வம் குமாரமங்கலம் பொன்காளியம்மன் மற்றும் மோழியப்பள்ளி அண்ணன்மார் ஆகிய திருக்கோவில்களுக்குத் திருப்பணிகள் செய்துள்ளார். இவரைத் தொடர்ந்து இவரது குடும்பத்தாரும் தொடர்ந்து திருப்பணிகள் செய்து வருகிறார்கள்.

டாக்டர் சுப்பராயன் அவர்களும், துணைவியார் திருமதி பார்வதிபாய் அவர்களும் இந்திய சுதத்திரப் போராட்டத்தில் ஈடுபட்டுப் பலமுறை சிறை சென்றனர். சுதந்திரம் பெறுவதற்குமுன் தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா உள்ளிட்ட பகுதிகள் இணைந்த அப்போதைய “சென்னை இராஜதானி” (மெட்ராஜ் பிரசிடென்சி) யில் அமைந்த இடைக்கால காங்கிரஸ் அமைச்சரவையில் பிரதம மந்திரியாக செயல்பட்டார்.

இப்போதைய முதல் மந்திரி பதவி என்பது அப்போது "பிரதம மந்திரி" என்றுதான் அழைக்கப் பெற்றது.

இந்தியா சுதந்திரம் பெற்றபின் அப்போதைய சென்னை இராஜதானியின் பிரதம அமைச்சரான திரு. ஓமந்தூரார் இராமசாமி ரெட்டியார் அமைச்சரவையில் உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பணியாற்றினார். அதன்பிறகு இந்தியக் குடியரசு ஆட்சியில், பண்டித நேருவின் அமைச்சரவையில் தபால் தந்தி அமைச்சராகப் பொறுப்பேற்று அத்துறையில் அநேக சீர்திருத்தங்கள் செய்து அரும்பணியாற்றினார். அதன்பிறகு, மராட்டிய மாநில ஆளுநராகப் பணியாற்றிக் கொண்டிருந்த சமயம், வெளிநாட்டுப் பயணம் சென்றிருந்த சமயத்தில் அமரத்துவம் அடைந்துவிட்டார்.

டாக்டர் சுப்பராயன் அவர்களைத் தொடர்ந்து மகன் மோகன் குமாரமங்கலமும், அதன்பின் பேரன் ரங்கராஜன் குமாரமங்கலமும் மத்திய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தனர். திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களுக்கு மத்திய அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தபோது, அப்போதைய ஜனாதிபதி வெங்கட்ராமன் அவர்கள், "You; your father and your grand father had the opportunity to serve as Central Ministers" என்று பதவி ஏற்பு வைபவத்தின் போதே குறிப்பிட்டுச் சொல்லிப் பெருமைப்படுத்திய பாரம்பரியம் மிக்க இவர்கள் நம்மவர்கள் என்பதை நம்மின இளைஞர் சமுதாயம் உணர்ந்து முன்னேற வேண்டும் என்பதே நம் பேரவா ஆகும்.

## திருச்செங்கோடு – புதுப்பாளையம் காந்தி ஆசிரமம்

இந்திய சுதந்திரப் போரில் தனி நபர்கள் அநேகர் போராடிக் கொண்டிருந்த போதே, நாட்டின் நிர்மாணப் பணிகளைக் கவனிக்க நாடு முழுவதும் பல அமைப்புகள் உருவாக்கப்பட்டன. அவற்றுள் ஒன்றுதான் புதுப்பாளையம் காந்தி ஆசிரமம்.

சிலப்பதிகாரத்திலும், பக்தி இலக்கியங்களிலும் "திருக்கொடி மாடச் செங்குன்றூர்" எனப் போற்றப்படுவதும், புராண இதிகாச காலம் தொட்டே புகழ்

மிக்கதும் திருச்செங்கோடு என்ற ஊர். அதன் அருகே உள்ள புதுப்பாளையம் என்னும் கிராமத்தில் 1925ம் ஆண்டு இராஜாஜியால் ஏற்படுத்தப்பட்ட காந்தி ஆசிரமம் இந்திய சுதந்திரப் போரில் பெரும்பங்கு வகித்தது. இந்த ஆசிரமம் அமைக்க முதன் முதலில் நான்கு ஏக்கர் நிலம் கொடுத்து உதவியவர் நம்மினத்தைச் சேர்ந்த புதுப்பாளையம் ஜமீன்தார் இரத்தின சபாபதி கவுண்டர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆசிரமம் அந்நாளில் காந்தி அடிகளின் விடுதலை இயக்கத்தோடு, மது விலக்கு, தீண்டாமை, கதர் கிராமக் கைத்தொழில் முதலான தேசிய நிர்மாணப் பணிகளிலும் தங்கனை ஈடுபடுத்திக் கொண்ட தேசத் தொண்டர்கள் அநேகருக்குப் புகலிடமாக விளங்கியது. இந்தியா முழுதும் இயங்கி வந்த இது போன்றவற்றுள் வார்தா ஆசிரமம், சபர்மதி ஆசிரமம் போன்றவற்றுக்கு இணையாகப் புகழுடன் விளங்கியது புதுப்பாளையம் காந்தி ஆசிரமும் ஒன்றாகும்.

நான்கு ஏக்கரில் துவக்கப்பெற்ற அந்த ஆசிரமம், படிப்படியாக வளர்ச்சி பெற்று தற்போது சுமார் முப்பது ஏக்கர் பரப்பளவில் கதர் கிராமக் கைத்தொழில் கழக நிர்வாகத்தில் தொடர்ந்து கிராமக் கைத்தொழில் வளர்ச்சியில் திறம்பட செயலாற்றி வருகிறது.

## “**கொடுமுடி கோ**கிலம்”

## திருமதி கே.பி. சுந்தராம்பாள்

ஈரோடு மாவட்டம் கொடுமுடியில் பிறந்து வளர்ந்த திருமதி கே.பி.சுந்தராம்பாள் தமது இளவயது முதலே வளமான குரலில் பாடி வந்ததால் “கொடுமுடி கோகிலம்” என்று அழைக்கப் பெற்றார். அந்தக் காலத்தில் புகழ்மிக்க நாடக நடிகர் கிட்டப்பா அவர்களுடன் நடிக்க வாய்ப்பு ஏற்பட்டு, பின்னாளில் அவரையே திருமணம் செய்து கொண்டார். மேடை நாடகங்களில் நடிக்கும்போதும், பாடும் போதும், இடையிடையே இந்திய விடுதலைக்குத் தூண்டும் தேசபக்திப் பாடல்களைத் தனக்கே உரித்தான கம்பீரமான குரலில் பாடி மக்களிடையே எழுச்சியை உண்டாக்கினார். அதற்காக இவரைப் பாராட்டி மகாத்மா காந்தி அவர்களே தமது கைப்பட இவருக்குக் கடிதம் எழுதியுள்ளார் என்பது

குறிப்பிடத்தக்கது.

இவர்களையெல்லாம் தொடர்ந்து கோவை, ஈரோடு, சேலம், நாமக்கல், தருமபுரி, நீலகிரி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய கொங்கு நாட்டுப் பகுதியில், சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைக்குச் சென்று அல்லல்பட்ட தியாகிகள் மொத்தம் 1978 பேர்களில் நம் கொங்கு வேளாளர் இனத்தைச் சேர்ந்தவர்கள் 372 பேர்.

மேற்குறிப்பிட்டவர்களைத் தொடர்ந்து, "அருட்செல்வர்" என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் பொள்ளாச்சி திரு. மகாலிங்கம் அவர்களின் தகப்பனார் திரு. நாச்சிமுத்து கவுண்டர்; அவரது தந்தையார் திரு. பழனி கவுண்டர் என மூன்று தலைமுறைகளைச் சேர்ந்தவர்கள் விடுதலை இயக்கத்தில் பங்கேற்ற பலருக்கும் பல வகைகளில் உதவி புரிந்து ஆதரித்து வந்தார்கள்.

நமது மூத்த வழக்கறிஞர் திரு.ஆர்.காந்தி அவர்களின் தந்தையார் ஈரோடு திரு. இராமசாமி கவுண்டர் அவர்களும், பெரியப்பா திரு. சென்னியப்ப கவுண்டர் அவர்களும் சுதந்திரப் போராட்டதில் ஈடுபட்டு மொத்தம் மூன்று ஆண்டுகளுக்கு மேல் சிறைவாசம் அனுபவித்தார்கள்.

சேலம் மாவட்ட நாட்டாண்மைக் கழகத் தலைவர்களாக இருந்த திருவாளர்கள் நாச்சியப்ப கவுண்டர், சுப்பிரமணிய கவுண்டர். காளியண்ண கவுண்டர் ஆகியோரும் சுதந்திரப் போராட்டத்திலும், காங்கிரஸ் பேரியக்கச் செயல்பாடுகளிலும் பெரும்பங்கு வகித்தார்கள்.

இவ்வாறு பல்லாயிரக்கணக்கானவர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகிப் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்து, புனிதமிக்க நமது பாரதநாட்டை, எல்லா துறைகளிலும் சிறந்து விளங்கிடும் முன்னேற்ற நாடாக உயர்த்திக் காட்டுவோம் என நாம் அனைவரும் சூளுரைப்போமாக.

– "கொங்கு நாட்டில் இந்திய சுதந்திரப் போராட்டம்" என்ற நூலிலிரந்து
தொகுத்தளித்தவர் : திரு. ஜே.பி. லியோ கணேஷ், பி.ஏ.,பி.எல்.,